கல்கி



KALKI 6.12.1959

30 காசு


பளபளப்பான
நீண்ட கரும்
கூந்தலழகுக்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
இப்பொழுது அழகான இப் புதுமாதிரி சீசாவில்
ரோஜா அல்லது மல்லிகை
மணத்துடன் கிடைக்கிறது.
ERASMIC
PERFUMED
COCONUT
HAIR OIL
ECHO. 4A—50 TM
லண்டனிலுள்ள இராஸ்மிக் கோ. லிட்., சார்பாக

கல்கி பொருளடக்கம்

டிசம்பர் 6, 1959

பீஷ்ம பிதாமகர் (தலையங்கம்)	காலா சுப்பாராவ்	...	3
நிகழ்ச்சிச் சித்திரம் (கார்ட்டூன்)	விஜி	...	5
கம்யூனிஸ்டுகள் விகம் வலை	...	...	6
மொழித் துவேஷம் வேண்டாம்!	...	...	6
தெய்வபக்தி நிறைந்த ராஜாஜி	பேராசிரியர் எம். ரத்னசுவாமி	...	9
அக்கப்போர் அப்பு	...	...	13
அற்புத வாழ்க்கை	டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர்	...	19
ஒரு இனிய நினைவு	நவரத்ன ராமராவ்	..	23
பாடலி	வேங்கடலட்சுமி	...	26
இலட்சிய புருஷர்	கே. எஸ். ராமசாமி சாஸ்திரி	...	32
இவர்கள் வியாச முனிவரா...	அனந்தராம தீக்ஷிதர்	...	32 இ
சாந்தி	சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்	...	34
வேங்கையின் மைந்தன்	அகிலன்	...	43
தேன்கூடு	ஆர்வி	...	54
மாமல்லத் தல சயனர்	தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்	...	65
கண்கள் உறங்காவோ?	மாயாவி	...	69
ஜீவ விளக்கு	அநுத்தமா	...	78
குழந்தை இலக்கியம் வளர்கிறது!	'சிறு'	...	87
அனந்தன் காதலி	மீனாட்சி ராமகிருஷ்ணன்	...	89

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

பின்னியின் கம்பளிகள் மூலம்

அவர்களை குளிரிலிருந்து காப்பாற்றுங்கள்



வெங்கடேஷ் வஸ்திராலயா விலிருந்து

வாங்குங்கள்.

ஹைகோர்ட்டுக்கு எதிரிலுள்ள பாங்க் ஆப் மைசூர் கட்டிடத்தில்

ஷோரூம்கள் நெ. 1 & 2

ஸெண்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில்

(நெ. 2 தம்பு செட்டி தெருவிலிருந்து மாற்றப்பட்டது)

ஷோரூம் நெ. 3.

எங்களிடம் மிக மிருதுவானதும் கட்டம் போட்டதுமான பின்னியின் கம்பளிகளும் போர்வைகளும் பல தரப்பட்ட ரகங்களில் கிடைக்கின்றன. உங்களுக்குப் பிடித்தமானவற்றை எங்கள் ஷோரூம்களிலிருந்து தேர்ந்தெடுங்கள். உங்களுக்குத் தேவையான காட்ஸ்வூல் துணிகளை எங்கள் ஷோரூம்கள் நெ. 1 லிருந்தும் நெ. 3 லிருந்தும் பெறலாம்.

VV/829a



மலர் 19 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற | விகாரி ௵
இதழ் 19 | தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | கார்த்திகை 20உ

பீஷ்ம பிதாமகர்

காஸா சுப்பாராவ்

காங்கிரஸ் ஆட்சியின் அதிக்கிரமத்திலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் விடுதலையே கிடையாதா என்று மக்கள் ஏங்கியிருந்தபோது, "முடியும், மக்களுக்கு விடுதலை உண்டு" என்று அபயக்குரல் கொடுத்து, மக்கள் இழந்த உற்சாகத்தை மீண்டும் தூண்டிவிட்ட தீரர் ராஜாஜி. இந்த ஒரு செய்கையே அவருக்கு மங்காத புகழை அளித்திருக்கிறது. கற்பனையிலும் மேற்கொள்ள முடியாத ஒரு கடினமான பணியைச் செய்ய முன் வந்துள்ள இந்தத் தீரருக்கு இணை வேறு எங்கு காணமுடியும்?

இந்தியாவுக்கு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை உண்டா என்று ஏங்கியிருந்த காலத்தில் காந்திஜி விடுதலை வாங்கித் தந்தார். அதற்குத் தேவையான பலத்தையும் ஆதரவையும் அவரே தேடிக்கொண்டார். இயக்கத்துக்கு அவரே தலைமை தாங்கி நடத்தினார்.

இந்தியாவில் இப்போது இரண்டாவது முறையாக விடுதலை இயக்கத்துக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தி வாங்கிக் கொடுத்த விடுதலை எதிர்பார்த்தபடி மக்களுக்குச் சுகவாழ்வை அளிக்கவில்லை. இந்த நிலைமைக்குக் காரணங்கள் இரண்டு. வெள்ளைக்காரர்களுக்குப் பின்னால் ஆட்சியை மேற்கொண்ட காங்கிரஸ் சர்க்கார் பதவி மோகம் கொண்டு, தங்களை மென்மேலும் பலப்படுத்திக்கொள்ளுவதிலும், மக்களின் சுதந்திரத்தை ஒவ்வொன்றாகப் பறிப்பதிலுமே நாட்டங் கொண்டனர். இரண்டாவதாக, அதிகாரத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளும் முயற்சியில் நீதி உணர்ச்சியை மறந்து விட்டனர். மக்களின் நலனைக் கருதாது, பலபேர் சேர்ந்து எது வேண்டுமென்று கூச்சலிடுகின்றனரோ அதுவே அரசாங்கத்தின் கொள்கையாக மாறியது. இதற்கு உறுதுணையாக, சர்க்கார் சலுகைகளும், வகுப்புவாதங்களும் மலிந்து விட்டன. இதன் உண்மை சொரூபத்தை மறைக்க சோஷலிஸம் என்ற பெயரும் சூட்டப்பட்டது. இந்த நேரு - சோஷலிஸத்தில் தனி மனிதனின் சுதந்திரம் மறைந்து விட்டது. தனி மனிதனுடைய சொத்துக்கள் பறிபோகும் நிலையும் ஏற்பட்டுவிட்டது. சர்க்காரின் தலையீடும் அதிகாரமும் ஓங்கி விட்டன. மக்களின் வாழ்க்கையே நாளுக்குநாள் கஷ்டமாகிக் கொண்டு வருகிறது. ஆளும் கட்சியின் நல்லுறவு இல்லாவிட்டால் சுகவாழ்வு வாழமுடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையினால்தான் இப்போது இரண்டாவது விடுதலை இயக்கத்துக்கு அவசியம் ஏற்பட்டுள்ளது.

அந்நியர்களிடமிருந்து அரசுரிமையை மீட்பதைக் காட்டிலும், நம்முடைய சொந்த சர்க்காரிடமிருந்து தனி மனிதனின் சுதந்திரத்தைக் காப்பது மிகவும் கஷ்டமானது.

காந்திஜியின் உண்மையான வாரிசு ஒருவர் உண்டு என்றால் அவர் ராஜாஜிதான். ராஜாஜிக்கு எதிராக நிற்கும் சக்திகள் எண்ணிக்கையிலும் அதிகம், பலத்திலும் அதிகம். மகாத்மா பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நடத்திய விடுதலை இயக்கத்தின்போதும் அவருக்கு எதிராக நின்ற சக்திகளும் அதிகமாகத்தான் இருந்தன. ஆனாலும் காந்திஜி முடிவில் வெற்றியே அடைந்தார். ராஜாஜியும் வெற்றியடைவார் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய மனோதிடமும், அறிவு நுட்பமும், செயலாற்றும் திறனும் ஒருபுறம் இருந்தாலும், அவருடைய சீலமும், தெய்வபக்தியுமே அவருடைய வெற்றிக்கு முக்கியமான அறிகுறிகள். துராசையும் பேராசையும் கொண்ட ஆளும் கட்சியின் பிடியில் அகப்பட்டு அடிமைகள் நிலைக்கு வந்துவிட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க நீதி உணர்ச்சியையும் நன்னெறியையும் ராஜாஜி துணையாகக் கொண்டிருக்கிறார்.

தர்மமே அவருடைய தலைமையில் புனர் வாழ்வெய்தி உள்ளது. அரசியலில் தர்மத்துக்கும் இடமுண்டு என்பதை ராஜாஜி வற்புறுத்தி வருகிறார். தர்மம் எல்லோருக்கும் நீதி வழங்கும். லஞ்சம், ஊழல், சலுகைகள், பேராசை, துராசை, பதவிப் பித்து முதலிய எல்லாக் குறைகளையும் நிவர்த்தி செய்ய வல்லது தர்மம் ஒன்றுதான்.

அரசியலில் பிரசாரத்துக்கும் உண்மைக்கும் வேற்றுமை இருப்பது போல் தர்மத்தில் பாகுபாடுகள் கிடையாது. பொய், பித்தலாட்டங்களுக்குத் தர்மத்தில் இடமே இல்லை. சத்தியமும் தர்மமும் இணைந்தே செயல் புரிகின்றன. எல்லா சமயங்களும் இவ்விரண்டையும் ஒன்றாகவே போதிக்கின்றன. இவ்விரண்டுக்கும் மேலான சக்தி இவ்வுலகில் வேறு இல்லை.

ஆனால் தர்மத்தைப் பற்றிப் பேசவோ, பிரசாரம் செய்யவோ எல்லோராலும் முடியாது. அதற்குத் தகுதி வேண்டும். தனித் தலைவர் வேண்டும். தர்மத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டி, அதனுடைய மின்னும் பிரகாசத்தில் எல்லாச் சிறுமைகளும், சுயநலங்களும் அறவே தீய்ந்து கருகி, புடம் போட்ட தங்கமெனத் துலங்கும் ஒருவரால்தான் தர்மத்தையும் சத்தியத்தையும் பற்றிப் பேச முடியும். சத்தியமும் சீலமும் சுடர் விடும் அத்தகைய தலைவர் ராஜாஜி. காந்திஜியின் சீடர்கள் என்று சொல்லிக் கொண்டு உலவும் ஆஷாடபூதிகளிடமிருந்து நமது ஜனநாயகத்தைக் காப்பாற்றும் மகத்தான பணி ராஜாஜியின் மீது சுமந்திருப்பது தெய்வச் செயல் என்றே எண்ண வேண்டும்.

ராஜாஜியைப் பற்றி எழுதும்போது பீஷ்ம பிதாமகரின் நினைவுதான் வருகிறது. பாரதப் போரில் அம்புப் படுக்கையில் அமர்ந்து கிருஷ்ண பரமாத்மாவை உள்ளத்திலிருத்திக் கொண்டிருக்கையில், யுதிஷ்டிரருக்கு உலக க்ஷேமத்தின் பொருட்டு ராஜ தர்மம் முதலிய மேலான தர்மங்களையெல்லாம் உபதேசித்தார் பீஷ்மர். தர்மோபதேசம் செய்யச் செய்ய பீஷ்மருக்கு உடல் வலிமையும் ஆத்ம சாந்தியும் ஏற்பட்டன. பீஷ்ம பிதாமகருக்கு இணையான நிலையிலிருக்கும் நமது ஒப்பற்ற தலைவர் ராஜாஜியும் அவ்வாறே தர்மத்தையும் சத்தியத்தையும் பரப்புவதிலும் ராஜ தர்மத்தைப் போதிப்பதிலும் ஆத்ம சாந்தியடைகிறார் போலும்!

பொதுவாகவே மக்களிடம் சீலம் குறைந்துள்ள இந்தச் சமயத்தில் ராஜாஜி தலைமை தாங்க முன்வந்துள்ளது பாரத மக்களின் பாக்கியம். மனித வழக்கில், எண்பதாண்டில் எந்த மனிதனும் சக்தி ஒடுங்கினவனாகவே கருதப்படுவான். ஆனால் ஆண்டவனுடைய செயலின்படி நடக்கும் ராஜாஜிக்கு வலிமைக்கு எல்லையே இல்லை; அவர் ஆண்டவனின் கருவி. ஆண்டவனுடைய பணியில் ஈடுபட்டிருக்கிறார். அவருடைய எண்பத்தோராவது பிறந்த நாளில் சிந்தனையாற்றல் பெற்ற மக்கள் அனைவருடைய நம்பிக்கையையும் பெற்று, தமது வாழ்நாளில் மகோன்னதமான வெற்றி இனிமேல்தான் கிடைக்கப் போகிறதென்ற தளராத நம்பிக்கையுடன் பிரகாசிக்கிறார். அவர் மேற்கொண்ட பணி சீக்கிரமே வெற்றிபெற வேண்டுமென்றும், அதற்குப் போதிய உடல் வலிமையை ஆண்டவன் அருள வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டு, இப்புனித நாளில் கல்கி, சுயராஜ்யா பத்திரிகைகளின் லட்சக்கணக்கான வாசகர்கள் சார்பில், நமது ஒப்பற்ற தலைவருக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


வளர்ந்து வரும் சுதந்திரக் கட்சி

என்னுடைய சமீபத்திய தென்னிந்திய சுற்றுப்பிரயாணத்தின் போது, கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ராஜபாளையம் முதலிய ஊர்களில் என்னை வரவேற்கக் கூடிய மாபெருங் கூட்டங்களைக் கண்டபோது, சுதந்திரக் கட்சிக்கு வரவர சக்திப் பெருக்கம் ஏற்படும் என்ற நம்பிக்கை ஊர்ஜிதமாயிற்று. கிராமப்புறங்களிலுள்ள ஆண்களும் பெண்களும் காங்கிரஸ் சோஷலிஸம் அறவே வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். நம் குடியானவர்கள் நில உடைமையிலோ, சாகுபடியிலோ அரசாங்கம் தலையிடுவதைச் சற்றும் விரும்பவில்லை.

நான் இந்தத் தடவை கண்டாற் போன்ற பெருங் கூட்டங்களை சுயராஜ்ய இயக்கத்தின் போது கூடக் கண்டதில்லை. முக்கியமாக, ராஜபாளையத்தில் கூடிய பெருங் கூட்டத்தில் பெண்கள் பெரும் பகுதியிருந்தனர். அவர்கள் அவ்வளவு பெருங் கூட்டமாக வந்ததே சர்க்காரின் விவசாயச் சட்டங்களையும், சோஷலிஸத் திட்டங்களையும் எல்லா வகுப்பாரும் ஒருமுகமாக எதிர்க்கின்றனர் என்பதை வெகு தெளிவாக எடுத்துக் காட்டியது. திருச்சிராப்பள்ளியில் இரண்டாவது முறையாகப் பொதுக் கூட்டத்தில் பேசினேன். இம் முறையும், முதல் தடவை வந்த கூட்டத்துக்குச் சற்றும் குறையாமலே மக்கள் பெருங் கூட்டமாக வந்து அரசாங்கத் திட்டங்களுக்குத் தங்களுக்குள்ள எதிர்ப்பைக் காட்டினர்.

இப்படி எங்கும் காணப்பட்ட குதூகலத்தைக் கண்டு அகமகிழ்ந்தேன். முக்கியமாக எல்லா வகுப்புகளையும் சேர்ந்த இளைஞர்கள் சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்குத் தீவிரமாக ஒத்துழைப்பதைக் கண்டு பெரிதும் உற்சாகமடைந்தேன்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி


"பல்லாண்டு கூறி வாழ்த்துகிறோம்"
1950
1959

கம்யூனிஸ்டுகள் வீசும் வலை

இந்தியக் கம்யூனிஸ்டுகள் எதைச் செய்தால் தாங்கள் இழந்த செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்திக் கொள்ளலாம் என்று பரபரப்படைந்து, "விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும்" என்று ஒரு சில கட்சிகளின் துணையோடு ஊர்வலங்களும் கூட்டங்களும் ஊர் ஊராக நடத்தி வருகிறார்கள். கேரளத்தில் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் பலத்தைப் பரீட்சை செய்து பார்க்கத் தேர்தல் நடக்கவிருக்கும் இந்த வேளையில் சீன விவகாரம் காரணமாக அவர்கள் ஒரே அடியாகச் செல்வாக்கு இழந்து போயிருப்பது, அவர்களுக்குக் கவலை தரக்கூடிய விஷயம்.

கம்யூனிஸ்ட் சீன இந்திய எல்லையில் புகுந்ததை இந்தியக் கம்யூனிஸ்ட்களால் சந்தேகமற, ஏகமனத்துடன் கண்டிக்க முடியாததால் அவர்கள் தேசாபிமானிகள் அல்ல என்று மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டு விட்டார்கள். சமீபத்தில் கல்கத்தாவில் இந்தியா-சீன விஷயமாக நடத்திய கிளர்ச்சிகளிலும் இந்த மனப்பான்மையைத்தான் அவர்கள் காட்டினார்கள். அதன் விளைவாகக் கம்யூனிஸ்டுகளிடம் ஒருவித அருவருப்பே மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதை விலை ஏற்றத் தடுப்பு ஊர்வலங்களும் கூட்டங்களும் சுலபமாகப் போக்கிவிடும் என்று கம்யூனிஸ்டுகள் மனப்பால் குடித்தார்களானால் அதைவிடப் பேதைமை வேறில்லை.

இன்று விலைவாசி இவ்வளவு உயர்ந்திருக்கிறது என்றால் அதற்குக் கம்யூனிஸ்டுகளும் ஒரு காரணம் என்பதை எவ்வளவுதான் முயன்றாலும் மூடி மறைக்க முடியாது. அவர்கள் போதிய உற்பத்தி பெருகுவதற்குள்ளாகவே, தொழிலாளர் சங்கங்களில் தங்களுக்குள்ள ஆதிக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைத் தூண்டிவிட்டு, உற்பத்திப் பெருக்குக்கு வழியில்லாமல் செய்து விட்டனர். உற்பத்தி குறைந்தால் விலைவாசிகள் ஏறாமல் என்ன செய்யும்? இதைத் தடுக்கக் கண்ட்ரோலும் கட்டுப்பாடும் வேண்டும் என்றார்கள். விலைவாசிகள் மேலும் உயர்ந்தன.

கம்யூனிஸ்ட் கட்சியினர் தாங்கள் இழந்த செல்வாக்கை மீட்டுக்கொள்ளக் கடைசிநிமிஷ முயற்சியாக ஆரம்பித்துள்ள விலை ஏற்றத் தடுப்பு ஊர்வலங்கள், கூட்டங்களில் மற்றக் கட்சிகளும் ஏமாந்து போய்ச் சேர்ந்துகொண்டிருப்பது பரிதாபம்! 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்பது போல் உள்ள கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளின் உண்மை உருவத்தை உணர வேண்டும்.

விலைவாசிகள் குறைய வேண்டும் என்றால் கம்யூனிஸ்டுகள் கூறும் சர்க்கார் கட்டுப்பாடுகள் அல்ல வழி. சர்க்கார் கட்டுப்பாடுகள் கறுப்பு மார்க்கெட்டைத்தான் வளர்க்கும்! விலைவாசிகளின் ஏற்றத்துக்குக் காரணம் வீண் செலவும் வரம்பு கடந்த செலவும் தவறான திட்டங்களும் அவற்றுக்கு என்று அச்சிடும் நோட்டுகளும். இதை உணராமல், கட்டுப்பாடு செய்யுங்கள் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதில் ஒரு பயனுமில்லை.

மொழித் துவேஷம் வேண்டாம்!

உண்மையைத் தைரியமாக எடுத்துப் பேசத் துணிச்சல் இல்லாதகாலம் இது. ஆனால் தருமபுர ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமண்ய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது பதவிக்கும் அந்தஸ்துக்கும் உகந்தமுறையில் உண்மையைத் துணிச்சலோடு பேசியிருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டி நன்றியும் வணக்கமும் தெரிவிக்க வேண்டும்.

"பண்டைக் காலத்திலிருந்து தமிழர்கள் சமஸ்கிருதத்துக்கும் தமிழ்மொழிக்குமிடையே வித்தியாசம் காட்டியதே கிடையாது. ஆகவே, 'ஸ்ரீ' 'திரு' உபயோகிப்பது பற்றிச் சண்டையும், கோவில்களில் அர்ச்சனைகளை சமஸ்கிருதத்தில் நடத்த வேண்டுமா அல்லது தமிழில் நடத்த வேண்டுமா என்ற சண்டையும் எதற்காக என்றே எனக்குப் புரியவில்லை. இச்சண்டைகளை நான் ஏற்பதற்கில்லை" என்று திருநெல்வேலியில் பேசியிருக்கிறார்.

தருமபுர ஆதீன கர்த்தர் சமீபத்தில் வடநாட்டில் கயிலாயம், மானஸரோவர் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று வந்திருக்கிறார். சைவம் இந்தப் பரந்த நாட்டில் இமயம் முதல் கன்னியாகுமரி வரை பரந்திருப்பதைக் கண்டு அவர் உள்ளம் நிரம்பி பூரிப்பதால்தான் 'எந்நாட்டவர்க்கும் இறைவனை' தெய்வத்தைத் தமிழ் மொழிக்குள் அடக்கி வைக்கப் பார்ப்பதைக் கண்டு அவர் வியக்கிறார்!

அர்ச்சனையிலிருக்கும் மொழிகள் எல்லாம் ஈசுவரனுடைய பெயர்கள். பெயர்கள் வடமொழியில் இருப்பதைத் தமிழ்ப்படுத்துவதில் ஒரு பயனும் இல்லை. ஈசுவரன், பரமேசுவரன் என்கிற பெயர்கள் வடமொழி. இதைப் போலவே அநேக பெயர்கள். இவற்றையெல்லாம் ஏன் மாற்ற வேண்டும்?

வடமொழி இன்று வழக்கில் இல்லாமலிருக்கலாம். ஆயினும் அது இன்றும் பல மொழி பேசும் பக்தி கொண்ட பாரத மக்களை இணைத்து வைக்கும் அற்புத சாதனம்! அதை இழக்கக் கூடாது.

துவேஷம் எந்த இடத்திலும் அறிவை மழுங்க அடிக்கிறது. வடமொழித் துவேஷம் தமிழ் மொழிக்கே தீங்கு விளைவிக்கிறது.

வடமொழியைத் துவேஷிக்காதீர்கள் என்று சொல்வதாலேயே ஒருவர் தமிழ்ப் பற்று அற்றவராகிவிட மாட்டார். தருமபுர ஆதீனம் தமிழுக்காகச் செய்துள்ள சேவை உலகம் அறியும். அவர் நடுநிலைமையில் நின்று உண்மையை எடுத்துரைத்திருப்பதை வடமொழி அன்பர்களும் தமிழ்ப் பற்றுடையவர்களும் காண வேண்டும்.

இரண்டு மொழிகளையும் பேண வேண்டும். ஒன்றை விட்டு ஒன்றைப் பேணினால் நஷ்டம் அடைவோம்.

வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம், சங்கீத ஆசிரியர்கள் தேவை

நல்ல சம்பளமும் இதர சௌகரியங்களும் உண்டு. சங்கீத டிப்ளோமாவோ அங்கீகரிக்கப்பட்ட சங்கீத கலாசாலை பட்டமோ அல்லது பெரிய வித்வான்களிடம் 7 வருஷ குருகுலவாசமோ பெற்றிருக்க வேண்டும். தவிர 3 வருஷத்திற்கு சங்கீத பயிற்சி அளிப்பதில் தேர்ச்சி இருத்தல் வேண்டும். சைகிள்விடத் தெரிவது அவசியம். தகுந்த நற்சாட்சி பத்திரங்களுடனும், ஸ்ரீ ஷண்முகானந்த சங்கீத சபா, புது டில்லி பெயரில் ரூ. 1/- போஸ்டல் ஆர்டருடனும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 25-12-1959க்குள் விண்ணப்பங்களை அனுப்பவும்.

SECRETARY

SREE SHANMUKHANANDA SANGEETHA SABHA (Regd.)

South India Club Auditorium - Reading Road - NEW DELHI-1

போன்: 55074 தந்தி: "RAJWAST"

கே. ஏ. ராஜா

வேஸ்ட் பேப்பர் வியாபாரி

காரியாலயம்: 64, ஆச்சாரப்பன் தெரு, சென்னை - 1
கிளை: 8, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை - 1
பிரிக்குமிடம்: 16, புட்டி சாஹிப் தெரு, சென்னை - 1


கீழ்க்கண்ட ஸ்தாபனத்திற்கு மூலப்பொருள் சப்ளை செய்பவர்கள்

மெஸர்ஸ். ரோடாஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

டால்மியாநகர், பீஹார்

உபயோகமற்ற காகிதங்களை விற்பனை செய்ய விரும்பும் காரியாலயத்தினரும் மற்றவர்களும் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்

எமது நியாயமான விலையைக் கருதி எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்



இந்தியாவில் ஏராளமான


சீட்டுக் கட்டுகள்

தயாரிப்பாளர்கள். அனைவருக்கும் ஏற்ற பற்பல ரகங்கள் வசீகரமான அனேகவித டிசைன்களில் கிடைக்கும்

விற்பனை விவரங்களுக்கு எழுதவும்

THE FOFULAR FINE ART LITHO WORKS PRIVATE LTD., Tardeo Road, BOMBAY-7

ஏஜண்டுகள் வி. தி. ராமலிங்கம் அண்டு சன்ஸ், 2/422, தங்கசாலைத் தெரு, சென்னை - 1


டிசம்பர் 4௳ முதல்
சென்னை மற்றும் தென்னுடெங்கும்
உணர்ச்சி மிகுந்த குடும்பச்சித்திரம்
மாடர்ன் தியேட்டர்ஸ்
எங்கள் குலதேவி
டைரக்ஷன்: A. சுப்பராவ் • சங்கீதம்: K.V. மஹாதேவன்
பாலாஜி • பண்டரிபாய் • மைனாவதி • சூர்யகலா • வி. ஆர். ராஜகோபால்
BALU BROS

தெய்வபக்தி நிறைந்த ராஜாஜி

பேராசிரியர் எம். ரத்தினசுவாமி

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் தெய்வ பக்தி நிறைந்தவர். அரசியல் விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதுடன், தர்மத்தையும் பக்தியையும் கூடவே அவர் வளர்த்து வருகிறார். பக்தியூட்டும் உபந்நியாசங்களைக் கேட்பதிலும், அவற்றில் பங்கு கொள்வதிலும், தனிமையில் சமய நூல்களை ஆழ்ந்து படிப்பதிலும், அவரைப் போலவே பக்தியில் ஆர்வமுள்ளவர்களுடன் சேர்ந்து இதிஹாஸங்களைப் படிப்பதிலும் அவருக்குப் பிரியம் அதிகம். வாழ்க்கையில் தருமமும் பக்தியும்தான் மிகவும் முக்கியமானவை என்பது ராஜாஜியின் துணிபு. அவருடைய அரசியலுக்கு அவருடைய சமயப்பற்றுத்தான் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பது. அதுதான் அவருடைய அரசியல் கருத்துக்களை உருவாக்குகிறது.

ஐந்தாண்டுகளுக்கு முன்பே அரசியலிலிருந்து அவர் விலகி விட்டார் என்று எண்ணியபோது அவரை மீண்டும் அரசியலில் புகும்படி செய்தது தர்மத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்ச்சிதான். அப்படி அவர் பாதுகாக்க முன்வந்த தர்மம், அவருடைய பிறப்பினுல் அவருக்கு உரித்தான ஹிந்துமத தர்மம் மட்டுமல்ல, எல்லா சமயங்களுக்கும் பொதுவான மானிட தர்மம். எல்லாச் சமூகங்களுக்கும் எல்லா உலகத்தினர்களுக்கும் பொதுவான தர்மத்தில் அடங்கியுள்ள விஷயங்கள் பல. நீதி உணர்ச்சி, நீதியைப் பரிபாலிப்பது. அநீதியைத் தடுப்பது. பொதுக் காரியங்களிலும் சொந்த வாழ்க்கையிலும் மனச்சாட்சிக்கு முக்கிய இடமளித்து அதன்படி நடப்பது, சமூகப் பொருளாதார அரசியல் வாழ்க்கையில் ஆன்மச்ரேயசுக்கும் தரும நியாய உணர்ச்சிக்கும் ஒப்ப நடப்பது—முதலிய யாவும் மானிட தர்மத்தில் அடங்கியது. பணக்காரன்—ஏழை, எஜமானன்—ஊழியன், முதலாளி—தொழிலாளி, பெரியவன்—சிறியவன் என்ற வர்க்கத்தினர்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஒரே மாதிரியாக நீதி வழங்க வகை செய்வது தருமந்தான். அத்தகைய தர்ம உணர்ச்சியை நம்முடைய உள்ளங்களில் வளர்க்கவே அவர் அரசியலில் இப்போது மறுமுறை புகுந்திருக்கிறார்.




பேராசிரியர் எம். ரத்னசுவாமி


சுதந்திரக் கட்சியில் தனி மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவமும், தனி மனிதனுடைய உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்வமும், ராஜாஜி மனிதத் தன்மைக்கு எவ்வளவு உயர்ந்த இடம் அளித்துள்ளார் என்பதைக் காட்டுகின்றன. தனி மனிதன் ஒவ்வொருவனுடைய மனிதத்தன்மையும், ஆண்டவனுடைய தெய்வத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு அதனுடைய சின்னமாகவே அமைந்துள்ளது. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாருக்குத் தெய்வ பக்தியில் அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. தனித் தனி தெய்வங்களிலும், அவைகளிடம் பக்தி செய்வதிலும் நம்பிக்கை உள்ளவர். ஆகவே அவரால் அமைக்கப்பட்ட கட்சிக்கு முஸ்லிம்களின் ஆதரவும், கிறிஸ்தவர்களின் ஆதரவும் அமோகமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயம். எங்கும் சந்தேகங்களும் கஷ்டங்களும் நிறைந்தும், நிச்சயமற்ற தன்மையுடன் போகவதுமே சாதாரணமாகக் காணப்படும் தற்போதையச் சூழ்நிலையில், வாழ்க்கைக்கு உறுதியான ஊன்றுகோலாக சமயப் பற்றில் நம்பிக்கையுள்ள மக்கள் அனைவருக்கும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரைத் தலைவராகக் கொண்ட ஒரு கட்சி ஏற்பட்டுள்ளது அவர்களுடைய அதிருஷ்டம்.

பம்பாய் தமிழ்ச் சங்கம்

பம்பாயில் வாழும் தமிழர்கள் ஒன்றுசேர்ந்து தமிழ்ப் பண்பாடும் மொழியும் கலைகளும் வளர பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தை நிறுவியுள்ளார்கள். தங்களுக்கென ஒரு மண்டபமும் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக நாடக நடன விழாக்கள் நடத்திக் கிடைத்த தொகையோடு மேலும் கணிசமான தொகைக்கு வழி வகை செய்து மண்டபம் நிறுவியிருக்கிறார்கள். வாங்கியவர்களிடம் திருப்பித் தரவேண்டிய தொகை சிறிது உள்ளதால் இந்த வருஷமும் கட்டட நிதிக்காக நாடக நடன விழா டிசம்பர் 5—12உ வரை நடைபெறுகிறது.

திரு எஸ். வி. சகஸ்ரநாமம் தமது சேவா ஸ்டேஜ் குழுவினருடன் பம்பாய் சென்று, தேரோட்டி மகன், வாத்தியார் வடிவேலு, மல்லியம் மங்களம், புகழ்வழி, பாஞ்சாலி சபதம், பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம் ஆகிய நாடகங்களை நடத்தித்தர இசைந்துள்ளார். கமலா லக்ஷ்மண் நடனமும் நடக்கவிருக்கிறது. பம்பாய் தமிழ்ச் சங்கத்தாரின் அரிய முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறோம்.







தமிழ் ஜில்லாக்களில் ராஜாஜி

கும்பகோணத்தில் சுதந்திரக் கட்சியினர் ராஜாஜியை வரவேற்று ஆமோகமான கூட்டங்கள் நடத்தினர். கூட்டங்கள் நடத்தியதோடு சிறு நிதி உதவியும் புரிந்து மற்ற ஜில்லாவாசிகளுக்கும் வழிகாட்டினர்.


1. அன்புநாதபுரம் திரு பி. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் ராஜாஜியிடம் 'செக்'சமர்ப்பிக்கிறார். 2. பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்த மக்களின் ஒரு பகுதி. 3. பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு சாமித்துரைத் தேவர். 4. மாயூரம் திரு எஸ். அங்கப்பன் கூட்டுப்பண்ணைச் சாகுபடியின் தீமைகளை வன்மையாக எடுத்துரைத்தார். 5. தஞ்சை ஜில்லா சுதந்திரக் கட்சி ஊழியர்களின் கூட்டம். 6. குடந்தை சுதந்திரக்கட்சியின் தலை




















வர் திரு பழனிச்சாமி செட்டியார். 7. அய்யம்பேட்டை மக்களின் அமோக வரவேற்பு. 8. திருச்சி ஜில்லா பூர்வாங்க மகாநாடு நடைபெற்ற தேவர் மண்டபத்தின் முகப்புத் தோற்றம். 9. திருச்சி சுதந்திரக் கட்சியின் ஜீவநாடியான டாக்டர் காளமேகம். 10. திரு ராஜா சிதம்பரம் மகாநாட்டில் தீர்மானங்களைப் பிரேரேபித்தார். 11. வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு பொன்னம்பலக் கவுண்டரின் வரவேற்புரை. 12. தேவர் மண்டபத்தில் கூடியிருந்த பெருங் கூட்டம். 13. திருச்சி மகாநாட்டில் 12,000 ரூபாயை ராஜாஜியினிடம் டாக்டர் காளமேகம் சமர்ப்பிக்கிறார்.











ரிட்டயர்ட் ஸ்டேஷன் மாஸ்டர் (ஓங்கோல் ஸ்டேஷன்) திரு எம். சந்திரசேகரன் முதலியார் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி வைபவம் சென்னை, கோமளீசுவரன்பேட்டையிலுள்ள அவர் இல்லத்தில் 11-11-59 அன்று விமரிசையாக நடைபெற்றது. நண்பர்களும் சுற்றத்தாரும் வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஸ்ரீமத் பாகவதம் - ஹரிகதை

1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் தேதி புதன்கிழமை முதல் மேற்படி மாதம் 23-ம் தேதி புதன்கிழமை முடிய உடுமலைப் பேட்டை சர்தார் ரோடில் அமைத்திருக்கும் பந்தலில் ஸ்ரீமத் பாகவதம் ஹரிகதை ரூபமாக, **ஸ்ரீ எம்பார் விஜயராகவாச்சாரியாரவர்களால்**, பிரதி தினமும் மாலை 6 மணி முதல் 8-30 மணி வரை நடத்தப்படும்.

அனைவரும் வந்திருந்து கேட்டு பகவத் பிரசாதத்திற்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உடுமலை
25-11-59

S. **சௌரிராஜன்** B. A.
ஆர்கனைஸர்

அக்கப்போர் அப்பு

அப்பு: ஒரு கணக்குப் போடுகிறேன், சரிதானு என்று பார், குப்பு!

குப்பு: போடுங்கள், பார்க்கிறேன்!

அப்பு: கும்பகோணம் வரவு அறுபதினுயிரம்; அய்யம்பேட்டை இரண்டாயிரம் என்ன ஆயிற்று?

குப்பு: அறுபத்தி இரண்டாயிரம்!

அப்பு: இந்த அறுபத்திரண்டாயிரத்துடன் திருச்சி வரவு அறுபதினுயிரம். என்ன ஆயிற்று?

குப்பு: ஒரு லட்சத்து இருபத்து இரண்டாயிரம்!

அப்பு: இதோடு திருநெல்வேலி வரவு ஒரு லட்சத்தைச் சேர்த்தால்...?

குப்பு: இரண்டு லட்சத்து இருபத்தி இரண்டாயிரம்!

அப்பு: சங்கரன் கோவில் ஒரு நாலாயிரம்...உம்...கூட்டிக் கொள்.

குப்பு: கணக்கு சரிதான்...! இரண்டு லட்சத்து இருபத்து ஆறுயிரம்.

அப்பு: இன்னெரு ஐம்பதினுயிரத்தைச் சேர்த்து வரவு என்ன ஆகிறது?

குப்பு: இரண்டு லட்சத்து எழுபத்து ஆறுயிரம்.

அப்பு: மதுரை, இன்னும் சில இடங்களில்வரவு ஒரு இருபத்திநாலாயிரம். ஆக மூன்று லட்சம் வரவு. இல்லையா...இதோ கோவிந்தசாமியும் வந்து விட்டார்!

கோவி: மூன்று லட்சம் வரவு என்றீர்களே? அவ்வளவு ரூபாய் வரவு வந்ததா?

அப்பு: அதென்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள் என்னைப் பார்த்து? லட்சக் கணக்கில் பண வரவு கிடைக்க நான் என்ன ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ. என்று நினைத்து விட்டீரோ? கையிலே இந்தக் குடையைத் தவிர காலணு கிடையாது. மேலும், எனக்கு என்னத்துக்கு லட்சக் கணக்கில் இந்தக் காகித ரூபாய் நோட்டு?

கோவி: அப்படியானுல் மூன்று லட்சம் வரவு வந்ததாகக் கணக்கு கூறினீரே, அது என்ன?

அப்பு: அதுவா, கேளும்! போன வாரம் தமிழ் நாட்டிலே, குடந்தை, திருச்சி, நெல்லை, ராஜபாளையம் இந்த ஊர்களில் சுதந்திரக் கட்சிக் கூட்டங்கள் நடந்ததல்லவா? அடியேன் அப்பு அங்கேயெல்லாம் ஆஜராகி ஜனங்களின் உற்சாகத்தை நேரில் பார்க்கப் போயிருந்தேன். எல்லாக் கூட்டங்களிலுமாக மொத்தம் ஜனங்களின் வரவு என்னவென்பதைத் தான் குப்புவும் நானுமாகக் கணக்கிட்டுக் கொண்டிருந்தோம்.

கோவி: இப்படி லட்சக் கணக்கில் தமிழ் மக்கள் சுதந்திரக் கட்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டது, அவர்கள் எல்லோரும் விழிப்படைந்து விட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. காங்கிரஸ்காரர்களின் ஏமாற்று ஜாலங்கள் இனி தமிழ்நாட்டில்பலிக்காது!

அப்பு: ஒருகாலும் பலிக்காது. தமிழ் நாட்டில் காங்கிரஸ் சீட்டு செல்லாதென்ருல், நாடு முழுதுமே அது செல்லாது என்று தீர்மானித்துக் கொள்ளலாம். ஏனென்ருல்....

கோவி: தெரியும், தெரியும்; சொல்ல வேண்டாம். தேசத்திலேயே தமிழ் நாட்டிலேதான் காங்கிரஸ் சிறந்து காணப்படுகிறது என்று நேருஜி கூறினுரல்லவா? சுதந்திரக் கட்சிக் கூட்டங்களுக்கு ஆர்வமுடன் வந்த இவ்வளவு லட்சம் ஜனங்களையும் அவர் பார்த்திருந்தால் காங்கிரஸ் சிறப்பின் போக்கை அவர் புரிந்து கொண்டிருக்கலாம்.

அப்பு: ஏன்? காங்கிரஸ் சிறப்பின் போக்கிடைதையை அவர் அருப்புக்கோட்டைத் தேர்தல் முடிவிலிருந்தே தெரிந்து கொண்டிருப்பார் இந்நேரம்.

கோவி: அருப்புக் கோட்டைக்குப் போனுயோ நீ அப்பு?

அப்பு: நான் போகவில்லை. பொது மக்கள் தாங்களாகவே விழிப்படைந்து காங்கிரஸ் இனி அந்தப் பக்கம் தலைகாட்டாமல் செய்து விட்டார்கள்.

கோவி: இவ்வளவுக்கும் காங்கிரஸ் சார்பில் பிரசாரம் ரொம்பத் தடபுடலாக நடந்ததாகக் கேள்வி!

அப்பு: ராஜ்ய முதல் மந்திரி முதல் கடைசி மந்திரி வரையில் எல்லோரும் அங்கு முகாம் போட்டு, சூறவளி சுற்றுப் பிரயாணம் செய்தார்களாம். ஜீப்புகள் நூற்றுக்கணக்கில் சுற்றிக் கொண்டிருந்தனவாம். நூற்றுக்கணக்கில் ஒலிபெருக்கிகள் கடைசி மூச்சுள்ள வரை கத்திக் கொண்டிருந்தனவாம்....

கோவி: ஆமாம்! ஜனங்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் ஏமாந்து கொண்டிருப்பார்கள், மாட்டுப் பெட்டியைப் பார்த்து? சுயராஜ்யம் வந்ததிலிருந்து திட்டம் போடுகிறேம் என்று சொல்லிப் பன்னிரண்டாயிரம் கோடி ரூபாய் செலவழித்திருக்கிறுர்கள்! பஞ்சம் தீரவில்லை! ஏழை எளியவர்கள் படும்பாடு...

அப்பு: அதைச் சொல்லத்தான் வந்தேன்: குடந்தை ரயில் நிலையத்திலே ராஜாஜியைச் சந்திக்க வந்தவர்கள் ஏராளமான ஏழை எளியவர்கள்தான்! கூட்டத்துக்கு வந்தவர்



களும் அவர்கள் தான் என்று சொல்ல வேண்டும்.

கோவி : தஞ்சை ஜில்லாவிலே சோற்றுக்கு வழி இல்லையென்றால் அப்புறம் அவர்கள் வாழும் வழி என்ன ?

அப்பு : ராஜாஜி அவர்களும் இதை உணர்ந்துதான் குறிப்பிட்டார்கள். குடந்தைக் கூட்டத்திலே...நெல் விளையும் இந்த ஜில்லாவிலே இப்போது சர்க்கரை விளைகிறது. இதுதான் ஆபத்து...எளிய மக்கள் பட்டினிக்குக் காரணம் என்றார்கள்.

கோவி : பணம் படைத்த நிலச் சொந்தக்காரர்களை யெல்லாம் தட்டிக் கொடுத்து, கரும்புச் சாகுபடி செய்யக் காங்கிரஸ் உதவி செய்ததற்குப் பலன் இது !

அப்பு : கேளும், குடந்தைப் பொதுக் கூட்டத்தில் ஒரு ரசமான சம்பவத்தை! கூட்ட ஆரம்பத்தில் மிகவும் தள்ளாடிக்கொண்டு வயதான அம்மையார் ஒருவர் மேடைமீது ஏறி வந்தார். ராஜாஜியின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு, " இந்த வயதில் தள்ளாமையையும் பாராமல் ஜனங்களைக் காப்பாற்ற வந்தாயே, அப்பா! நீ தீர்க்காயுளுடன் இருக்க வேண்டும் " என்று ஆசீர்வதித்தார்.

கோவி : ராஜாஜியை 'அப்பா, நீ' என்று கூறினாரா அவர் !

அப்பு : அப்படிக் கூறுவதற்கு அந்த அம்மையார் எவ்வளவு வயதானவராக இருக்க வேண்டும் ! கூட்டத்தில் பலரும் ஆச்சரியப் பட்டுப் பேசிக் கொண்டனர். குடந்தையில் சுதந்திரக்கட்சிக் கூட்டம் முடிந்ததும் தலைவர்கள் மறுதினம் திருச்சி வந்தடைந்தனர். திருச்சி வரும் வரை வழியில் பல ஊர்களில் அவருக்கு வரவேற்புகள் நடந்தன. திருச்சியிலோ, ராஜாஜி முதலிய தலைவர்கள் வரும் வழியெல்லாம். ஏராளமாக வரவேற்பு வளைவுகள் அமைத்திருந்தனர். தேவர் மண்டபத்தில் பூர்வாங்க மகாநாடு நடந்தது என்று சொல்வதை விட, நிஜ மகாநாடு மண்டபத்துக்கு வெளியேதான் நடந்ததென்று கூற வேண்டும். மண்டபத்தில் இடமின்றி வெளியே அவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருந்தது. தேவர்ஹால் வெளியே இருந்து பார்த்தால் மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயில் தெரியும். அந்த விநாயகர் மகாநாட்டைக் கண்டு மேலிருந்து ஆசி கூறுவது போலவும் எனக்கு அப்போது தோன்றியது. அவருடைய அருள்தான் கேளும் அன்று... இரண்டொரு தூறல் தூறியது. நல்லவேளை அது உடனே நின்று விட்டது. மாலையில் பொதுக் கூட்ட சமயத்தில்தான் கூறுகிறேன்.

கோவி : பொதுக்கூட்டம், மதுரம் விளையாட்டுத் திடலில்தானே நடந்தது ?

அப்பு : ஆமாம்! அந்தப் பொதுக் கூட்ட ஆரம்பத்தில் மேடையில் ஒரு முஸ்லிம் பெரியவர் வீராவேசமாக எழுந்து 'போலோ ராஜாஜிக்கு ஜே' என்று கோஷம் எழுப்பினார் பாரும். அடாடா...திருச்சியே அதிர்ந்து விட்டதென்றே சொல்லவேண்டும். அவ்வளவு பக்தியோடும் அன்புடனும் வீர முழக்கம் செய்தார் அவர். 'சுதந்திரக் கட்சிக்கு ஜே!' என்று அவர் முடிக்க, கூட்டத்தினர் அதைப் பின்பற்றி மறு முழக்கம் செய்ய, அதைக் கேட்ட எனக்கு மெய் சிலிர்த்து விட்டது!

கோவி : ராஜாஜி தலைமையில் உப்புச் சத்தியாக்கிரக இயக்கம் உருவான நகரமல்லவா திருச்சி?

அப்பு : திருச்சி அப்படியென்றால் நெல்லை? அது ஒரு தனிச் சிறப்பு பெற்றது. இந்தச் சுதந்திர ஆர்வத்தில், மறுநாள் நெல்லை மக்கள் அளித்த வரவேற்பை நீ மட்டும் வந்து பார்த்திருந்தால் அயர்ந்து போயிருப்பாய்.

கோவி : நெல்லை ஜில்லா தேசிய இயக்கத்திலே முன்னும் நின்ற ஜில்லா ஆயிற்றே! கேட்கவா வேண்டும். வ. உ. சி., வ. வே. சு. அய்யர், வீரர் வாஞ்சிநாதய்யர், பாரதியார் இப்படிப் பல தேசபக்தர்களைத் தந்த ஜில்லா ஆயிற்றே அது?

அப்பு : நெல்லையில் மாநாடு நடந்த சங்கீத மண்டபத்திலே, சுலோகங்களை வேறு எழுதித் தொங்க விட்டிருந்தார்கள்! ஒவ்வொரு சுலோகத்திலேயும் தமிழ் மணத்தது. கருத்து தொனித்தது!

கோவி : அப்படியா...ஒன்றைச் சொல்லு பார்க்கலாம்.

அப்பு: கேளு, கோவிந்தசாமி! 'உழவனைக் கெடுத்தால் உற்பத்தி பெருகுமா?' இந்த மாதிரி பல சுலோகங்களைத் தீட்டி யிருந்தார்கள், மகாநாட்டு மண்டபத்திலே. ஒரு சுலோகத்தைப் பற்றி ராஜாஜியே மகா நாட்டில் குறிப்பிட்டுப் பேசினார்...




'அறம் வளர்ப்பது சுதந்திரக் கட்சி, அறம் மறப்பது காங்கிரஸ் கட்சி' என்ற சுலோகத்தைத்தான். 'இதிலே முதல் பகுதி ரொம்ப சரி, ஆனால் அறம் மறப்பது அதாவது அழிப்பது காங்கிரஸ் கட்சி என்று சொல்லுவது சரியல்ல. ஏனென்றால் அறத்தைக் காங்கிரஸ் அல்ல, வேறே எந்தக் கட்சியாலேயும் அழிக்க முடியாது. பயப்பட வேண்டாம்' என்றார் ராஜாஜி.


கோவி : மகாநாட்டிலேயும், பொதுக் கூட்டத்திலேயும் நடந்த விஷயங்களைப்பற்றி...

அப்பு : நெல்லை, ராஜபாளையம் இந்த இரண்டு நகரங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ரொம்ப விரிவாகச்சொல்லவேணும். இப்போது நேரமில்லே. அடியேன், கோவை மகா நாட்டுக்குப் போக வேண்டும். எல்லோருக்கும் முன்னதாகப் போய் ரயில் வண்டி ஏறணும்.

கோவி : ரயில் வண்டியில் எல்லோருக்கும் முன்னால் ஏற வேண்டுமென்றால், இன்ஜின் மேலே உட்காரப் போகிறீரா, என்ன?

அப்பு: இந்தக் குளிர் காலத்தில் இன்ஜின்மேலே உட்கார்ந்தால் கூட நல்லதுதான். இடமிருந்தால் இன்ஜின் மேலேயும் நான் உட்காருவேன். எல்லோருக்கும் முன்னதாக நான் போன மாதிரியும் இருக்கும் அல்லவா? —கொக்கி









மயிலாப்பூர் ரஸிகரஞ்சனி சபை மண்டபம் நவம்பர் 22-ந்தேதி மாலை மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. ஆயிரம் பிறைகண்ட டாக்டர் ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்களைப் பாராட்டத்தான் அவர்கள் குழுமியிருந்தனர். டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

1. கல்கி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் டாக்டர் ஸி. பி. அவர்களுக்கு மலர்மாலையணிவிக்கிறார். 2. சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் 'சுவாகதம்' பாடி வரவேற்கிறார். 3. கபாலீசுவரர் கோயிலிலிருந்து டாக்டர் ஸி. பி. ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார். 4. திரு நாராயணசாமி நன்றி நவில்கிறார். 5, 7. திரளான மக்கள். 6. பாராட்டுதல்களுக்கு ஸி. பி. பதிலளிக்கிறார்.

ஆயிரம் பிறை கண்ட ஸி. பி.













உலகப் பெரியார் ராஜாஜி

அறிவின் உருவம் ராஜாஜி — இந்திய
அரசியல் தந்தை ராஜாஜி !
எறியும் கணையவர் ராஜாஜி — என்றும்
எதிர்ப்பில் நீந்துவோர் ராஜாஜி

உள்ளதைச் சொல்பவர் ராஜாஜி — நாளும்
உண்மைக் குழைப்பவர் ராஜாஜி !
வெள்ளம் தடுப்பவர் ராஜாஜி — வருமுன்
வேலி யமைப்பவர் ராஜாஜி !

சத்தியம் பேசிடும் ராஜாஜி — உலக
சரித்திரங் கண்டவர் ராஜாஜி !
சுத்த மனத்தவர் ராஜாஜி — அரசியல்
சூட்சமங் கண்டவர் ராஜாஜி !

காந்திக் கடுத்தவர் ராஜாஜி — நாட்டைக்
காக்கமுன் வந்தவர் ராஜாஜி !
சாந்த சொரூபி ராஜாஜி — உண்மை
காந்திய வாதி ராஜாஜி !

குட்டிக் கதைக்கு ராஜாஜி — ஊழல்
கொடுமைக் கெதிரி ராஜாஜி !
வெட்டி முறிப்பவர் ராஜாஜி — அதர்ம
வித்து மூளையை ராஜாஜி !

வருமுன் காப்போர் ராஜாஜி — முதிய
வயதில் இளைஞர் ராஜாஜி !
பெருமைக் குரியவர் ராஜாஜி — உலகப்
பெரியார் வரிசையில் ராஜாஜி !
அமுதில் தமிழை ராஜாஜி — கலந்து
அள்ளியே தந்தவர் ராஜாஜி !
தமக்கென வாழா ராஜாஜி — செந்
தமிழ்போல வாழ்கவே ராஜாஜி !

தென்னக ஞானி ராஜாஜி — வியாசர்
தேன்விருந் தளித்தவர் ராஜாஜி !
சென்றதும் நிகழ், எதிர்காலம் — மூன்றை
செப்பனிடும் சிற்பி ராஜாஜி !
சுடரொளி ஞாயிறு ராஜாஜி — பொய்மை
சுட்டு எரிப்பவர் ராஜாஜி !
இடர்ப்படும் உலகுக்கு ராஜாஜி — அறிவு
ஏற்றிடும் மாமேதை ராஜாஜி !

வாழ்க வாழ்கவே ராஜாஜி— எங்கள்
வணக்கத்துக் குரியவர் ராஜாஜி !
ஆழ்கடல் சிப்பியுள் ராஜாஜி — ஒரு
அதிசய முத்தெங்கள் ராஜாஜி !

எண்பத்தோர் ஆண்டினை ராஜாஜி—தாண்டி
இளமைக்குத் திரும்ப ராஜாஜி
தொண்டர்கள் கோடி வாழ்த்துகிறோம் — அவர்
தூய்மையும் வாய்மையும் வெல்க ! வெல்க !

கவிஞர்: க. மாணிக்கவாசகம்.











NEW HUDSON
HINDUSTHAN VEHICLES LTD.
INDIA
நியூ ஹட்ஸன்
CHAMPION
MADE IN INDIA
சாம்பியன்
பர்மிங்ஹாம் ஸ்மால் ஆர்ம்ஸ் கம்பெனி,
லிமிடெட், இங்கிலாந்து
தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டவை
உற்பத்தியாளர்:
ஹிந்துஸ்தான் வெஹிகிள்ஸ் லிமிடெட், பாட்னா
தென்னிந்தியாவுக்கு விற்பனை ஏஜெண்ட்கள்
யுனைடெட் பிரதர்ஸ், 3.

அற்புத வாழ்க்கை

டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர்

பொது வாழ்க்கையிலும், சமூகத் துறையிலும், அரசியலிலும், நிர்வாகத்திலும் நீண்ட காலம் ஆழ்ந்து ஈடுபட்டிருப்பவர்களில் ஒருவருக் கொருவர் கருத்து வேறுபாடுகள் பல சமயங்களில் ஏற்படுவது சகஜமே. ஆனால் இவ்வேற்றுமைகளினால் நட்பு அறுபடக் கூடாது. அதுதான் மனிதப் பண்புக்கு உகந்தது. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாருடன் பல சந்தர்ப்பங்களில், தனிப்பட்ட முறையிலும், பகிரங்கமாகவும் பல முக்கிய விஷயங்களிலும்கூடக் கருத்து வேற்றுமை இருந்த போதிலும் அவருடன் எனக்குள்ள நல்லுறவு பாதிக்கப்படாமல் இருப்பது ஒரு பெரிய அதிருஷ்டம் என்றே கூறுவேன். பல்வேறு குணங்கள் இணைந்தது அவருடைய தன்மை. இதனை அறிந்து கொள்ளுவது சுலபமல்ல. வேகமான உணர்ச்சிக்கும் உறுதியான பற்றுதல்களுக்கும் உட்பட்டிருந்தாலும் அவைகளிலிருந்து தனித்து நிற்கும் அபூர்வமான சாமர்த்தியம் உள்ளவர். இதனாலேயே அவருடன் நெருங்கிப் பழகினாலும் நெருங்கிப் பழகிய மாதிரி திருப்தி ஏற்படுவதில்லை என்று பலர் என்னிடம் சொல்வதுண்டு. காந்திஜியுடன் தொடர்ச்சியாக நெடுநாட்கள் நெருங்கிப் பழகிய தொடர்பு இருந்தாலும், அவருடன் கருத்து வேறுபட்டு, 1942-ஆம் ஆண்டில் காங்கிரஸிலிருந்து கூடத் தாற்காலிகமாக விலகி நிற்க அவரால் முடிந்தது. அதன் காரணமாக அப்போதைக்கு ஏற்பட்ட பொது ஜன அதிருப்தியைக் கூடப் பொருட்படுத்தாத மன உறுதியும் அவருக்கு இருந்தது. வெளித் தோற்றத்தில் அவருடைய செயல்கள் முன்னுக்குப் பின் முரண்படுவது போலத் தோன்றினாலும், உண்மையில் அவருடைய கருத்தில் எவ்வித முரண்பாடும் இல்லை. தத்துவ ஆசிரியர்கள் குறிப்பிடுவது போல் அத்தகைய குணநிசயமுள்ளவர்கள் மிகச் சிலரே உண்டு. அவர்களில் ஒருவர் ராஜாஜி.

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் வாழ்க்கை ஒளி மிகுந்தது. சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் சில காலம் படித்தபோது நாங்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வதுண்டு. அப்போது அவர் தமிழ் விரிவாகப் படித்துக் கொண்டிருந்தார். பின்னால் அவர் காந்திஜியைப் பின்பற்றிச் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட, நான் டாக்டர் பெஸண்ட் அம்மையின் இயக்கங்களில் கலந்து கொள்ள வெவ்வேறு வழியில் பிரிந்தோம். பிறகு அவர் காங்கிரஸின் காரியதரிசியாகவும், செயற் கமிட்டி அங்கத்தினராகவும், ஹிந்திப் பிரசார இயக்கத்திலும் மது விலக்கு இயக்கத்திலும் பல பணிகள் புரிந்தார். கொள்கைகளிலும், நடவடிக்கைகளிலும் அவருடன் அக்காலத்தில் எனக்குக் கருத்து வேற்றுமை இருந்தது. ஆனாலும் அவருடைய திடமான மன உறுதியிலும், ஒருமுகப்பட்ட சித்தத்துடன் லட்சியத்துக்காகச் செயலாற்றும் சாமர்த்தியத்திலும் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. அவர் சென்னை முதன் மந்திரியாகப் பதவி வகித்த காலத்தில் பெரியாறு தண்ணீர் சம்பந்தமாக நான் அபிப்பிராய பேதங் கொண்டு மத்தியஸ்தத்தை நாட வேண்டிய நிலைகூட ஏற்பட்டது.

1944-ஆம் ஆண்டில் காந்தி - ஜின்னு சம்பாஷணையில் காந்திஜிக்கு ஆலோசனை கூறி உதவியபோது அவருடைய வாழ்க்கையில் ஒரு நெருக்கடியான கட்டம் ஏற்பட்டது. இந்திய சுயராஜ்யத்தைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் பொது மக்களின் அதிருப்தியையும் பொருட்படுத்தாது, இந்தியப் பிரிவினைக்குக் காந்திஜியை இணங்க வைத்தார்.

நாட்டில் முக்கியமான பதவிகள் என்னென்ன உண்டோ அவ்வளவையும் ஸ்ரீ ராஜாஜி வகித்திருக்கிறார். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சென்னை முதன் மந்திரியாகப் பதவி ஏற்று நிதி, உள்நாட்டு நிர்வாகம் ஆகியவற்றைத் திறம்பட நடத்தினார். மத்திய மந்திரி சபையில் பதவி வகித்த காலத்தில் இந்திய அரசியலில் அவருடைய செல்வாக்கு ஓங்கியிருந்தது. மேற்கு வங்காளத்தின் கவர்னராக மிகவும் வெற்றிகரமாக நிர்வாகம் நடத்தினார். இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரல் என்ற உயர் பெருமையும் அவரைச் சார்ந்தது. பதவிக் காலம் முடிந்த பின்னர், இவ்வளவு மகோன்னதமான பதவி வகித்திருந்தும், சில காலம் மத்திய மந்திரி சபையில் அமைச்சராகவும், அதற்குப் பின்னர் சென்னை ராஜ்யத்தில் முதன் மந்திரியாகவும் பணியாற்றத் தயங்கவில்லை. இவைகளைப் பற்றிச் சொல்லும் போது பதவி வகித்தார் என்பதைவிடப் பணியாற்றினார் என்று கூறுவதுதான் பொருந்தும். ஏனெனில், பதவிகளின் ஏற்றத்தாழ்வுகளைப் பாராமல், மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற உயர்ந்த லட்சியத்தை அவர் பின்பற்றுகிறார்.



டாக்டர் சி. பி. யும் ராஜாஜியும்

பலதரப்பட்ட குணநிசயங்களும் சாமர்த்தியங்களும் அவரிடம் இணைந்து சோபிக்கின்றன. நமது நாட்டு சமய நூல்களிலும் இதிஹாசங்களிலும் அவருக்குள்ள ஆழ்ந்த அபிமானமும், ஒருமைப்பாடும்; சிறுகதைகள்மூலம் கவர்ச்சிகரமாகத் தந்து

வங்களைப் போதிக்கும் அற்புதத் திறனும், ஒன்றுசேர்ந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் தலைசிறந்த ஆசிரியராக அவரைப் பிரகாசிக்கச் செய்கின்றன.

குடும்பத்தில் நேர்ந்த துயரங்களையும் பாராட்டாமல், தமது தேக நிலையின் பலவீனத்தையும் மதிக்காமல், திரு சி. ராஜகோபாலாச்சாரியார் முழு மனத்துடன் சரித்திரத்தில் இடம்பெறத்தக்க, கட்சி அமைப்புப் பணியில் இப்போது ஈடுபட்டுள்ளார். இப்பணியில் முன்னர் தமது சகாக்களாக இருந்தவர்களுடன் வாதப் போர் புரிவதுடன், முன்னர் எதிரிகளாக இருந்தவர்களுடன் நட்பு கொண்டு செயலாற்றவும் நேரிட்டிருக்கிறது. சுதந்திரக் கட்சியின் உதயம், ''ஸ்வராஜ்யா'' பத்திரிகையிலும் இதர பத்திரிகைகளிலும் பலதரப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பிரமிக்க வைக்கும்படி எழுதும் திறன், கட்சியின் சார்பில் சூறாவளிப் பிரயாணப் பிரசாரங்கள் — இவையனைத்தும் அவருக்குப் புது உற்சாகமளித்திருப்பதாகவே தோன்றுகிறது. எந்தக் கட்சியுடனும் தொடர்பில்லா விட்டாலும், எல்லாக் கட்சிகளிலும் நண்பர்கள் ஏராளமாக உள்ள எனக்கு, இம்மாதிரி பல இக்கட்டான சந்தர்ப்பங்களை நான் முன்னாட்களில் அனுபவித்திருந்தும், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் அரசியல் மேதையையும், லட்சியத்துக்காகச் செயலாற்றும் திறனையும் கண்டு வியப்புறவே தோன்றுகிறது. இலக்கியத்திலும் பக்தி மார்க்கத்திலும் அவருக்குள்ள அளவு கடந்த பற்றை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

ஆகாச வெடி

''முதுமையிலும் நான் இளமையாகத் தோன்றக் காரணம், சின்ன விஷயங்களில் நான் மனத்தை அலட்டிக் கொள்வதில்லை.''

— நேருஜி

ஆனால், முதுமையிலும் இளமையாகத் தோன்றுவது ஒரு சின்ன விஷயம் அல்லவே!

★

''யாசகம் வாங்குவதை ஒரு தொழிலாகக் கொண்டு கல்கத்தாவில் பலர் பணக்காரர்களாகி விட்டார்கள்.''

— லோக சபையில் ஒருவர்

அயல்நாடுகளிலிருந்து இந்தியா யாசகம் வாங்க அவர்கள் உதவியைச் சர்க்கார் யாசிக்குமா?

★

''காங்கிரஸ்காரர்கள் எங்கும் ஸ்தம்பித்து நிற்பதே ஸ்தாபன பலவீனத்துக்குக் காரணம்!''

—காங்கிரஸ் ஊழல் விசாரணைக் கமிட்டி முடிவு

''அப்படி ஸ்தம்பித்து நிற்கக்கொண்டு தானே, இந்தப் பழியைத் தங்கள் தலைமீது சுமத்த முடிந்தது'' என்று காங்கிரஸ்காரர்கள் கருதினால் ஆச்சரியமில்லை.

''ஜப்பானிய மலையேறு? கோஷ்டியை வழி மறித்து அவர்களிடமிருந்த உணவுகளைத் திபேத்தியக் கொள்ளையர்கள் பறித்துச் சென்றனர்.''

— செய்தி

வாயுள்ளவர்களா யிருந்தால், கொள்ளையருக்கு உணவு இல்லாமல் செய்திருக்கலாமே!

★

''புளியங் கன்றுகளை ஏராளமாக வளருங்கள்!''

—சென்னை விவசாய மந்திரி

''சாலை ஓரங்களில்தானே?'' என்று கேட்கிறது ஓர் ஆடு!

★

''நாதகர இசையைக் கேட்டு, பாண்டிச்சேரிக்கு அருகில் நெற்பயிர் கொழுகொழுவென்று வளர்ந்திருக்கிறது!''

—தினசரி

இந்த நல்ல செய்தி, மேளதாளத்துடன் எங்கும் வரவேற்கப்படுமென்பது நிச்சயம்.

★

''வெளுப்பு நிறப் புலி ஒன்று திரு நேரு டெல்லி வரும்போது அவருக்கு வணக்கம் செலுத்தும்.''

— செய்தி

சரியானபடி வணக்கம் செலுத்தா விட்டால் அதை வெளுத்துக் கட்டி விடுவாரோ அதன் எஜமான்?


ஒரு இனிய நினைவு

நவரத்ன ராமராவ்

மைசூர் அரசாங்கத்தின் பிரதம காரிய தரிசியிடமிருந்து 1948-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 'மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் இந்த ராஜ்யத்துக்கு விஜயம் செய்து கௌரவிக்கிறார். நீங்கள் விமான நிலையத்தில் அவரை வரவேற்க வந்து சேர வேண்டும்' என்று எழுதியிருந்தது. சர்க்காரிடமிருந்து கடிதம் வந்தது எனக்கு எதிர்பாராத இன்பம் அளித்தது. கொஞ்ச நாட்களுக்கு முன் தான் சர்க்காரின் ஒரு உத்தரவைப் பகிரங்கமாகக் கண்டித்து, மேலதிகாரிகளின் அதிருப்தியைச் சம்பாதித்திருந்தேன். என்னைச் சர்க்கார் விருந்துபசாரங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் அழைக்க மாட்டார்கள் என்று எண்ணியிருந்தேன். இந் நிலையில் இந்தக் கடிதம் வந்தது எனக்கு இன்ப வியப்பையளித்தது. இதற்குக் காரணம் யார் என்று ஊகிக்க முடியாமல் போய்விடவில்லை — கவர்னர் ஜெனரலாக இருந்தவர் ராஜாஜியல்லவா? மைசூர் மகாராஜாவின் தலைமையில் மைசூர் ராஜ்யத்தின் பிரமுகர்களும், தலைவர்களும், பெரும் உத்தியோகஸ்தர்களும் தந்துகட்டி மைதானத்தில் அந்த ஆகஸ்ட் மாதக் குளிரில் காத்துக் கொண்டு நின்றிருந்தோம். ஆகாய விமானத்தின் ரீங்காரம் காதில் விழுந்ததும், அதனை ஆவலுடன் எதிர் பார்த்திருந்த அந்தக் கூட்டத்தில் ஒரு அமைதி ஏற்பட்டது. பிறகு விமானம் தென்பட்டது. முதலில் வான மண்டலத்தில் ஒரு புள்ளி போல் காணப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகிப் பெரிதாகிப் பிரும்மாண்டமான பறவையைப் போல் பூமியின் மீது இறங்கிக் கம்பீரமாக நின்றது.

அது தாங்கி வந்த மகானின் காரணமாக, மகாவிஷ்ணுவைத் தாங்கி வரும் கருடாழ்வார் தானோ என்ற எண்ணத்தை ராஜாஜி பக்தர்கள் உள்ளத்தில் அந்த விமானம் ஏற்படுத்தியிருக்கும். அந்த விமானத்தை விட்டு ராஜாஜி இறங்கியபோது, எளிய தூய வெண்ணிற ஆடை அணிந்திருந்த அவரைக் கண்டு அங்கு கூடி இருந்தோரில் கண்கள் பனித்து விட்டன. என் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு லைவுகார் - அவர் நெஞ்சம் அவ்வளவு சுலபமாக இளகிவிடக் கூடியதல்ல - அவர் கூட ஆனந்த மிகுதியால் விம்மத் தொடங்கி விட்டார். நாங்கள் அனைவரும், அரிய விருந்தினருக்கு முறையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டோம். என்னை அறிமுகம் செய்து வைக்கும் சந்தர்ப்பம் வந்தபோது, மகாராஜா பக்கம் திரும்பி, "ஓ! இவரை எனக்குத் தெரியும்!" என்று புன்சிரிப்புடன் கூறினார் ராஜாஜி. பிறகு நாங்கள் பவனியாக அரண்மனை ஜிம்கானா மைதானத்துக்குச் சென்றோம். அங்கு தேநீர் விருந்து நடந்தது. ராஜாஜி எங்கள் மத்தியில் இருந்ததை எண்ணி எண்ணி மகிழ்ச்சியடைந்தோம்; பெருமிதம் கொண்டோம். அன்று அவர் பேசிய ஒவ்வொரு பேச்சும், செயலும், பார்வையும் நாங்கள் வாழ்நாள் முழுதும் நினைவில் வைத்துக் கொள்ளத் தக்கனவாகி விட்டன! என்ன எளிமை, என்ன இனிமை! ஒவ்வொருவரையும் அவர் முகமலர்ந்து விசாரித்ததை என்னென்பது! அவர், மகாராஜாவுடன் லலித மகால் அரண்மனைக்குப் புறப்பட்டுச் சென்ற காட்சி நாங்கள் ஒவ்வொருவரும் சுதந்திர நாட்டின் பிரஜை என்பதினால் ஏற்பட்ட பெரும் கௌரவத்தை உணரச் செய்தது. அந்த உல்லாசக் கூட்டத்ினூடே நான் இந்திய அதிதிகள் விடுதியில் ஒதுக்கப்பட்டிருந்த என் அறைக்கு மெள்ள நடந்து சென்றபோது, முன்பு ஒரு சமயம் - பல ஆண்டுகளுக்கு முன்பு - ராஜாஜி மைசூருக்கு விஜயம் செய்த மற்றொரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

1924-ம் ஆண்டு என்று நினைக்கிறேன் — ராஜாஜியிடமிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. அந்தத் தந்தியிலிருந்த வாசகம் எனக்குச் சரியாக நினைவில்லை. அதன் மொத்தக் கருத்து இதுதான். ராஜாஜி அப்போதுதான் சிறையிலிருந்து விடுதலையாகியிருந்தார். தேக ஆரோக்கியம் கெட்டிருந்தது. அவருக்கு ஓய்வும் அமைதியும் தேவையாக இருந்தன. என்னுடன் வந்து தங்கலாமா என்று கேட்டிருந்தார். என்னுடைய மிக நெருங்கிய நண்பர், என் சகோதரரை விட நெருங்கியவரான ராஜாஜியிடமிருந்து வந்த இந்தத் தந்தி என்னை எவ்வளவு பாடு படுத்தியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். அவர் என்னைக் கேட்கவும் வேண்டுமோ? நான் உடனே தந்தி கொடுத்தேன்! என்



நவரத்ன ராமராவும், ராஜாஜியும்

குடிசை அவருடையது. அவர் இப்பொழுதும் வரலாம். இனி எப்பொழுதும் வரலாம் என்று தந்தி கொடுத்தேன். அன்றைய தினம் சாயங்காலமே ஜில்லா போலீஸ் அதிகாரி (டி. எஸ். பி.) என் வீட்டுக்கு வந்தார். கொஞ்ச நேரம் பயனற்ற உபசார வார்த்தைகள் பேசி விட்டு அவர் என்னைப் பார்க்க வந்த நோக்கத்தை வெளியிட்டார். 'ராஜாஜி மைசூருக்கு வந்து தங்களுடன் தங்கப் போவதாக நம்பத் தகுந்த செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்தி உண்மையா?'

நான் அப்போது, மைசூர் ராஜ்யப் பட்டுத்தொழில் இலாக்காவின் அதிகாரியாக இருந்தேன். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விரோதிகளில் மகாத்மா காந்திக்கு அடுத்தாற் போல் (அடுத்தாற் போல் என்பது சரியாகுமா?) விளங்கும் ராஜாஜியை அழைத்து வந்து வீட்டில் வைத்துக் கொள்வது உசிதமா என்று கேட்டார். நான் அவருக்கு, 'இது என் சொந்த விஷயம், நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்' என்று சுருக்கமாகப் பதில் சொன்னேன். அவர் என்னிடம் மன்னிப்புக் கோரினார். அவருக்கு என்னிடமுள்ள மதிப்பின் காரணமாக இவ்விஷயம் பற்றிப் பேச வந்ததாகவும் நான் அவருக்குக் கொடுத்த பதில் 'பிரிட்டிஷ் ரிஸிடெண்ட் துரைக்குத் திருப்தியளிக்குமா, பார்க்க வேண்டும்' என்றும் போகிற போக்கில் ஒரு போடு போட்டார். அன்றிரவு ஜில்லா மாஜிஸ்திரேட்டாக இருந்த பி. ராமஸ்வாமையா என் இல்லத்துக்கு வந்து கௌரவித்தார். அவர் என் நெருங்கிய நண்பர். ஆனால் இந்தத் தடவை நட்புறவை மூட்டை கட்டித் தூர வைத்து விட்டு, உத்தியோக முறையில் எனக்குக் கடும் எச்சரிக்கை செய்து விட்டுப் போனார். அவரை எவ்வளவோ கேட்டுக் கொண்டேன். உத்தியோக கவசத்தை அணிந்து கொண்டிருந்த அவர் என் மேல் அளவு கடந்த கோபம் கொண்டு வெளியேறி விட்டார்.

நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இவர்கள் விரும்பினார்கள் என்பது புரியவில்லை. ஆனால் நான் கடைப்பிடிக்க வேண்டிய வழி தெளிவாகப் புரிந்தது! எனினும் எனக்கு நேரக்கூடிய தொல்லைகள் பற்றி கவலையும் ஏற்பட்டது. அதிகாரிகளிடமிருந்து விளக்கங்கள் கேட்டுக் கடிதங்கள், கண்டனங்கள், அவற்றைவிட விபரீதமான எச்சரிக்கைகள் ஆகியவை எனக்கு வரலாம். ஆனால் சர்க்கார் உத்தியோக வாழ்வில் அன்புக்கும் நற்பண்புக்கும் இடமில்லையா என்ற கவலை ஏற்பட்டது. ஜில்லா மாஜிஸ்திரேட், ஜில்லா போலீஸ் அதிகாரி, இவர்களைவிட உயர் அதிகாரிகளிடமிருந்து நான் ஏன் ஆதரவு தேடக் கூடாது என்று தோன்றியது. அந்தச் சமயத்தில் சமஸ்தானத்தில் மிகுந்த செல்வாக்குடன் இருந்தவர் மகாராஜாவின் அந்தரங்கக் காரியதரிசியான திரு மிர்ஸா முகம்மத் இஸ்மெயில்.

இவர் பின்னால் மைசூர் சமஸ்தானத்தின் திவானாகவும் ஆனார்; ஸர் பட்டமும் பெற்றார். எனக்கு இவரைத் தெரியும். அவருக்கும் என்னைப் பிடிக்கும் என்று தோன்றியது. ஏனெனில் என்னைப் பார்க்கும்போதெல்லாம் புன்முறுவல் செய்திருக்கிறார். என்னைப் பற்றி மற்றவர்களிடம் நல்ல முறையில் பேசியிருக்கிறார். இவர் பழம் பண்பாட்டில் திளைத்து வந்த கனவான். மற்ற அதிகாரிகளுக்குக் கைகட்டி நிற்க வேண்டாத அந்தஸ்தில் இருந்தார். அவருடைய இயல்பான உதவும் பண்பு எனக்கு இந்தச் சமயம் கைகொடுக்கும் என்று தோன்றியது. என் எண்ணம் சரியானது என்று நிரூபணமாயிற்று. நான் அவரை அணுகினேன். இந்தத் தர்மசங்கடமான நிலையில் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று யோசனை கேட்டேன். பருத்த மூக்குக் கண்ணாடிகளுக்குப் பின்னிருந்த அவரது கண்கள் 'பளிச்பளிச்'சென்று ஒளி உமிழ்ந்தன. ஜில்லா மாஜிஸ்திரேட்டிடமிருந்து என் பிடிவாதத்தைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. அவரிடம் என் நிலைமையை இப்படித்தான் வெளியிட்டேன்: அவருடைய நெருங்கிய நண்பர் நோய்வாய்ப்பட்டு, ஓய்வு எடுத்துக் கொள்ளவும், இடம் மாற்றம் பெறவும் அவரை நாடி வந்தால் அவர் மறுப்பாரா என்று கேட்டேன். ''இது என்ன கேள்வி? யாரால் மறுக்க முடியும்? மறுத்தால் அவனும் மனிதனாவானா?'' என்றார். அவருக்கு நன்றி செலுத்தி விட்டு, என் கதையைக் கூறினேன். அவர் நான் செய்தது சரி என்றார். விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் கூறினார். அவருக்கே ராஜாஜியினிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. அவரைப் பார்க்க ஆவலாக இருப்பதாகவும் கூறினார். அப்போது தான் எனக்கு மன நிம்மதி ஏற்பட்டது. மறு நாள் காலை, தலைகால் புரியாத குதூகலத்துடன் என் நண்பரை வரவேற்க ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றேன், வண்டி வந்தது. வண்டியிலிருந்து ராஜாஜி மட்டுமல்ல, அவருடன் ஒரு அழகிய இளைஞரும் இறங்கினார். அவரை நான் அதற்கு முன் பார்த்ததில்லை. அவர்தான் மகாத்மா காந்தியின் புதல்வரான தேவதாஸ் காந்தி என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

தேவதாஸ் சூடிகையும் பணிவும் இணைந்த இனிய இளைஞர். அவர் ராஜாஜியுடன் பழகிய விதம் ரம்மியமாக இருந்தது. நண்பரைப் போல் உரிமையுடன் பழகினார். கூடவே, ராஜாஜியின் வயதுக்கு மட்டுமன்றி, அவருடைய பண்புக்கும், தேசபக்திக்கும் தியாகத்துக்கும் மதிப்பு வைத்து, தந்தையிடம் பழகுவதுபோல் பழகினார். மகாத்மா காந்தி, ராஜாஜியிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்பதை அது அறிவுறுத்தியது.

அன்று பிற்பகல் ஜில்லா மாஜிஸ்திரேட் என் வீட்டுக்கு வந்து ராஜாஜியுடன் பேசத் தொடங்கினார். அவர் ராஜாஜியைக் குறுக்குக் கேள்விகள் கேட்டு விசாரித்த முறையைப் பார்த்தபோது, எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. ராஜாஜியின் சாமர்த்தியமான குறுக்குக் கேள்விகளுக்கு முன்னால் அவரால் ஒரு கணம்கூட நிற்க முடியவில்லை. ஆனால் அவர் வெளியே வந்தபோது மிகுந்த திருப்தியோடுதான் வந்தார். என் விருந்தினரின் நடவடிக்கைகளைப் பற்றித் தினம் தமக்கு அறிவிக்க வேண்டும் என்று என்னிடம்

1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் தேதி 81-வது பிறந்த நாளை எய்தும் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் தேக ஆரோக்கியத்துடன் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று என் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் காட்டும் சீரிய வழியில் சென்றும், அவர் யோசனைகளைக் கேட்டும் பயனடையும் பாக்கியம் இந்தத் தேசத்துக்குப் பல காலம் தொடர்ந்திருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

(எம். விசுவேசுவரய்யா)



சொன்னார். அந்த வேவு பார்க்கும் வேலையை அவரே செய்து கொள்ளும்படி சொன்னேன்.

ராஜாஜி என்னுடன் தங்கியிருந்த நாட்கள் ஒரே இன்பமயமாக இருந்திருக்கும். ஆனால் மக்கள் எல்லா நேரங்களிலும் வந்து ராஜாஜியைத் தரிசித்து விட்டுத்தான் போவோம் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். என் வீடு புனித க்ஷேத்திரம் ஆகிவிட்டது. இந்த க்ஷேத்திராடனத்துக்கு வந்தவர்களில் சாதாரண உடையில் இருந்த போலீஸ்காரர்களும் உண்டு என்று எண்ணுகிறேன். சர்க்கார் உத்தியோகங்களில் இல்லாத பிரமுகர்கள் அனைவரும் அடிக்கடி வந்துகொண்டிருந்தனர். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் என் மதிப்புக்குரிய நண்பரான ஸ்ரீ வெங்கட கிருஷ்ணய்யா. அவரை மைசூரின் முதுபெருங் கிழவர் என்று யாவரும் குறிப்பிடுவது வழக்கம். அவர் அடிக்கடி என் உடையையும் ராஜாஜி உடையையும் ஒப்பிட்டு என்னை ராஜாஜியிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளும்படி சொல்லி வந்தார். என் மேற்கத்திய உடையையும், சரிகைத் தலைப் பாகையையும் பழிப்பார். ராஜாஜியின் தூய வெண்ணிறக் கதராடையைப் போற்றுவார்.

சில தினங்களுக்குப் பிறகு நாங்கள் மைசூரிலிருந்து இருபது மைல் தூரத்திலுள்ள நரசிபுரம் என்ற ஊருக்குச் சென்றோம். இவ்வூர் காவேரியும் கபிலநதியும் சங்கமமாகும் இடத்தில் அமைந்துள்ளது. நதிக்கரைகளில் பழங்காலக் கோயில்கள் உண்டு. காலையும் மாலையும் பூஜைகள் தினந்தோறும் நடக்கும். இங்கும் ராஜாஜியைப் பார்க்க வருபவர்கள் இல்லாமற் போகவில்லை. ஆனால் கூட்டம் அவ்வளவு அதிகமாக இல்லை. இந்தச் சமயத்தில் ராஜாஜி ஆஸ்த்மாவினால் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். நல்லவேளையாக இங்கு அவருக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது.

நாங்கள் மைசூருக்குத் திரும்பி வந்ததும் தேவதாஸ் சிவசமுத்திரம் அருவியைப் பார்க்க வேண்டும் என்றார். அவ்விடத்துக்கு என் காரிலேயே போவது என்று தீர்மானித்துப் புறப்பட்டோம். இந்தப் பிரயாணத்தின் போது மத்தூர் முசாபரி பங்களாவில் ஓர் இரவைக் கழித்தோம். அங்கு தேவதாஸ் தம் தந்தை மகாத்மாவுக்குப் பிடித்ததும் நீயூமன் இயற்றியுள்ளதுமான 'லீட் கைண்டிலி லைட்' என்ற ஆங்கில மொழிப் பாடலையும், 'வைஷ்ணவ ஜனதோ' என்ற பாடலையும் இன்னும் சில பாடல்களையும் பாடிக் காண்பித்தார். அவர் சாரீரம் கனமாக நன்றாக இருந்தது. பாடிய முறையில் எளிமையும் உணர்ச்சியும் இருந்தன. நானும் இரண்டு புரந்தரதாஸர் கீர்த்தனங்களைப் பாடினேன். பாடிவிட்டு, 'தென்னிந்திய கர்நாடக சங்கீதம் இதைவிட மேலாக இராது போலிருக்கிறது' என்று தேவதாஸ் நினைத்துக் கொண்டு விடாமலிருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்!

மறுநாள் காலை, மத்தியானச் சாப்பாட்டைக் கையில் எடுத்துக் கொண்டு மத்தூரை விட்டுப் புறப்பட்டோம். அன்று முழுதும் அருவியைப் பார்த்து அனுபவித்துக் கொண்டும் வனப் பிரதேசத்தில் திரிந்து கொண்டும், கோயில்களைப் பார்த்துக் கொண்டும் அந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற தீவில் கழித்தோம். அங்கு கட்டப்பட்டிருந்த மின்சார உற்பத்தி நிலயத்தைப் பார்ப்பதில் எங்களுக்கு ஆர்வம் இல்லை. தேவதாஸ், அருவியைநன்றாகப் பார்க்க வழுக்கும் பாறைகளில் ஏறி இறங்கியபோது, எனக்குச் சிறிது கவலையே ஏற்பட்டது!

சிவசமுத்திரத்திலிருந்து நாங்கள் பெங்களூர் வந்து சேர்ந்தோம். நான் புதிதாக வாங்கியிருந்த காரைப் பற்றியும் அதை ஓட்டக் கூடிய என் திறமையைப் பற்றியும் கர்வம் அடைந்திருந்தேன். இந்தக் கர்வத்தில், என் பலவீனமான தேகநிலையைப் பொருட்படுத்தாமல் நானே முழு தூரத்தையும் ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தேன். பெங்களூர் வந்து சேர்ந்ததும் களைத்துப் போய் மயக்கம் போட்டு விழும் நிலையை அடைந்திருந்தேன்.

பெங்களூரில் நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம். ராஜாஜியும் தேவதாஸும் சென்னைக்குத் திரும்பினர். ராஜாஜி - தேவதாஸ் இவர்களின் இந்த விஜயம் மறக்க முடியாத நினைவுப் பொக்கிஷமாகும்.

கடவுள் ராஜாஜிக்கு அருள்பாலிப்பாராக!

பாடலி

வேங்கடலட்சுமி

வெண்ணைப் புஷ்பங்கள் பூத்துக் குலுங்கும் மலர்க்கொடிபோல் தம்மெதிரே வந்து நின்ற அன்புச் செல்வத்தைக் கண்டதும், தன்னந் தனியே அமர்ந்திருந்த சக்ரவர்த்தி ஆவலுடன் எழுந்தார்.

சிவந்த தன் மாதுளை மொட்டு இதழ்களில் புன்னகையொன்று ஒளிவிடத் தன் கையிலிருந்த பட்டுத் துகிற் சுருளை அவரிடம் நீட்டினாள் இளவரசி சாருமதி. மாமன்னரான அசோகச் சக்கரவர்த்தியின் கடைசி மகள் அவள். இளவரசன் மகேந்திரனும், அடுத்தவளான சங்கமித்திரையும் பௌத்த மதத்தைத் தழுவி மதப்பிரசாரம் செய்ய இலங்கை போந்துவிட்ட பிறகு, கடல் போன்றிருந்த மகத தேசத்து அரண்மனைக்கு ஒளியூட்ட அவள் ஒருத்தியே மிஞ்சியிருந்தாள்.

தண்மதியின் குளிர்ச்சியையும் தாமரையின் மலர்ச்சியையும், மின்னலின் ஒளியையும் ஒன்றாக ஒரு கலவை செய்து அதிலிருந்து அவ்வழகுப் பிம்பத்தை வடித்திருந்தான் ஆண்டவன்.

செங்கனிவாயில் மலர்ந்த புன்னகை இன்னிசை நாதம் போன்ற சிரிப்பாக மாற, "அப்பா!—மந்திரி ராதாகுப்தர் இதை யாரிடமும் கொடுக்கமாட்டாரென்பதாகச் சொன்னீர்களே, அவரிடமிருந்தே, அவர் கையிலிருந்தே. இதை வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன், பாருங்கள்!'' என்றாள்.

குழந்தையின் மழலையையொத்த களங்கமற்ற அவளுடைய பேச்சு, சக்கரவர்த்தியின் புண்பட்ட இதயத்துக்கு ஆறுதல் தரும் அருமருந்தாக அமைந்தது. அவளுடைய சிரிப்பில் தாமும் கலந்து கொண்டவராய் அத்துகிற் சுருளை வாங்கிப் பிரித்தார். அதற்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓலைச் சுவடிக் கட்டு ஒன்று காணப்பட்டது. அதைப் பிணைத்திருந்த கயிற்றை விலக்கிவிட்டுச் சுவடிகளை ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்தார். அவற்றில் நெருக்கமாய் வரையப்பட்டிருந்த எழுத்துக்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு மிகுந்த ஏமாற்றத்துடன் அவற்றைப் பழைய படியும் அடுக்கிக் கட்டலானார்.

இளவரசிக்குத் தந்தையின் ஏமாற்றம் வேடிக்கையாயிருந்தது.

கலீரென்று கைகொட்டிச் சிரித்தாள்.

"இப்படிக் கொடுங்கள் அவற்றை அப்பா! நான் படித்துப் பொருள் கூறுகிறேன்!'' என்று சுவடிகளை வாங்கிக் கொண்டாள். அதிசயத்துடன் அவளை நோக்கினார் சக்கரவர்த்தி.

"ஏன், அப்பா! ஆச்சரியமாயிருக்கிறதா? போன வருடம் மகதத்துக்கு வந்திருந்த வசுமித்திர போதரிடம் நானும் அக்காவும் தேவநாகரம் கற்றுக் கொண்டோமே. மறந்து விட்டீர்களா? இப்படிக் கொடுங்கள் அதை!'' என்று தன் தந்தையிடமிருந்து சுவடிகளை வாங்கிக் கொண்டாள். ஒரு கணம் அவற்றைக் கூர்ந்து பார்த்தவள், "அப்பா! இது ஏதோ கதை மாதிரியல்லவா இருக்கிறது? சுயசரிதம் போலும்'' என்றாள் வியப்புடன்.

"ஆம், மகளே! அது உன்னைப் போன்ற ஒரு பெண்ணின் சுயசரிதம்தான். நீ படித்து எனக்குக் கூறு!'' எனக் கூறிவிட்டுத் தம் விழிகளில் சுரந்த நீரை இளவரசி காணாமல் இருக்க வேண்டி முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு விட்டார்.

ஆனால் அந்தச் சுவடிகளிலேயே ஒன்றியிருந்த சாருமதி, அவரைக் கவனியாமல் ஆவலுடன் படிக்கலானாள்.

* *

கபிலவாஸ்துவில் அன்று இளவரசி யசோதரையின் பிறந்தநாள். திருமணம் முடிந்த பின்பு இதுதான் அவளுடைய முதல் பிறந்த நாள். ஆகையால் மன்னன் சுத்தோதனனும் மகாராணி கௌதமியும் அதை மிக மிக விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்திருந்தனர். இதற்கு எத்தனையோ காரணங்கள். எதிலும் பற்றில்லாமல், ஒன்றிலும் ஒட்டாமல், சின்ன வயதுக்கும் தன் பருவத்துக்குமுரிய எவ்விதமான இன்பத்திலும் இச்சை வைக்காமல், ஏதோ ஒரு தனிப்பட்ட முறையில், விசித்திரமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த கபிலவாஸ்துவின் ஒரே குலக்கொழுந்தைத் தன்பால் வசீகரித்து, விவாகம் என்ற தொடர்பில் அவனை இவ்வுலக வாழ்க்கையில் இழுத்துப் பிணைத்த அழகி யசோதரையிடம் கௌதமிக்கு அளவற்ற பாசம். அவளுடைய இணையற்ற எழிலிலும், யாவரிடமும் அன்பு கனியப் பழகும் விதத்திலும் பணிவிலும் அடக்கத்திலும் ஒன்றிப் போயிருந்தாள் சித்தார்த்தனின் அன்னை. ஒரு நாளைக்கு ஒரே ஒரு தரம் அரண்மனைக்கு வந்து, எதையோ ஒருவேளை உண்டு, மிகுதி வேளைகளில் காடென்றும் மேடென்றும் நினைப்பில்லாமல் மோனநிலையைக் கண்ட முனிவன் போல் திரிந்து கொண்டிருந்த தங்கள் செல்வன் சித்தார்த்தன், இனிமேல் முழுதும் இருந்து ராஜபுத்திரனுக்குரிய முறையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு

விடுவான் என்று எண்ணி, அவளுக்குரிய இவ்வாழ்க்கையை வகுத்த இளவரசி யசோதையைத் தங்கள் கண்ணுள் கருமணியாய்க் கருதி மகிழ்ந்தனர்.

ஆகவே அரச குடும்பத்துக்கே புதிய நல்வாழ்வளித்த அவளுடைய பிறந்த நாள் மிகச் சிறப்பான முறையில் கோலாகலமாய்க் கொண்டாடப்பட்டது. நகரெல்லாம் கொடிகளும் தோரணங்களும் பறக்க, வீதிகளின் இருமருங்கிலும் வாசநீர் தெளித்து, மகரந்தக் கோலமிட்டனர் மங்கையர். ஆடவரும் பெண்டிரும் தம்மை அழகுபெற அலங்கரித்துக் கொண்டு தங்கள் அன்புக்குரிய இளவரசிக்குப் பலவிதப் பரிசுகள் அளித்து அவளைப் பார்த்து விட்டு வந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் அறுசுவை உணவும், கனிவர்க்கங்களும், பட்டாடைகளும் அளித்து அனுப்பினாள் கௌதமி.

அன்று மாலை அரண்மனையின் பளிங்கு மண்டபத்தில் மிகச் சிறந்த நடன விருந்தொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யாருடைய நடனம் தெரியுமோ? என்னுடைய நடனந்தான்! என்னுடைய நடனத்தை மிக மிகச் சிறந்ததென நானே சொல்லிக் கொள்வது கொஞ்சம் பண்புக் குறைவானதுதான்! ஆயினும் இவ்வோலைகளை எழுதுவது நானே ஆதலாலும் இது வேறு யாருக்கும் தெரியக் கூடாது ஆகையாலும் என்னைப் பற்றியும் நானே கூறிக் கொள்ளுகிறேன்:

எது முக்கியமோ, அதை நான் இன்னும் கூறவில்லையே! என் பெயர் பாடலி. கபிலவாஸ்துவின் நாட்டியக் கணிகையர் மரபில் பிறந்தவள் நான். அப்பொழுது நான் மிகச் சிறுவயதுதான். ஆயினும், என்னுடைய அழகைப் பற்றி அன்னை ரஞ்சனாவிடம் வியந்து பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆகவே அதைப் பற்றி அதிகமாக நான் ஒன்றும் கூற வேண்டியதில்லை. அரண்மனையில் நடக்கும் எந்த விழாவும் என்னுடைய நாட்டியம் இல்லாமல் பூர்த்தியடையாது. மேலும் இளவரசி யசோதரை என்னுடைய நடனத்தைப் பார்த்ததேயில்லை. ஆகவே மகாராணி இப் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு என்னுடைய நடனம் வேண்டுமென்று சொன்னவுடன் என் அன்னை உடனே ஒப்புக்கொண்டு விட்டாள்! இதில் அவளுக்கு இரண்டுவித உற்சாகம். ஒன்று, அரண்மனையில், மகாராணியின் ஆதரவில் நடைபெறப் போகும் நிகழ்ச்சி. ஆகவே, சன்மானத் தொகை பொற்காசுகளாகவே தாம்பாளம் நிறைய வரும்: இதைத் தவிர, பரிசுப் பொருள்கள் ரத்னாபரணங்கள் இவைகளும் கிடைக்கும். இரண்டாவது அரச குடும்பத்து நிகழ்ச்சியல்லவா? கபிலவாஸ்துவின் தனவான்களும், இளைஞர்களும் குறைவில்லாமல் கூடுவார்கள். அதிலிருந்து, பொன் பொழியும் ஒருவனைத் தன் மகளுக்கு....அதுதான் முன்னமேயே கூறி விட்டேனே, நான் கணிகையர் மரபென்று.......!

நானும் மகிழ்ச்சியுடனேயே ஒப்புக் கொண்டேன்.

என்னுடைய அலங்காரங்களெல்லாம் வீட்டிலேயே நடைபெற்றன. எப்பொழுதைக் காட்டிலும் அதிகமான சிரத்தையுடன் என் தாய் எனக்கு ஒப்பனை செய்தாள். அன்று மாலையிலேயே அரண்மனையிலிருந்து ஒரு கூடை மலர்களையும், ஒரு பேழை நிறைய முத்தும் ரத்னமும் இழைத்த அணிகளையும் மகாராணி என் தாய்க்கு அனுப்பி வைத்துவிட்டாள். பிறகு கேட்பானேன், என் அன்னையின் ஆனந்தத்துக்கு.

ஏற்கெனவே அடர்ந்து கருண்ட கூந்தல் என்னுடையது. நெளி நெளியாய் முதுகிலும் வழிந்து புரளும்; வாசனைத் தைலம் தடவித் தலையணிகளை யெல்லாம் அழகு பெறப் பூட்டி நீண்ட சடை பின்னி முடித்தாள் என் தாயார். அதன்மீது சண்பகமும், முல்லையும் செண்டு கட்டிச் சூட்டினாள். முகம் கழுவி, மை தீட்டித் திலகமிட்டுப் பொன்னும், பட்டும், பூஷணமாய் அலங்காரத்தைப் பூர்த்தி செய்தாள்.

கண்ணாடி முன்பு போய் நின்றேன். அப்சரஸாக்கள் என்று வர்ணிப்பார்களே நான் அப்படித்தான் இருந்தேன். என் அழகில் எனக்கு ஒரே பெருமை. பின்னே இருக்காதா? நீங்களே சொல்லுங்கள்!

புறப்படும் வேளை நெருங்கியது. அரண்மனையிலிருந்து என்னை அழைத்துப் போக ஒரு சிவிகையுடன் இரண்டு சேடிகளையும் அனுப்பியிருந்தாள் மகாராணி.

சிவிகையிலே ஏறுமுன்பு என் தாயார் என்னைத் தனியாக அழைத்துச் சொன்னாள்: ''பாடலி! நீ போகும் இடம், பட்டமும், பதவியும், பொன்னும் பொருளும் குலுங்கும் இடம்: ஆகவே, உன் இருதயத்தின் கதவுகளை இறுக அடைத்துவிடு; கண்களை மட்டும் அகல விரித்துக்கொள்! நான் சொல்கிறது விளங்குகிறதா, மகளே?''

எனக்கா விளங்காது? அவளுடைய மகள் தானே நான்! நகைத்துக்கொண்டே தலையசைத்துவிட்டுச் சிவிகையில் ஏறினேன்; அப்பொழுது நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. இறுகப் பூட்டிய என் இருதயக் கதவுகள் தாமே திறந்துகொள்ளுமென்றும், அகல விழித்த என் விழிகளிரண்டும், தாமே மூடிக்கொள்ளுமென்றும் தெரிந்திருந்தால் அந்தப் பாழாய்ப் போன நடனக் கச்சேரிக்குப் போயிருப்பேனா? இல்லை, ஒருநாளுமில்லை! என் வாழ்க்கையே வேறு திருப்பத்தில் புகுந்திருக்குமே! எப்படியோ போய்ச் சேர்ந்து விட்டேன்.


மணிவிளக்குகளாலும், மலர் மாலைகளாலும், முத்துச் சரங்கள், பட்டுத் திரைகளாலும் அலங்கரிக்கப்பட்ட நடன மேடையில் போய் நின்றேன்.

வாத்தியங்கள் முழங்கின, அஞ்சலி முடிந்து திரை தூக்கியது. ஒரு விநாடி சபையைக் கண்ணோட்டம் விட்டேன்.

'ஆம்! என் தாயார் சொன்னது உண்மைதான். கணக்கற்ற சிற்றரசர்களும், செல்வச் சீமான்களும், சீமாட்டிகளும் அங்கே குழுமியிருந்தார்கள். எனக்கு வேட்டைக்குக் குறையில்லை. உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன் நான். விழிகளைத் திருப்பி மறுபுறம் நோக்கினேன். மகாராஜாவுடன் கௌதமி தேவி-அப்புறம் இளவரசி, யசோதரை. அவளுக்குப் பக்கத்தில்! ஐயோ, இதென்ன? என் இருதயக் கதவுகள் மூடிக் கொள்ள மறுக்கின்றனவே! அம்மாவின் புத்திமதி எங்கேயோ அடித்துக்கொண்டு போய்விட்டது.

நாட்டுக்கு நல்லிய நல்மொழி-1

குதிரை வண்டியைச் சரியானபடி செலுத்தக் குதிரையைப் போலவே கடிவாளமும் மிக அவசியம். ஆட்சிமுறை நல்லபடியாக நடக்க எதிர்க் கட்சியும் மிக மிக முக்கியம்.



இரட்டை மாட்டு வண்டியில் ஒரு மாட்டைப் போலவே மற்றொரு மாடும் முக்கியமானதுதான். ஜனநாயகம் நடைபெற வேண்டுமானால் நாட்டில் இரண்டு பலமான கட்சிகள் இருக்க வேண்டும்.

—ராஜாஜி

இவ்வளவு கருணையும் சாந்தமும் ததும்பும் விழிகள் யாருடையவை? மனிதர்களுக்கு இருக்குமா இப்படிப்பட்ட விழிகள்? ஆம், மனிதர்தான் அவர்! இளவரசர் சித்தார்த்தர். யசோதரையின் கணவர். புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் என்னை நோக்கினார் இளவரசர். அந்த ஒரு விநாடியில் அம்மா எனக்குச் சொன்ன புத்திமதியை அடியோடு மறந்தேன். அந்த அன்புத் தெய்வத்துக்கு என் இருதயத்தை அர்ப்பணித்து விட்டேன்! ஒரு வழியாக நடனம் முடிந்தது. இளவரசி யசோதரையின் கைகளிலிருந்து விலைமதிப்பற்ற முத்துமாலையொன்று பரிசாகக் கிடைத்தது. அவளுடைய பாராட்டுதல்களுக் கெல்லாம் வணக்கம் தெரிவித்தேன்.

"பாடலி! நீ அரண்மனைக்கு அடிக்கடி வந்து கொண்டிருக்க வேண்டும்" என்று எனக்குப் புன்சிரிப்புடன் விடை கொடுத்தாள். இளவரசர் அதே புன்னகையுடன் என்னை நோக்கினார். அப்புறம் நான் அரண்மனைக்கு ஒரே ஒருதரம் போனேன். ஆனால் இளவரசியைப் பார்ப்பதற்கல்ல.

* * *

"பெண்ணே! என்னவேண்டும்உனக்கு?" தமக்கே உரித்தான சாந்தம் தவழும் புன்னகையுடன் கேட்டார் இளவரசர். உத்தியானவனத்தில் அவர் தனியாக இருப்பதறிந்து அங்கே போய்ச் சேர்ந்தேன் நான். காதல் வசப்பட்டோருக்கு இதற்கெல்லாம் வழி தெரியாமலா போயிருக்கும்?

அம்மாவுக்குத் தெரியாமல் அழகாக அலங்கரித்துக் கொண்டிருந்த நான் அவர் எதிரில் தலைகுனிந்து நின்றேன். பதில் வரவில்லை. 'எனக்கென்ன வேண்டும்?' எனக்கே தெரியவில்லை.

மெல்ல எழுந்தார் அவர். என்னுடைய முகத்தை ஒருமுறை ஊடுருவிப் பார்த்தார். "பெண்ணே! இந்நேரத்தில் நீ இங்கே வந்திருக்கக் கூடாது"...... என் எண்ணம் அவருக்கு நன்றாகப் புரிந்துவிட்டது.

"வீட்டுக்குப் போ! மனத்தைத் தன் இச்சைப்படி திரிய விட்டால் துன்பம்தான் விளையும்" என்று அதே சாந்தமான புன்னகையுடன் மொழிந்தவர், விரைவாய் நடந்து மரங்களின் நிழலில் மறைந்து சென்று விட்டார்.

என் மனத்தில் இடியும் மின்னலும் பூகம்பமும் குமுறினவாயினும், கால்கள் அடித்து வைத்தாற்போல் அங்கேயே நிலைத்து விட்டன. கட்டெரிக்கும் அருவியாய்ப் பெருகிய கண்ணீருடன் அப்படியே நின்று கொண்டிருந்தேன்.

நெடுநேரம் கழித்து நான் வீடு திரும்பிய பொழுது அங்கு எனக்கு ஒரு பெரிய அதிசயம் காத்துக் கொண்டிருந்தது.

பெரிய கூடத்தில் தரை முழுதும் விலையுயர்ந்த பட்டாடைகளும், பொன்னாபரணங்களும் பரப்பப்பட்டிருந்தன. என் தாயார் அவற்றை ஒவ்வொன்றும் எடுத்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

என்னைக் கண்டவுடன், 'பாடலி! என் கண்ணே! நான் சொன்னது உண்மையாகப் போய்விட்டதடி! இதோ பார், இதை யெல்லாம்! மகதநாட்டு மன்னர் பிம்பிசாரர் அன்று உன் நடனத்தைப் பார்த்தாராம்! உன்னை உடனே தம் நாட்டுக்கு அழைத்துச் செல்ல விழைகிறாராம். நாம் நாளைக்கே அவருடன் கிளம்பியாக வேண்டும். இதெல்லாம் உனக்காக இன்று அனுப்பியிருக்கிறார்!" என்று கூறி என் தாயார் ஆனந்த மிகுதியால் என்னைத் தழுவிக் கொண்டாள்.

நான் அப்படியே கற்சிலையாய் நின்றது மகிழ்ச்சி மிகுதியால் என்று அம்மா எண்ணிக் கொண்டாள். என் இருதயத்தில் பேரிடி விழுந்தது என்பதை அவள் எப்படி அறிவாள்?

அப்படியே போய் என் மஞ்சத்தில் விழுந்தேன். என் உள்ளம் ஆயிரம் சுக்கலாய் உடைந்து கொண்டிருந்தது. நிராசையும் ஏமாற்றமும் என்னைக் கனத்த காரிருளைப் போல் கப்பிக் கொண்டன. இனிமேல் என் வாழ்க்கையில் ஒளியேது? வெளிச்சமேது? எல்லாம் ஆதியற்ற, அந்தமற்ற ஆழ்ந்த அந்தகாரம்தான்.

* * *

அடுத்த சில தினங்களில் நான் மகத தேசத்தில், பிம்பிசார மன்னரின் காதற்கிளியானாய், கடல் போன்ற மாளிகையில் சகல வித சுகபோகங்களுடனும் வாழ்க்கையை ஆரம்பித்தேன். ஆயினும் என் இதயம்? அதில் ஒன்றுமேயில்லை, வெறுமையும் சூன்யமும் தான் அங்கு நிரம்பியிருந்தன.

மன்னரின் பட்டமகிஷிக்கு மகன் பிறந்த சில தினங்களுக்கெல்லாம் எனக்கும் ஒரு மகன் பிறந்தான். எப்படியோ வருஷங்கள் ஓடி விட்டன. என்னுடைய துயரமும் ஏக்க

ழும் மட்டும், ஆறுத்தீயாய், அலையாய்ப் பெரு நெருப்பாய், என்னுள்ளே மண்டி மண்டி எரிந்து கொண்டிருந்தன. அதை அணைக்கும் வகையறியாமல் அந்தத் தீயிலேயே நானும் வெந்து கொண்டிருந்தேன். எவ்வளவோ தரம் ஓடும் நதியிலோ, அல்லது உப்பரிகையின் மீதிருந்தோ, கீழே விழுந்து உயிரை விட்டு விடலாமென்று எண்ணினேன். ஆயினும் ஏதோவொன்று கடைசி வரையில் அவ்வாறு செய்ய வொட்டாமல் என்னைத் தடுத்தது.

இந்நிலையில்தான் கபிலவாஸ்துவின் இளவரசர் சித்தார்த்தர், மனைவியையும், மகனையும், அரச போகத்தையும், அரண்மனை வாழ்வையும் அடியோடு துறந்து, மாநிலத்து வாழ் மக்களின் மனத்துயர் மாற்ற மருந்தொன்று தேடி வெளிப்போந்து விட்டதை அறிந்தேன். பாவி நானோ கொடுத்து வைக்கவில்லை! யசோதரையாவது அவருடன் நெடுங்காலம் வாழக் கொடுத்துவைக்கக்கூடாதா?

என் துரதிருஷ்டம் அம்மா ஆண்டவனிடம் போய்ச் சேர்ந்துவிட்டாள் சீக்கிரமாக.

ஒரு தினம் மன்னர் கேட்டார்: ''பாடலி! உன் மனத்தில் என்ன குறை? உன் அழகிய முகத்தில் முறுவலை நான் காணவேயில்லையே!''

நான் ஒன்றும் சொல்லவில்லை. மன்னர் என்ன நினைத்தாரோ, என்னவோ? அப்புறம் அந்தப் பேச்சைத் தொடரவில்லை.

* * *

என் மனக் குமுறல் தாங்காமல் இவ்வேடுகளை வரைகிறேன். இதை நான் உயிருடன் இருக்கையில் யாரும் காணமாட்டார்கள். அப்புறம் இவை யார் கையில் கிடைத்தாலும் எனக்கு அக்கறை இல்லை.

''மகதத்தின் பெருமைக்குத் தகுந்த தலைநகரம் இல்லையாகையால், நான் புதிதாக ஒரு நேர்த்தியான நகரத்தை நிர்மாணிக்கப் போகிறேன். யவனத்திலிருந்தும் சாவகத்திலிருந்தும் நகர நிர்மாணக் கலை நிபுணர்களைத் தருவித்திருக்கிறேன்'' என்று ஒரு நாள் மன்னர் தெரிவித்தார்.

நான் ஒன்றும் சொல்லாமல் இலேசாகச் சிரித்தேன். என்னை நோக்கியபடியே, ''பாடலி! என்னுடைய தலைநகருக்கு என்ன பெயர் தெரியுமா?'' என்றார் மன்னர்.

''தெரியாதே!''

''உன்னுடைய பெயர்தான் வைக்கப் போகிறேன். உன்னிடம் நான் கொண்டுள்ள அன்பின் அடையாளம் அதுதான்!''

நான் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டேன். 'அவ்வளவு அன்புக்கு நான் அருகதையானவளா?'—என் விழிகளில் நீர் மல்கியது.

''பாடலி!...ஏன் பேசவில்லை?.....உனக்குப் பிரியமில்லையா அது?''

நான் மௌனம் சாதித்தேன்.

'பாடலி,...பாடலி புத்திரம்...பிம்பிசார மன்னர் எனக்கு அளித்த அன்புக் காணிக்கை. ஆயினும் என் இருதயக் கோயிலை அன்புக் காணிக்கையாக அவருக்கு அர்ப்பணிக்க முடியவில்லையே!...அதில் வேறொரு பிம்பமன்றோ அசையாத இடம் பெற்று விட்டது!...பாடலி ...பாடலி!...ஏனோ நீ........'

* * *

நீர் கசிந்த விழிகளுடன் சுவடிகளைக் கீழே வைத்தாள் சாருமதி. ''பாபம்! என்ன வேதனைப்பட்டிருப்பாள் அந்தப் பேதைப் பெண்?''

''ஆம், குழந்தாய்...ஆறாத்துயருடன்தான் அவள் காலம் தள்ளியிருக்க வேண்டும்'' என்றார் சக்கரவர்த்தி.

''மந்திரி ராதாகுப்தருக்கு இவை எங்கிருந்து கிடைத்தன, அப்பா?''

''பாடலியின் மகன் சுமங்களாவின் வழி வந்தவர் ராதாகுப்தர்...அவருடைய மகள் இரத்தின ப்ரபாவுக்காக வசந்த மண்டபம் எடுக்கையில் ஒரு பாறையின் அடியிலிருந்து பேழை கிடைத்ததாம்.''

''பாவம், பாடலி,...அப்பா!...இவைகளை நான் அவரிடம் கொடுத்து விடட்டுமா?''


''வேண்டாம், குழந்தாய்!...நான் கொடுத்துக் கொள்ளுகிறேன்'' என்றார் சக்கரவர்த்தி.

சாருமதி போய் விட்டாள்.

சக்கரவர்த்தி சாளரத்தண்டை போய் நின்றார். பாற்கிண்ணத்தைக் கொட்டிக் கவிழ்த்தது போன்ற நிலவொளியில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தது பாடலிபுத்திரம். நகரின் நடுவே ஒரு நடனமேடையும் அதில் அழகுப் பிம்பமான ஆடலரசி பாடலியும் சக்கரவர்த்தியின் கற்பனைக் கண்ணில் தோற்றமளித்தனர்.. அதே சமயத்தில், தன் காதலைத் தனது தங்கைக்காகத் தியாகம் செய்து, பிக்ஷுணிக் கோலத்துடன் சிங்களம் சென்று, மதப்பிரசாரம் செய்து வரும் அருமை மகள் சங்கமித்திரை சக்கரவர்த்தியின் நினைவில் எழுந்தாள். வெம்பனி முத்துக்கள் முகத்தில் வழிந்தோட, அந்நினைவுகளில் கட்டுப்பட்டுச் சிலையாக நின்றார் சக்கரவர்த்தி.

நாட்டுக்கு நல்கிய நல்மொழி-2

கூட்டுறவுப் பண்ணையில் எல்லா நிலங்களும் இணைக்கப்பட்டு, சர்க்காரின் மேற்பார்வையில் டிராக்டர் போன்ற இயந்திரங்களைக் கொண்டு சாகுபடி நடக்கும். உணவு உற்பத்தியை அதிகரிக்க இயந்திரங்கள் பயன்



படாது. நன்செய் நிலங்களில் இவற்றை உபயோகப்படுத்த முடியாது. புன்செய் நிலங்களில் உபயோகித்தால் ஒவ்வொரு டிராக்டரும் பதினைந்து பேர்களுடைய வேலையைச் செய்துவிடும். ஏற்கெனவே இருந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகமாகும்.

—ராஜாஜி

கண்ணம்மாவின் உரிமை

அண்ணாவையும் மன்னியையும் ரெயிலேற்றி அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்ததும், கட்டிக்கொண்டிருந்த புடவையைக் கழற்றி வைக்க மனமின்றி நின்றேன். என் மன்னி கண்ணம்மாவின் ஞாபகம் அதிலே பளிச்சிட்டது. தங்கியிருந்த ஒருவார காலத்தில் சிட்டுக் குருவி போல எப்படியெல்லாம் வீட்டு வேலைகளுக்கு அவள் ஒத்தாசையாயிருந்தாள் என்பதை நினைவூட்டியது அப் புடவை. குறிப்பாக, ரெயிலுக்குப் புறப்படுவதற்கு சற்று முன்பு . . . .

★ ★ ★

. . . அது சமயம், என் ரவிக்கைக்குப் பொருத்தமான புடவைக்காகப் பெட்டியில் தேடிக்கொண்டிருந்தேன். சில மாதங்களுக்கு முன்பு அண்ணா அனுப்பியிருந்த அந்த 'வரிக்குதிரை'ப் புடவை கண்ணில் படவே, அதை வெறுப்புடன் ஒதுக்கினேன். வேறு புடவையே இல்லையோ என்று துழாக்குற்ற போது நல்லவேளையாக எனக்கு ரொம்பவும் பிடித்தமான பெங்களூர் தலைப் புப்போட்ட அரக்குக்கலர்ப் புடவை அகப்பட்டது. ஆனால் அதைப் பிரித்ததும் அந்த ஏமாற்றத்தை என்னவென்பது! நாலு விரற்கடையளவுக்குக் கிழிசல் வாயைப் பிளந்திருந்தது!

"மத்த புடவையெல்லாம் அழுக்குலே கிடக்கேம்மா. இனிமேலே அந்தப்



புலிவேஷப் புடவைதான் பாக்கி!" என்று முனகினேன்.

"அதுக்கு என்ன குறை, மீனா? எனக்காக 'அவர்' பொறுக்கியெடுத்த ஜோடியிலேதான் ஒண்ணு அனுப்பிச்சோம் உனக்கு" என்றாள் மன்னி.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இனிமேல் நான் உடுத்தவேண்டிய புடவைகளை என்னைத் தவிர வேறு யாரும் தேர்ந்தெடுக்க விடமாட்டேன்"

"ஏதேது, மீனா, நாளைக்கு உனக்குக் கலியாணமாகி, ஆசையோட உன் அகத்துக்காரர் உனக்கொரு புடவை பொறுக்கியெடுத்தால் கூட . . . . . ."

". . . வேண்டாம்னுடுவேன், ஆமாம். நான் உடுத்தற புடவைகளைத் தேர்ந்தெடுக்கிற உரிமை என்னோடதே!" என்றேன்.

"தேர்ந்தெடுக்கற உரிமை நிச்சயம் உண்டு. ஆனால் பாதுகாக்கற உரிமை?

"அப்படின்னா?"

"எந்த மாதிரி சோப் போட்டு எப்படிப்பட்ட வழியிலே துவைக்கறதுங்கற உரிமை உனக்குக் கிடையாதா, மீனா? இதோ நீயே பார், உனக்குப் பிடித்த இந்தப் புடவைக்கு நேர்ந்த கதியை! சரியான சோப் போட்டு சரியான வழியிலே துவைத்திருந்தா துணியைக் காப்பாத்தியிருக்கலாம் இல்லையா?"


"துணியைக் காப்பாற்றும் சோப்" என்றால் என்னவென்று எனக்குப் புரியவில்லை; அதற்குக் கண்ணம்மா பதிலளித்தாள் :


S/P. 6 A-30 TM

"சுத்தமான சோப் எதுவோ, அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அடியோடு போக்கும்படி கொள்ளை கொள்ளையாக நுரை தருகிற சோப் எதுவோ அதுவே துணிகளைப் பாதுகாக்கிற சோப். ஸன்லைட் சோப்பாலே சலவை செய்தால் துணிகளை அது கிழியாதபடி வெகு காலம் காப்பாற்றும்!" இது என் சிந்தனையைத் தூண்டியது: துணிகளின் மோஸ்தர், நெசவு, நிறம் முதலியவற்றைத் தேர்ந்தெடுப்பதோடு எனது உரிமை தீர்ந்துவிடுவதில்லையென்றும், துணிகளைக் காப்பாற்றும் உரிமையும் எனக்கு உண்டென்றும் உணர்ந்துகொண்டேன். பார்க்கப்போனால், என் துணிகளுக்கு உகந்த சோப் எது என்பதைத் தீர்மானிப்பதுகூட நானல்ல, வேறு யாரோ!

உடுத்துவதற்கு வேறு துணியில்லாமல் நான் விழித்த நிலையில், புன்னகை முகத்துடன் மன்னி "இந்தப் புலி வேஷப் புடவை உனக்கு வேண்டாமானால் விடு. அதோ அந்த அலமாரியில் பார் உன் புடவைகளை!" என்று அலமாரியைக் காண்பித்தாள். பார்த்த மாத்திரத்தில் பிரமித்தே போனேன். அழுக்கு மூட்டையிலிருந்த என் துணிகளெல்லாம் பளிச்சென்று சலவையாகி கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் வீற்றிருந்தன. மன்னி சொன்னாள்:

"அழுக்குத் துணிகளை ரெயிலில் சுமப்பானேன் என்று எங்கள் துணிகளை நேற்று நான் துவைத்தேனல்லவா? அப்படியே கையோடு கையாக உன்





னோட துணிகளையும் துவைத்தேன்!" ......

★ ★ ★

.....ஆச்சரியமும் மகிழ்ச்சியும் நன்றியுணர்ச்சியும் பொங்க, அப்போது தான் உடுத்திய புடவை! இப்போது அதைக் கழற்றி வைக்க மனமின்றி நின்றேன். ரெயில் வண்டி நகர்ந்து மறையும்வரை அவள் கையில் ஊசலாடிய கைக்குட்டையின் ஒளி என் நினைவிலே பளிச்சிட்டது. அலமாரியிலிருந்த துணிகளில் அந்த ஒளி பளிச்சிட்டது; நான் உடுத்தியிருந்த புடவையில் பளிச்சிட்டது; என் உள்ளத்தில் பளிச்சிட்டது!

அலமாரியில் மன்னியின் சாமான்கள் வைத்திருந்து இப்போது காலியாகியிருந்த அந்த இடத்தை நோக்கினேன். சதுர வடிவமாக ஏதோ ஒரு பொருள்! ஒரு வேளை ஸன்லைட் சோப்பின் வில்லையா? ஆம், அதுவேதான்! அவ்வளவு துணிகளை வெளுத்தபிறகு சோப் மிச்சமிருக்காது என்று நான் நினைத்ததற்கு மாறாக ஒரு பாதி வில்லை இன்னும் பாக்கியிருந்தது. அளவு கடந்த நுரை கொழிக்குமாதலால் சிறிதளவு சோப் ஏராளமான துணிகளை வெளுத்துவிடுமென்றும் அடித்துத் துவைக்காமலேயே வெண்மையும் பிரகாசமும் தரும் என்றும் உணர்த்தியது அவ் வில்லை; வீட்டுத் துணிகள் அதிக காலம் உழைத்து அதிக சிக்கனம் அளிக்கப்போவதற்கு இது எத்தகைய சுப சூசகம்!



S/P. 6 B-30 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

இலட்சிய புருஷர்

கே.எஸ். ராமசாமி சாஸ்திரி

ராஜாஜியின் தகப்பனார் ஸ்ரீ சக்கரவர்த்தி அய்யங்கார் சேலம் ஜில்லாவிலுள்ள தொரூரில் கிராம முனிசிப்பாக இருந்தார். ஊர் மக்களின் நட்புக்குப் பாத்திரமானவர். செல்வாக்குடையவர். சிங்காரம்மாள் ராஜாஜியின் தாயார். பெற்றோர்கள் ராஜாஜிக்குக் கிருஷ்ண பரமாத்மாவின் பெயரையே ராஜகோபாலன் என்று சூட்டினர். அன்பின் காரணமாக நமது தேசம் அதை 'ராஜா' என்று செல்லமாகக் குறுக்கிவிட்டது. வட இந்தியாவில் மரியாதையைக் குறிக்க வழங்கப்படும் 'ஜி' என்ற விகுதி இவருடைய பெயருடன் நிலைத்துவிட்டது.

பெங்களூரிலுள்ள 'சென்ட்ரல்' கல்லூரியில் ராஜாஜி 'இண்டர்மீடியட்' பரீட்சையைப் பூர்த்தி செய்தார். பிறகு சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் 1897-ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம் பெற்றார். அதே ஆண்டில் சுவாமி விவேகானந்தரைச் சென்னையில் அவர் சந்திக்க நேர்ந்தது. நானும் அப்பெரியாரைக் காணும் பாக்கியம் பெற்றேன். இந்து சமயத்தைப் பற்றியும் அதன் சிறப்புகளைப் பற்றியும் அவருடைய உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகளையெல்லாம் அவர் கேட்டார். சட்டப் பரீட்சை முடிந்ததும், சேலத்தில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். அலர்மேலுமங்கை அம்மையாரை மணந்து கொண்டார். அவருக்கு மூன்று புதல்வர்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். தமது மனைவி காலமான பிறகு, தெய்வபக்தி நிறைந்த நல்லவர்களாகக் குழந்தைகளை வளர்க்கும் பணியைத் தாமே மேற்கொண்டார். வக்கீல் தொழிலில் வேகமாகவே முன்னேறினார். அத்துடன் தீவிர தேசியவாதியாக மாறி இந்தியாவின் விடுதலைப் போரில் பங்கு கொண்டார். மஹாத்மா காந்தியுடன் கூடி உழைத்து அவருடைய பேரன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி விளங்கினார். சூரத் காங்கிரஸில் தீவிர வாதிகளுடன் சேர்ந்து மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை, சட்டமறுப்பு, பகிஷ்காரம் ஆகிய இயக்கங்களுக்குப் பேராதரவு காட்டிப் பேசினார். இதைச் செய்கையில் காட்ட வேண்டித் தமது வக்கீல் தொழிலைத் துறந்தார். அவர் கடைசிமுறையாக ஆஜரான பெரிய வழக்கு 1920-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கோயம்புத்தூரில் நான் சப்-ஜட்ஜாக இருந்தபோது என்னுடைய கோர்ட்டில் நடந்தது. இது முடிந்ததும் தான் அவர் வக்கீல் தொழிலை விட்டு விலகியது. தந்தை சட்ட மன்றங்களை பகிஷ்கரித்தது போலவே அவருடைய புதல்வர்கள் கல்லூரிகளை பகிஷ்கரித்து வெளியேறினர். பின்னால் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் சட்ட சபைக்குள் சென்று போராட்டம் நடத்த வேண்டுமென்று ஸ்வராஜ்யா கட்சி ஆரம்பித்தபோது ராஜாஜி, தம்முடைய கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை. ஆங்கில அரசாங்கத்தாரால் பல தடவை ராஜாஜிக்குச் சிறைத்தண்டனை கிடைத்தது. காந்திஜி சிறைச்சாலை செல்ல நேர்ந்தபோது "யங் இந்தியா" (Young India) பத்திரிகையில் ஆசிரியராக ராஜாஜி பணியாற்றினார். திருச்செங்கோடு ஆசிரமத்தை அமைத்து அதில் ஒரு சின்னஞ்சிறு குடிசையில் சந்நியாசி போலவே வாழ்ந்தார். தமிழிலும் வடமொழியிலும் பெரும் பண்டிதராகத் தம்மை வளர்த்துக் கொண்டார். அவருடைய ஆங்கில நடை சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்தது. காந்திஜி தமது பிரசித்திபெற்ற தண்டி சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியபோது நம் நாட்டில் ராஜாஜி வேதாரண்யத்துக்குச் சத்தியாக்கிரகம் செய்யப் போனார்.

அவருடைய தமிழ்ச் சிறுகதைகள் நுட்பம் மிகுந்தவை. ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் அருளிய வால்மீகியின் ராமாயணச் சுருக்கமும் வியாசபாரதச் சுருக்கமும் உலகப் பிரசித்தமானவை. அவருடைய கீதை விளக்கங்களும் உபநிஷத் சாரங்களும் அவ்வாறே புகழ் பெற்றவை. ஜனநாயகம் என்பது பற்றி அவர் எழுதிய நூல் அளவில் சிறிதாயினும் உண்மையில் மிகப் பெரிய நூலென மதிக்கப்படுகிறது.

ராஜாஜி எந்தச் சந்தர்ப்பத்திலும் நிதானத்தை இழக்காதவர். அமைதியுடனும், தைரியத்துடனும்செயலாற்றும் திறமையுடையவர். மற்றவர்களிடம் மரியாதையுடனேதான் பேசுவார். வெற்றியைக் கண்டு பெருமிதம் அடைவதையோ, தோல்வியைக் கண்டு மனம் தொடிந்து போவதையோ அவரிடம் நான் பார்த்ததே இல்லை. காந்திஜியைப் போலவே, ராஜாஜியும் கீதையில் கூறிய 'ஸ்திதப்பிரக்ஞன்' என்பதற்கு உதாரண புருஷராக விளங்குகிறார். ராஜாஜி நமது நாட்டின் முதிர்ந்த ராஜ தந்திரி. இன்றும் சுறுசுறுப்பு குன்றாமல் நாள் தவறாமல் தமது வேலையில் சளிப்பின்றி ஈடுபட்டிருக்கிறார். காந்திஜியின் லட்சியங்களான தனி மனிதனுடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கச் சுதந்திரக் கட்சியை ஆரம்பித்துள்ளார். அவர் பல்லாண்டுகள் வாழ்க!



கே.எஸ். ராமசாமி சாஸ்திரி


இருமலின்
மூலகாரணத்தை
அகற்றுங்கள்
SIROLIN
'ROCHE'
ஸிரோலின்
சாப்பிடுங்கள்
குடும்பத்தினர்
யாவருக்கும்
ஏற்ற
ஔஷதம்
ஸிரோலின் இருமலை நிறுத்து வதோடு இருமலுக்குக் காரண மான தீங்கிழைக்கும் கிருமி களைக் கொல்லவும் செய்கிறது.
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

இவர்கள்

வியாசமுனிவரா? விதுரரா? வால்மீகியா?

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

ஸ்ரீ பகவான் அருளை அடைய வேண்டிய வழிகளை மறைகள் விரிவாகக் கூறுகின்றன. தெய்வத்தின் அருள் ஒன்று தான் நம் குறைகளை அறவே நீக்கும். மறைகளின் ஸாரங்களை ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர் முதலிய மகான்கள் பல நூல்களின் மூலம் வெளிப் படுத்தினர். ஆனால் அவர்கள் கூறிய பொருள்களை யாவராலும் எளிதில் அறிய முடியாது. அந்த பாஷையின் இலக்கணம் முதலியவற்றை அறிந்தவர் களுக்கு மட்டுமே நன்கு புரியும். அவ்வாறு புரிந்து கொண்டாலும் அதன் உட் கருத்துக்களை உணர ஒரு சிலரால்தான் முடியும். அப்படி உணர முடியாதவர் களுக்கு நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலியவர்கள் வேதத்தின் உட்கருத் துக்களை எளிய நடையில் வழங்கி னர். இதே போல் வேதத்தின் உட் கருத்துக்களை இதிஹாஸ புராணங்கள் மூலம் வியாஸர், வால்மீகி முதலிய முனிவர்கள் தேவ பாஷையில் அந்தந்தக் காலத்துக்குச் சொல்ல வேண்டிய முறைப்படி வெளியிட்டனர். அந் நூல் களையும் எளிதில் எல்லோராலும் அறிந்து கொள்ள முடியாத இந்தக் காலத்தில் வியாஸர் விருந்து, கண்ணன் காட்டிய வழி முதலிய சிறந்த நூல்கள் ஸ்ரீ ராஜாஜி அவர்களால் வெளியிடப் பட்டன. அதேபோல் வால்மீகி இயற் றிய இதிஹாசத்தின் உட்கருத்துக்களை யும் "சக்கரவர்த்தித் திருமகன்" என்ற நூல் வாயிலாக வெளியிட்டிருக்கிறார்கள்.

வியாஸர் முதலிய முனிவர்கள் இதிஹாசங்களை எழுதியதன் நோக்கம் தர்மம், ஸத்யம், தெய்வம் இவைகளை உலகம் உணர்வதற்கே யாகும். தேவ பாஷையில் இந் நூல்களின் கருத்துக் களைப் படித்த பண்டிதர்களும் இப் பொழுது ராஜாஜியால் தமிழில் எழுதப் பட்ட இந் நூல்களைப் படித்து மனம் உருகுகின்றனர். தேவபாஷையில் பல அத்தியாயங்களில் உள்ள ஸாரங்களை எளிய நடையில் மிகச் சுருக்கமாகக் கூறியிருப்பது மிகவும் போற்றத் தக்கது.

சிலர் நூல்களை எழுதி விடுவார்கள். அதைப் படிப்பவர்களுக்குக் கருத்து புலப் படாமல் அமைந்து விடும். அழகாக எழுதுகின்றவர்களுக்குப் பேசும் திறமை இல்லாமல் இருக்கும். அப்படிப் பேசினு லும் உயர்ந்த கருத்துக்கள் இல்லாத சொற்களாக அமைந்து விடும். எல்லாக் குணங்களும் ஒன்றாகச் சேர்ந்து இருக் கும் இடம் இவ்வுலகில் ராஜாஜி ஒருவர் தான். இவர்கள் எழுதிய நூல்களையும் படித்தேன். சில மாதங்களாய் என் பிரவசன மத்தியில் ஆயிரக்கணக்கான ஜனங்களின் விருப்பத்தின் பேரிலும் என்னுடைய வேண்டுகோளின் பேரிலும் ராஜாஜி அவர்கள் பல நாட்கள் பேசி யுள்ளார்கள். ஒவ்வொரு தினமும் அவர்கள் பேசும் சொற்களிலிருந்து பல தர்மங்களை மனத்தில் பதித்து வைத்துக் கொள்ளும்படிக்கே இருந்தது. அவர்கள் வாக்கிலிருந்து வரும் விஷயங்கள் யாவும் வேதங்களிலும் முனிவர்கள் கூறிய தர்ம சாஸ்திரம், நீதி சாஸ்திரம், அர்த்த சாஸ் திரம் முதலியவைகளிலும் புதைந்து கிடக்கும் ரத்தினங்களேயாகும். பலவித அபிப்பிராயங்கள் உள்ள ஜனங்களின் சங்கத்தில் ஸ்ரீ ராஜாஜி சொல்லும் கருத்து யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய தாகவே உள்ளது. வெறும் மனித சக்தி வாய்ந்த ஒருவர் இம்மாதிரி பேசவோ, எழுதவோ, நினைக்கவோ முடியாது. தெய்விகமான சக்திவாய்ந்த மனிதரால் தான் செய்யக் கூடும். அவர்கள் எது சொன்னாலும் உள்ளத்தில் தாம் நம்பி உள்ளதையே கூறுகின்றனர். தம் மனத் தில் எது குறித்து நம்பிக்கை இல்லையோ, அதைக் கூறுவதில்லை. அவர்கள் எதை நம்பிச் சொல்கின்றனரோ அதுவே ஸத்ய மாகவும் ஆவதைக் கண்டு வருகிறோம். அவர்கள் பிறருக்காக எழுதுவதாக நினைத்து எழுதவில்லை. தம்முடைய ஆத்ம திருப்திக்காக எழுதியது, உலக க்ஷேமத்துக்கும் பயன்பட்டு வருகிறது. பயம், சந்தேகம் முதலியன இருந் தால் ஸ்ரீ ஹனுமானை நினைத்துக் கொண்டால் அவை நீங்கி விடும் என வும், தாம் அம்மாதிரி நினைத்துப் பயன் அடைந்து இருப்பதாகவும் ராஜாஜி அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. அதைக் கேட்கும்போது மனக் கவலை, சந்தேகம் முதலியன யாவருக்கும் நீங்கி விட்டது போலவே தோன்றும்.

நான் பல சமயங்களில் இவர்கள் கூறிய இதிகாசத்தின் ஸாரங்களைத் தனித்து வந்து யோசிப்பதுண்டு. அப் பொழுதெல்லாம் இவர்கள் வியாசரோ,



விதுரரோ, வால்மீகியோ என்றெல்லாம் நினைப்பதுண்டு. சபையிலும் என்னை யறியாமல் இம்மாதிரி கூறியதுண்டு. அவர்கள் இப்படியெல்லாம் இருப்பதை நான் மட்டிலும் அல்ல, உலகமே கண்டு ஆச்சரியப்படுகிறது. இவர்கள் சபையில் வரும்பொழுது வயதாலும், அறிவாலும் பதவி முதலியவற்றாலும் பெருமைவாய்ந்தவர்களும் மற்றும் பலரும் எழுந்து கைகூப்பி வணங்குகின்றனர். இவர்களைக் கண்டாலே தங்களுக்குப் புண்ணியம் எனவும், பாக்கியம் எனவும் புராண சிரவணத்துக்கு வந்த யாவரும் நினைக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய ஆத்ம குணமும் ஸ்ரீராமனிடத்தில் உள்ள பக்தியுமேயாகும். ஏழைகளைக் காக்க வேண்டுமென்ற சத்ய விரதமேயாகும்; சுயநலமற்ற சேவையுமேயாகும். தாம் சொல்வது போல் நடத்திக் காட்டுவதுமேயாகும். இம்மாதிரியெல்லாம் நம் தேசத்தில் முன்பு பலர் இருந்து வந்தனர். இப்பொழுது ஸ்ரீ ராஜாஜியைப் போல் உள்ளவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்பது ஜனங்கள் யாவருக்கும் தெரிந்த விஷயம். இவர்கள் பாரத தேசத்தின் புண்ணியத்தின் பயனே ஆவர். அதிலும் தென்னாட்டின் பாக்கியமேயாவார்.

இம்மகானுக்குக் கார்த்திகை மாதம் பிறந்த மாதம். இந்தக் கார்த்திகை மாதம் மக்களின் உள்ளத்திலுள்ள இருளைப் போக்கி, தீப ஒளியுடன் விளங்கும் மாதம். அதனால்தான் இம்மகானும் ஜனங்களின் உள்ளத்திலுள்ள அழுக்காகிய இருளைநீக்கி ஞானமாகிய ஒளியை உண்டாக்குகிறவராய் இருக்கிறார்கள். அத்துடன் இவர்கள் புனர்வசு என்ற நட்சத்திரத்தில் பிறந்தவர்கள். ஸ்ரீராமனே இந்த நட்சத்திரத்தில் பிறக்க ஆவல் கொண்டு அவதரித்தார். இந்த நக்ஷத்திரத்துக்கு எப்பொழுதும் மங்களமான யோகமே. வேறு கெட்ட யோகமே கிடையாது. அதனால்தான் ஸ்ரீராமனிடத்திலுள்ள பல குணங்கள் இவரிடமும் இருக்கின்றன. இவர்கள் ஒரு முறை சபையில் என் உபந்நியாஸ மத்தியில் "ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் வேதம் சொல்லும்பொழுது என் மனம் பூரிக்கின்றது" என்றும் தம்மிடத்தில் ஐந்து முனிவர்களுடைய இரத்தம் ஓடுவதே அதற்குக் காரணம் என்றும் கூறியுள்ளார். ஆதலால் இவர்கள் ஸ்ரீ வத்ஸ கோத்திரத்தில் ஜனித்தவர்கள் என்பது நன்கு வெளியாகிறது. அந்த முனிவர் உலகில் பஞ்சம் இல்லாமல் பல தான்யங்களையும் நல்ல நீர்வளத்தையும் அளித்தவர் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அதனாலேயே ஸ்ரீ ராஜாஜி அவர்கள் பஞ்சத்தைப் போக்கி, தீர்க்கமான அறிவினால் உணவுக் கட்டுப்பாட்டை நீக்கி ஏழைகளைப் பாதுகாத்தார்கள். ஐந்து முனிவர்களின் சேர்க்கையுள்ள கோத்திரத்தில் பிறந்த ஸ்ரீ ராஜாஜி அவர்களுக்கு இந்த மாதம் ஐந்தாவது திதியாகிய பஞ்சமி புனர்வசு நக்ஷத்திரத்தன்று எண்பதாவது வயது பூர்த்தியாகிறது. இம்மாதிரி வயது முதிர்ந்த பெரியவர்களைக் காணுவதே புண்ணியம்.

नित्यान्नदाता तरुणाग्निहोत्री
मासोपवासी च पतिव्रता च ।
वेदान्तवित् चन्द्रसहस्रजीवी
षड्जीवलोके मम वन्दनीयाः ॥

ஸ்ரீ பகவான் தான் ஆறு பேர்களை நமஸ்கரிப்பதாகக் கூறியுள்ளார். பசி என்று யார் கேட்டாலும் உணவு அளிப்பவன், வேதத்தில் சொல்லிய அக்னி ஹோத்திரம் எனும் கர்மத்தைச் சிறு வயதிலேயே ஆரம்பித்து நடத்தி வருபவன், பாவத்தைப் போக்கிக் கொள்ள முனிவர்கள் கூறிய நற்செயலைச் செய்பவன், தனது புருஷனிடம் அன்புடன் பணிவிடை செய்து வாழ்க்கை நடத்தும் பதிவிரதை, வேதாந்தத்தின் பொருளை உணர்ந்தவன், ஆறுவதாக ஆயிரம் பிறைச் சந்திரன் தோன்றும் வரை ஜீவித்திருப்பவன்.

இங்கு ஆயிரம் பிறை ஜீவித்தவன் சாமான்ய மனிதனுகிலும் அவனை ஸ்ரீ பகவான் நமஸ்கரிப்பதாகக் கூறியுள்ளார். ஸ்ரீ ராஜாஜி போன்ற ஆத்ம குணங்கள் நிரம்பிய உத்தமர் உலகுக்குத் தெய்வம் போன்றவரேயாவர். மேற்கூறிய ஆறு செயல்களில் ஸ்ரீ ராஜாஜி வேதாந்தங்களைக் கற்றறிந்தவராகவும், அன்ன தானத்தைச் செய்தவராகவும், ஆயிரம் பிறைகளைக் கண்டவராகவும் விளங்குகிறார். அம்மாதிரி மனிதரை ஸ்ரீ பகவானே நமஸ்கரிப்பதாகச் சொல்லியதால் அம்மாதிரி மனிதர் தெய்வத்துக்கும் மேம்பட்டவராகிறார். ஆனால் இம்மாதிரி தெய்வத்துக்கு ஒப்பாகவோ, மேலாகவோ கூறியதைத் தம் விஷயத்தில் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அம்மாதிரி மனப்பான்மை இருப்பதால்தான் அவர்களை நாம் புகழ்கிறோம். இம்மகான் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் ஜீவித்திருக்க வேண்டும். தெய்வம், ஸத்யம், தர்மம் இவற்றை உலகத்திலுள்ள எல்லா மக்களின் உள்ளத்திலும் பரவச் செய்ய வேண்டும். இம்மகானின் உபதேசங்களை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கால்கேட்டின் மூலம் பற்கள் சொத்தையாவதைத் தடுப்பதோடு

நாள் முழுவதும்

வாய் துர்நாற்றத்தையும் அகற்றுங்கள்!



ஏனெனில், கால்கேட் பற்பசை சொத்தையையும் துர்நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒரேதேய்ப்பில் **ஒழிக்கிறது!**


உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத் தான் உண்டு.

இதன் வீரியமும், நுரையும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்ந்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல்துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால்,அது:

- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினும், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர்மூலம் அடையலாம்-ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

வெண்ணிற பற்களைப் பெறவும், வாயில் நறுமணம் கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG.20T TAM.



சாந்தி

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு மாமியார். அந்த மாமியாருக்கு ஒரு மருமகள்.

* * *

மருமகளுக்குப் பதினான்கு வயது. புக்ககத்துக்கு வந்து ஐந்து நாட்களாயிற்று. ''லக்ஷ்மீ! நான் நாலு குடம் இழுத்துப் போட்டிருக்கிறேன். நீ இன்னும் நாலு குடம் இழுத்து அண்டாவை ரொப்பி விடு. நான் அடுப்பங்கரைக்குப் போகிறேன்'' என்று மாமியார் மருமகளைக் கூப்பிட்டுச் சொன்னாள்.

மருமகள் குடத்தைக் கிணற்றில் விட்டுக் கைநீட்டிக் கயிற்றை எட்டிப் பிடித்து, குடத்தை முழுகச் செய்தாள். பிறகு இழுக்கும் போது இடது கையில் வலித்தது. இழுக்க முடியவில்லை. இதைச் சொல்லிக் கொள்ள அவமானம். இடது கையை அதிகமாக உபயோகிக்காமல் காலால் கயிற்றை அமுக்கிப் பிடித்து ஒரு கையைக் கொண்டே மெதுவாகச் சமாளித்து நாலைந்து குடங்களும் இழுத்து அண்டாவை நிரப்பி வேலையை முடித்தாள்.

ஏழைப் பிராமணக் குடும்பம். கர்நாடக பழக்க வழக்கம். மருமகள் 'பெரியவள்' ஆனதும் சாந்தி முகூர்த்தம் முடித்து விட்டார்கள். தனக்கும் ஒரு மாட்டுப்பெண் வந்து விட்டாள் என்று மாமியாருக்கு மிக்க திருப்தி. அதிகாரம் செலுத்த ஓர் ஆள் அகப்பட்டால் யாருக்குமே அதில் ஒரு தனி சந்தோஷம். அரசியல் சாம்ராஜ்ய மோகத்தைப் போலவே, எல்லாருடைய இயற்கையிலும் ஒரு சாம்ராஜ்ய வேகம் உண்டு. முக்கியமாக, ஏழைக் குடும்பங்களில் பெண்களுக்கு இந்த ஆசை அதிகம்.

தனக்கு மாமியார் இட்ட எல்லா வேலைகளையும் லக்ஷ்மி சுறுசுறுப்பாகவே சந்தோஷமாய்ச் செய்து வந்தாள். ஆனால் ஜலம் இழுக்க மட்டும் முடியவில்லை. இரண்டு நாட்கள் கஷ்டப்பட்டுச் சமாளித்துக் கொண்டாள். மூன்றாம் நாள் இரவு புருஷனிடத்தில், ''ஒன்று சொல்கிறேன், கோபித்துக் கொள்ளாமல் இருப்பீர்களா?'' என்று பயந்து பயந்து சொல்ல ஆரம்பித்தாள்.

''என்ன விஷயம்? சொல்லு'' என்றான் நடேசன். அன்பாகத்தான் பேசினான்.

''கோபித்துக் கொள்வீர்கள்'' என்றாள் மறுபடியும்.

''இல்லை. தைரியமாகச் சொல்லு'' என்றான் நடேசன்.


''தண்ணீர் இழுக்க முடியவில்லை; கைவலிக்கிறது. சொன்னால் அம்மா ஏதாவது எண்ணிக் கொள்வார்கள். எனக்குப் பயமாயிருக்கிறது!'' என்று சொல்லிப் புருஷன் முகத்தைத் தான் ஏதோ பெருந் தவறு செய்தது போல் பார்த்தாள்.

முதலில் நடேசனுக்குக் கோபம் வரும்போல் தான் இருந்தது. மாமியார்-மருமகள் தகராறு ஆரம்பமாகி விட்டது என்று எண்ணினான். பிறகு மனைவி விவரமாகச் சொன்ன பின் சங்கதி தெரிந்தது. வீண் சண்டை அல்ல, மனைவிக்கு இடது கை ஊனம் என்பது தெரிந்தது.

நடேசனுக்கு அன்றிரவு வெகு நேரம் தூக்கம் வரவில்லை. காலையில் ஒரு தீர்மானத்துடன் எழுந்தான். தினமும் படுக்கையை விட்டு எழுந்ததும் தேகாப்பியாசம் செய்வது வழக்கம். அதற்குப் பதில் தானே தண்ணீர் இழுத்து அண்டாவை நிரப்பி விட்டால் தேகப் பயிற்சியுமாகும்; மனைவியின் சங்கடமும் நிவர்த்தியாகும். கையைப் பற்றி வைத்தியர்களைக் கேட்கலாம் என்று அவன் தீர்மானித்தான்.

* * *

''ஏண்டா, நடேசா! தண்ணீர் இழுக்கிறாய்? பெண்டாட்டி செய்த வேலையா? நான் அவளை நாலு குடம் இழுக்கச்சொன்னது



பெரிய தப்பாய்ப் போச்சா? அதற்காக என்னைத் தண்டிக்கிறாயா?'' என்று வெகு கோபமாகத் தாயார் பேசினாள்.

''இல்லை, அம்மா! அவள் சொன்னதற்காக நான் செய்ததல்ல, உடம்புக்கு நல்லது. நீ எல்லா வேலையும் செய். அவளும் செய்யட்டும். நான் தினமும் காலையில் என் உடம்பு ஆரோக்கியத்துக்காக இதைச் செய்கிறேன்'' என்றான்.

தாயாரிடம் லக்ஷ்மிக்குக் கையில் உள்ள ரணத்தைச் சொன்னால் அவளிடம் தீராத அதிருப்தி கொள்வாள் என்று நடேசன் உண்மையைச் சொல்லவில்லை.

தாயார் முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள். இது மருமகள் செய்த குறும்பு என்றே அவள் நினைத்தாள். லக்ஷ்மி பேரில் வெறுப்பு ஆரம்பமாயிற்று.

பார்வதியம்மாளுக்கு (இதுதான் நடேசன் தாயார் பெயர்) ஒரு மகள், சீதம்மாள்; நடேசனைவிட மூத்தவள். புருஷன் இறந்தது முதல் பிறந்தகத்திலேயே இருந்து வந்தாள். இவளுடைய தினசரி காரியக்கிரமம் பாய் மேல் படுத்துக் கொண்டு, யார் என்ன தவறு செய்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டே இருப்பது.

''உடம்புக்கு நல்லது கெட்டது என்பது வெறும் பேச்சு. எல்லாம் அவள் வேலை. இத்தனை நாட்கள் உடம்புக்கு நல்லதாக இல்லாதது இப்போது என்ன திடீர் என்று வந்து விட்டது?'' என்றாள் சீதம்மாள்.

''புருஷப் பையன், ஜலம் இழுப்பதாவது! இது என்ன வெட்கக்கேடு?'' என்றாள் தாயார்.

''அவன் பாயில் படுத்திருக்கட்டும். நான் தண்ணீர் தூக்கி அண்டாவை நிரப்பி விடுகிறேன்'' என்றாள் மகள்.

இம்மாதிரி, பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று. நடேசனுடைய இல்வாழ்க்கைப் புது நந்தவனத்தில் அன்புக்கு இடமில்லாமல் முள் பரவிப் பாழ்படுத்தியது. லக்ஷ்மியினுடைய உள்ளம் தவித்தது.


* * *

சிறு பெண் ஒருத்தி. பெரியோர்கள் செய்த சாஸ்திரத்தையும் பரம்பரையாக வந்த குல தருமத்தையும் அநுசரித்து, பெற்றோரை விட்டு, நீதான் கதி என்று தான் முன்பின் பழகாத ஒரு புருஷனை நம்பி, புத்தம் புதிய ஒரு குடும்பத்தில் புகுந்து இவ்வாறு சிக்கிக் கொண்டு தவிக்கும் உள்ளத்தை ஆண்வாசகர்கள் சரியாக உணர்வதற்குக் கொஞ்சம் கற்பனா சக்தி வேண்டும்.

புருஷனுக்குத் தெரியாமல் ஒரு நாள் அவள் மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்திருந்து கிணற்றண்டை போய், முதல் நாள் செய்தது மாதிரி இடது கைக்குத் துணையாகக் காலைக் கொண்டு எப்படியோ கஷ்டப்பட்டு ஸ்நானத்துக்கு வேண்டிய ஜலம் இழுத்து அண்டாவை நிரப்பி விட்டு வந்து படுக்கையில் படுத்துக் கொண்டாள். பிறகு நடேசன் எழுந்து வழக்கம் போல் தண்ணீர் தூக்கப் போய்ப் பார்க்கும்போது அண்டா நிறைய ஜலம் இருந்ததைக் கண்டான். தாயார்தான் இவ்வாறு செய்திருக்க வேண்டும் என்று எண்ணிப் பேசாமல் தன் காரியங்களைக் கவனித்தான்.

மறுநாளும் இவ்வாறே நடந்தது. ''சரி, இதற்கு என்ன செய்வது? நான் ஜலம் தூக்கிச் சிரமப்படுவது அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. இவ்வாறு செய்கிறாள்'' என்று எண்ணி விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் இருந்தான்.

அன்றிரவு லக்ஷ்மிக்குச் சுரம் கண்டது. இடது கை பலமாய் வீங்கி விட்டது. அதன் பிறகு நடேசனுக்கு நடந்ததெல்லாம் தெரிந்தது. ஒன்றும் செய்யத்



தோன்றாமல் குழப்பத்தில் கொஞ்ச நேரம் கிடந்தான். பிறகு தூங்கிப் போனான்.

* * *

"இவளுக்குக் கையில் ஏதோ ஊனம். இவளை ஏன் நம் வீட்டுக்குக் கட்டிக் கொண்டோம்?" என்று மறுநாள் தாயார் இரக்கமின்றிப் பேச ஆரம்பித்தாள். நடேசனுக்குத் தாங்கவில்லை. தாயாருடனும் சண்டையிட்டான். வலியினால் வருந்திக் கொண்டிருந்த மனைவியிடமும் சண்டையிட்டான். இவ்வாறு இரண்டு நாட்கள் கழிந்தது. பிறகு லக்ஷ்மியின் தகப்பனாருக்கு அவளை அழைத்துப் போகும்படி கடிதம் எழுதினான். அவரும் வந்தார்.

"பிறந்தபோதே உங்கள் மகளுக்குக் கையில் ஏதோ தொந்தரவு இருந்ததாமே? இதை எங்களுக்கு ஏன் சொல்லவில்லை?" என்றாள் பார்வதியம்மாள்.



"அம்மா! பிறந்தபோது இல்லை. எப்போதாவது வலி வந்து வீங்கிக் கொள்வதுண்டு. சொல்லாதது எங்கள் தவறுதான். ஊருக்கு அழைத்துப் போய்க் குணப்படுத்திப் பிறகு கொண்டு வந்து விடுகிறேன்" என்று மிகவும் பொறுமையாகவே அவர் சமாதானம் சொல்லி, மகளைச் சுரத்துடன் ஊருக்குக் கூட்டிக் கொண்டு போனார்.

* * *

"நல்ல இடங்கள் எத்தனையோ இருக்க, ஆயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு இவனுக்கு இந்த நொண்டியைக் கட்டி விட்டோமே! நம்முடைய கடனைத் தீர்க்க வேறு வழியில்லாமல் போச்சா? நம்முடைய துரதிர்ஷ்டம் இப்படியாச்சே!"

இவ்வாறு வீட்டில் தினமும் பார்வதியம்மாளும் மகள் சீதம்மாளும் பேசி வந்தார்கள். மனைவிக்குச் சுரமும் கை வீக்கமும் குறைந்ததாக நடேசனுக்குக் கடிதம் வந்தது. ஆனால் இன்னும் படுத்த படுக்கையாகவே கிடப்பதாகச் சமாசாரம் வேறு வழியில் கிட்டியது.

ஒரு மாதத்துக்குப் பிறகு மறுபடியும் கை வீங்கினதாகவும் பழையபடி சுரம் அடிப்பதாகவும் கடிதம் வந்தது.

"இது ஜன்மாந்திர வியாதி, நடேசா! இது சொஸ்தமாகிற வியாதி அல்ல" என்றாள் பார்வதியம்மாள்.

"அப்படியும் இருக்கலாம். நம்முடைய கர்மத்தின் பலனை நாம் அனுபவித்துத்தான் தீர வேண்டும்" என்றான் நடேசன்.

"வேறு கலியாணம் பண்ணிவிட வேண்டியதுதான். என்னால் இனிமேல் பொறுக்க முடியாது" என்றாள் தாயார்.

"கன்னாபின்னா என்று பேசாதே!" என்று கூறிய நடேசன் கச்சேரிக்குப் போய்விட்டான். அவன் தாலூக்கா கச்சேரியில் குமாஸ்தா.

ஒரு வருஷம் கழிந்தது. பார்வதியம்மாளுக்கு ஒரு தம்பி. அவருக்கு ஒரு மகள், மீனாட்சி, பதினைந்து வயது. அந்தப் பெண்ணுடன் அவர் ஒரு நாள் நடேசன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

"எப்பேர்ப்பட்ட பெண், பார்! இவள் அந்தக் காலத்தில் ரொம்பச் சிறிசாயிருந்தாள். இல்லாவிட்டால் அப்போதே உனக்கு இவளைக் கலியாணம் பண்ணியிருப்போம். இவனுக்கு இப்போது எங்கெங்கேயோ வரன் ஏன் தேடிப் போக வேண்டும்? நம் வீட்டுக் குழந்தையாகவே இருக்கட்டும்" என்றாள் பார்வதியம்மாள்.

முதலில் இந்தப் பேச்சை நடேசன் வெறுத்தான். ஆனால் விடாமுயற்சி வீண் போகாது. மறு வருஷம் சித்திரை மாதத்திலேயே திருப்பதியில் சுவாமி சந்நிதானத்தில் நடேசனுக்கு இரண்டாம் விவாகம் முடிந்து விட்டது.

2

அடுத்த ஆறுவது மாதத்திலேயே மீனாட்சி புருஷன் வீட்டுக்கு வந்து விட்டாள். பார்வதியம்மாள் மீனாட்சியிடம் மிக்க அன்பாக நடந்து வந்தாள். மீனாட்சியும் நல்ல பெண்; சுறுசுறுப்பு. சிறு பெண்ணாயிருந்தும் வீட்டு வேலை அவ்வளவும் முதலிருந்தே தானாகவே செய்ய ஆரம்பித்தாள். இவ்வாறு எல்லாம் சரியாக இருந்தாலும் நடேசன் உள்ளத்தில் சுகமில்லை. என்னவோ வேதனை பண்ணிக்கொண்டே இருந்தது.

"ஏன் என்னிடம் நீங்கள் பிரியமாக இல்லை?" என்றாள் மீனாட்சி.

"பிரியம் ஏன் இல்லை? நான் என்ன செய்து விட்டேன் உன்னை? அடிக்கிறேனா, திட்டுகிறேனா?" என்றான் நடேசன்.

"அதெல்லாம் வீண் பேச்சு, உங்கள் மனம் கிருஷ்ணபுரத்தில்தான் இருக்கிறது" என்றாள் மீனாட்சி.

கிருஷ்ணபுரம் என்பது லக்ஷ்மி நோய்வாய்ப்பட்டுக் கிடந்த ஊர். நடேசன் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

நடேசனுக்கு மறு விவாகம் ஆன சில நாட்களுக்கெல்லாம் எப்படியோ லக்ஷ்மியின் உடம்பு குணப்பட்டு விட்டது. கை வீக்கம் இறங்கி விட்டது. முழுதும் சரியாகவே போய்விட்டது.

"பார்த்தாயா அவள் வேஷத்தை! இப்போ பிறந்தகத்தில் வீட்டுக்கு வேண்டிய ஜலம் எல்லாம் அவளே இழுத்துக் கொட்டுகிறாளாமே! நம் வீட்டில் நாலு குடம் இழுக்கத்தானே அவளுக்கு முடியாமல் போய் விட்டது!" என்றாள் பார்வதியம்மாள்.

"அவள் இங்கே வரப்பார்க்கிறாளாம், வேஷக்காரி! நாம் இருக்கிற நிலையில் இந்த அறியாப் பையனுக்கு இரண்டு பெண்டாட்டி

வேறே வேண்டுமா!'' என்றாள் பார்வதி அம்மாள்.

''அது இருக்கட்டும், அம்மா! அவன் நடவடிக்கையைப் பற்றிக் கேட்டாயோ?'' என்றாள் சீதம்மாள்.

''அந்த வெட்கக்கேட்டை என்னத்துக்கு எடுக்கிறாய்?'' என்றாள் தாயார்.

''இதெல்லாம் நடேசன் காதில் விழப்படாது. ஆனால் ஊரார் வாயை அடக்க முடியுமா?'' என்றாள் சீதம்மாள்.

* * *

'ஊரார் வாய்' ஒன்றுமே பேசவில்லை. கிருஷ்ணபுரத்தில் எல்லாருக்குமே லக்ஷ்மியிடம் பரிதாபம். ''இந்த அநியாயத்தைப் பார்த்தாயா? இரண்டு நாட்கள் கையில் வாயு கண்டதற்காகத் தள்ளிப் போட்டார்களே! இப்படியும் உண்டா உலகத்திலே!'' என்றார்கள்.

''இரண்டாம் கலியாணம்கூட ஆகிவிட்டதாமே? அநீதி, அநீதி!'' என்றார்கள் சிலர். ''பாவம்! தங்கமான குழந்தை இப்படித் திக்கற்றுப் போச்சு'' என்றார்கள்.

''கோர்ட்டுக்கு இழுத்துப் புத்தி கற்பிக்க வேண்டும்'' என்றார்கள் வேறு சிலர்.

இப்படிச் சில நாட்கள் கழிந்தன. முதலில் லக்ஷ்மி தன் முகத்தை வெளியில் காட்ட வெட்கப்பட்டு வீட்டுக்குள்ளேயே இருந்து வந்தாள். எவ்வளவு நாட்கள் அந்த மாதிரி இருக்க முடியும்? ஆற்றங் கரைக்கும் கோயிலுக்கும் போக ஆரம்பித்தாள். ஆற்றங்கரையில் ஒரு அநுமார் கோயில். தினமும் ஆற்றில் லக்ஷ்மி முழுகி விட்டு அநுமார் முன் பழம் வைத்துக் கும்பிட்டுப் போவாள். ''அப்பனே! சீதையைக் காப்பாற்றினாயே! என் கதியைக் கொஞ்சம் பாரேன்!'' என்று வேண்டிக் கொள்வாள்.

* * *

இவ்வாறு இரண்டு வருஷம் கழிந்தது. ''பூர்வ ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேனோ!'' என்று உள்ளத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு லக்ஷ்மி தெய்வபக்தி குறையாமல் இருந்து வந்தாள்.



மாமியாரும் நாத்தனாரும் பேசி வந்த கொடுமைகளைச் சிலர் கிருஷ்ணபுரத்திலும் பரப்பினார்கள்.

''ஒன்றும் இல்லாமல் தள்ளி விடுவார்களா? ஏதோ பிசகு நடந்திருக்கிறது'' என்று அந்த ஊரிலும் சிலர் பேச ஆரம்பித்தார்கள். பிறகு கற்பனைக் கதைகளையும் சிலர் கட்டி விட்டார்கள். வீட்டிலும் அண்ணனுடைய மனைவி மெதுவாகப் பேச ஆரம்பித்தாள். ''என்னவான போதிலும் புருஷன் வீட்டை விட்டு எவ்வளவு நாள் வெட்கமில்லாமல் பிறந்தகத்தில் இருக்க முடியும்? இதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாமே!'' என்று லக்ஷ்மியின் காதில் படும்படியாகமுணுமுணுப்பாள். இவ்வாறுபேசுவதைத் தடுப்பார் யாருமில்லை. லக்ஷ்மியின் தாயார் இறந்து போய்ப் பல வருஷங்களாயிற்று. தகப்பனாருக்கு இப்போது வியாதி கண்டு தேகம் மெலிந்து வந்தது. பிறகு செருப்புக் கடித்த புண் சீழ் பிடித்துக் கொண்டு படுத்த படுக்கையாக மூன்று மாதம் கிடந்தார். லக்ஷ்மி இந்த மூன்று மாதங்களும் தகப்பனாருக்குப் பணி செய்வதில் ஈடுபட்டுத் தன் துயரத்தை ஓரளவு மறந்திருந்தாள்.

ஒரு நாள் தகப்பனார் மகனைக் கூப்பிட்டு, ''அப்பனே! நான் பிழைக்கப் போவதில்லை. உனக்கு ஒன்று சொல்லுகிறேன். எப்படியாவது மாப்பிள்ளையிடம் போய்க் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு லக்ஷ்மியை அந்த வீட்டில் சேர்த்து விடு; தெய்வம் விட்ட வழியாகட்டும். எனக்குப் பின் அவள் இந்த வீட்டில் இருக்க முடியாது'' என்று சொல்லித் துயரத்தை அடக்க முடியாமல் விம்மி விம்மி அழுதார். அந்த இரவே அவருக்கு நினைவு தப்பி, மூன்று நாட்கள் அப்படியே கிடந்து, பிறகு பிராணன் போய் விட்டது.

3

லக்ஷ்மி தமையனும் தகப்பனார் ஆணைப்படி பல முயற்சிகள் செய்தான். ஒன்றிலும் பயன் படவில்லை. ''கெட்டுப் போன அவலக்ஷணங்கள் இந்த வீட்டு வாசலை மிதிக்கக் கூடாது'' என்றாள் பார்வதியம்மாள். மகள் சீதம்மாளும் அப்படியே கண்டிப்பாகச் சொன்னாள். நடேசனுக்கு இதைப் புறக்கணிக்க மனமிருந்தும் தைரியமில்லை. லக்ஷ்மியின் தமையனிடம், 'முடியாது' என்று சொல்லி அனுப்பி விட்டான்.

* * *

ஆற்றங்கரை அநுமாரை வணங்கி விட்டு வழக்கம் போல் அவ்விடம் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தாள் லக்ஷ்மி.

''ஏனம்மா அழுகிறாய்?'' என்றான் அங்கே நின்ற ஒரு மாட்டுக்காரப் பையன். இவனுக்கு லக்ஷ்மி தினமும் அநுமார் சந்நிதியில் பூஜைக்கு வைக்கும் பழத்தை வழக்கமாகக் கொடுப்பாள். அவன் வாங்கிச் சாப்பிடுவான். இருவருக்கும் இவ்வாறு பழக்கம் ஏற்பட்டிருந்தது.

அவன் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் கொஞ்ச நேரம் அழுது கொண்டேயிருந்தாள்.

''சும்மா அழாதே, அம்மா! சாமி இருக்கு, ஏன் அழுகிறாய்?'' என்றான் அந்தப் பையன்.

''தம்பி! சாமிக்கு என் மேல் இரக்கமில்லை. செத்துப் போக வேண்டுமென்று எனக்கு

ஆசை; சாவு வரவில்லையே என்று அழுகிறேன்'' என்றாள்.

''எங்க அக்கா இப்படித்தான் அழுது அழுது ஒரு நாள் கிணற்றில் விழுந்து செத்துப் போனாள். அவள் புருஷன் அவளை அடிச்சு அடிச்சு அதைப் பொறுக்க முடியாமல் அவள் அப்படிச் செய்தாள். குடிகாரப் பயல் அக்காளை இப்படிச் செய்து விட்டான்'' என்றான் மாட்டுக்காரப் பையன்.

''அப்பனே! என்னை என் புருஷன் அடித்தால் நான் பொறுத்துக் கொள்ளுவேன். எவ்வளவு வேண்டுமானாலும் அடிக்கட்டும்; அதைப் பொறுத்துக் கொள்ளலாம்.''

''அடிக்காமல் போனால் ஏன் அழுகிறாய்?'' என்றான் அந்தப் பையன்.

''நான் சொன்னால் உனக்குத் தெரியாது, தம்பி! உன் அக்கா செத்துப் போனாள். இப்போ அவள் சுகமாக இருக்கிறாள். நானும் அப்படியே செத்துப் போகலாம் என்று நிர்மானித்து விட்டேன். ஆனால் பயமாக இருக்கிறது. என் கூட வா, தம்பி! பெரிய மடுவரையில் வருவாயா?'' என்றாள்.

''எங்கே? தண்ணீரிலே விழவா? நான் வரமாட்டேன்'' என்றான் பையன்.

''வர மாட்டாயா? சரி, நானே போகிறேன்'' என்று சொல்லி அனுமார் முன் மறுபடியும் விழுந்து கும்பிட்டு நீண்ட நேரம் பேச்சில்லாமல் கிடந்தாள். பிறகு எழுந்து வேகமாக நடந்து ஆற்றின் பெரிய மடுவண்டை போனாள்.

''வேண்டாம்! வேண்டாம்! உன் காலில் விழுகிறேன் தாயே! எல்லாம் சரியாகப் போகும். தண்ணீரில் செத்தால் பிசாசாய்ப் போவாய், வேண்டாம்!'' என்று மாட்டுக்காரப் பையன் கூப்பாடு போட்டுக் கொண்டு பின்தொடர்ந்து ஓடினான்.



பெரிய மடு என்பது வேனிற் காலத்தில் ஆற்றில் ஆழமான ஓர் இடம். இப்போது பெரும்பிரவாகமாக ஆற்றில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. மத்தியான வேளை. யாரும் மனித சஞ்சாரமே இல்லை. மாடு மேய்க்கும் பையன்கள் சிலர் மட்டிலும் அக்கரையில் தூரத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு விஷயம் எட்டவில்லை. லக்ஷ்மி தண்ணீரில் குதித்தவுடன் பையன் திகிலடைந்து திரும்பி ஓடி விட்டான்.

4

பார்வதியம்மாள்: ஆற்றில் விழுந்து செத்தாளாமே! நல்லதாப் போச்சு!

சீதம்மாள்: நம்ம வீட்டுப் பெயர் இனி எல்லார் வாயிலும் இருக்காது. பிழைத்தோம்.

மீனாட்சி: துர்மரணமாகச் செத்துப் போனால் பிசாசாகப் போகிறாளாமே!

பார்வதியம்மாள்: ஆமாம்! அப்படித்தான் கஷ்டப்படுவாள். படட்டும்.

பார்வதியம்மாளும் சீதம்மாளும் மருமகள் மீனாட்சியும் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது மீனாட்சி கர்ப்பிணி. ஏழாவது மாதம்.

இரண்டு மாதங்களுக்குப் பின் மீனாட்சிக்குச் சுகப் பிரசவமாயிற்று; பெண் குழந்தை. நடேசன் வீட்டில் இப்போது மகிழ்ச்சி நிரம்பிற்று. நடேசனுடைய உள்ளம்கூட லக்ஷ்மியைப் பற்றி நிம்மதி அடைந்தது. மரணத்தை ஒரு பெரிய கேடாக எண்ணி வருகிறோம். ஆனால், அதுவே பல கஷ்டங்களுக்கும், துக்கங்களுக்கும் நிவாரணம். அது இல்லாவிடில் வாழ்க்கை ஒரு தீரா நரகமாய்ப் போகும். லக்ஷ்மி ஆற்றில் விழுந்து செத்துப் போய் விட்டாள் என்றதும், எவ்வளவு வியாகூலங்கள் பல பேருக்குத் தீர்ந்து போயிற்று!

* * *

பிரசவமாகிப் பத்தாவது நாள், மீனாட்சிக்கு இலேசாகச் சுரம் கண்டது. ''ஒன்றுமில்லை, சரியாகப் போகும்'' என்றாள் பார்க்க வந்த கிழவி ஒருத்தி.

மறு நாள் மீனாட்சி படுத்த படுக்கையாக ஏதோ 'கன்னாபின்னா' என்று பேச ஆரம்பித்தாள். ''சும்மா இரு!'' என்று அதட்டினாள் மாமியார்.

மீனாட்சி ஒரு விழி விழித்தாள். பிறகு, ''ஆமாம், சும்மா இருப்பேன்! என்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டாயோ இல்லையோ? விடுவேனா உன்னை?'' என்றாள். மறுபடியும், ''நீ குழந்தை பெற்று விட்டாயா? யாருடைய குழந்தை இது? கிளம்பு! ஓடு. ஆற்றில் விழுந்து சா!'' என்று பேயாகக் கத்தினாள் மீனாட்சி.

கண்கள் பயங்கரமாகச் சுழன்று உடல் 'விறு விறு' வென்று கட்டை போல் ஆயிற்று. கொஞ்ச நேரம் அப்படியே கிடந்தாள். பிறகு படுக்கையை விட்டு எழுந்தோட ஆரம்பித்தாள்.

''ஐயோ! அவளுடைய பிசாசம்மா இது!'' என்றாள் சீதம்மாள் நடுநடுங்கி.

''சுவாமி, அப்பனே! உனக்கு எது வேண்டுமானாலும் கொடுக்கிறேன். மாரியம்மா, என்னைக் காப்பாற்று!'' என்று கதறினாள் பார்வதியம்மாள்.

மாரியம்மன்கோயில்பூசாரிக்குச் சொல்லி யனுப்பி ஒரு கோழியைப் பலி கொடுக்க ரகசியமாய்ப் பார்வதியம்மாள் ஏற்பாடு செய்தாள்.

ஜோசியம் சீதாராமய்யர் வந்து மந்திரம் ஜெபித்து விபூதி கொடுத்தார். விபூதியைக் கையில் வாங்கிப் படுக்கை மேல் வைத்துக் கொண்டு மீனாட்சி கொஞ்சம் சாந்தமானாள். விபூதியின் சக்தியைக் கண்டு எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்.

''பூசிக் கொள்'' என்றான் நடேசன்.

''பூசிக் கொள்கிறேன்'' என்று வெற்றிலை மேல் வைத்திருந்த விபூதியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

திடீர் என்று விபூதியை ஊதி இறைத்துப் போட்டு ''ஹா! ஹா!'' என்று கதறினாள்.

"விடுவேனா உன்னை? அந்த மாமியாரைக் கூப்பிடு. அவனுக்குச் செய்கிறேன் வேலை! விபூதியைக் கொடுத்து ஏமாற்றப் பார்த்தாளா ?" என்று உன்மத்தச் சிரிப்பு சிரித்தாள்.

"ஐயோ பாவி, ஆற்றில் விழுந்து செத்தவள்தான் இது. கொண்டு வா, துடைப்பக் கட்டையை!!" என்றாள் பார்வதி.

சீதம்மாள் துடைப்பக் கட்டையைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

பார்வதியம்மாள் அதை வாங்கி மீனாட்சியை இரண்டு மூன்று அடி தலையில் அடித்தாள்.

"ஐயோ, ஐயோ, அடிக்க வேண்டாம்!" என்று கதறினாள் மீனாட்சி.

"போ! போ!" என்று மறுபடியும் அடிக்க ஆரம்பித்தாள்பார்வதியம்மாள்.

"போதும்! போதும்!" என்று தடுத்தான் நடேசன்.

"உனக்குத் தெரியாது, நடேசா! நீ தூரப் போ!" என்று கத்தினாள் பார்வதியம்மாள்.

இவ்வாறு ஐந்து நாட்கள் பிசாசு வேட்டை நடந்தது. ஒன்றும் பயனில்லை. வைத்தியம் அதிகமாயிற்று.

"இது சூதக வாய்வு" என்றார்கள் சிலர்.

"இது ஒரு கறுப்பு" என்றார்கள் வேறு சிலர்.

"ஐயோ! இது அவன்தான்!" என்றாள் சீதம்மாள்.



"கோழி கொடுத்தது போதாது: அம்மன் பெரிய பலி கேட்கிறது. வெள்ளாடு கேட்கிறது" என்றான் பூசாரி ரகசியமாகப் பார்வதியம்மாளிடம். அதற்கும் பார்வதியம்மாள் நடேசனுக்குத் தெரியாமல் ஏற்பாடு செய்தாள். ஆனால் ஒரு நன்மையும் ஏற்படவில்லை.

"இதுவும் என் தலைவிதியோ, ஈசனே!" என்று நடேசன் அலறித் திகைத்தான்.

*   *   *

நாலு அமாவாசை தீர்ந்தால் சரியாய்ப் போகும் என்று விபூதி கொடுத்த ஜோசியம் சீதாராமய்யர் சொன்னபடி நாலு மாதங்களை கழித்து மீனாட்சிக்குச் சுகப்பட்டு விட்டது. எல்லாம் ஒரு பெரிய கனவு போல் தீர்ந்தது. இப்போது வீட்டில் ஒரு புது அமைதியும் பக்தியும் ஏற்பட்டது. லக்ஷ்மியைப் பற்றி ஓரளவு எல்லாருக்கும், பார்வதியம்மாளுக்கும் கூட மரியாதை உண்டாயிற்று. அவளைப் பற்றிப் பேசுவதை நிறுத்தி விட்டார்கள். மீனாட்சி புருஷனிடம் மிக்க அன்பாகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்து கொண்டாள். தான் ஏதோ மெய்மறந்து தவறுகள் செய்து விட்டதாக அவளுக்கு ஒரு வெட்கம். எப்படியோ தப்பினோம் என்று அதைப் பற்றி ஒன்றும் பேசாமல், எல்லாரும் சாமர்த்தியமாக நடந்து கொண்டார்கள்.

ஒரு வருஷத்துக்குப் பின் மீனாட்சி மறுபடியும் கர்ப்பம் தரித்தாள். பார்வதி ரொம்ப ஜாக்கிரதையாகக் கோயில்களுக்குப் பகிரங்கமாகவும் ரகசியமாகவும் வேண்டிக்கொண்டு, பூஜை பலி எல்லாம் நடத்தினாள். பிரசவ காலம் நெருங்கியதும் நடேசன் பக்கத்து ஊரான பாகலூரில் பாதிரியார் நடத்தி வந்த ஆஸ்பத்திரியில் பிரசவம் பார்க்கும் மருத்துவச்சியைத் தருவிப்பதற்கு ஏற்பாடு செய்தான். உள்ளூர் மருத்துவச்சி போன தடவை உதவியதில் பிசகு ஆயிற்று. இந்தப் பிரசவத்துக்குத் தேர்ச்சி பெற்ற மருத்துவச்சி வருவது நலம் என்று எல்லோருமே ஆட்சேபனை சொல்லாமல் ஒப்புக் கொண்டார்கள்.

*   *   *

மீனாட்சியின் இரண்டாவது பிரசவம் யாதொரு கஷ்டமுமின்றி முடிந்தது. ஆண் குழந்தை பிறந்தது. பிரசவத்தின்போது பக்கத்தில் ஆஸ்பத்திரி மருத்துவச்சி இருந்தாள். ஒரு மாதம் வரையில் தினம் ஒரு தடவை வந்து பார்த்துப் போனாள். தாய்க்குப் புத்தி மாறாட்டம் ஏதும் உண்டாகாமல் குழந்தைக்குப் பால் கொடுத்து வந்தாள். சென்ற தடவைபோல் ஏதாவது கோளாறு உண்டாகுமோ என்று நடேசன் மிகவும் பயந்திருந்தான். அப்படி எதுவும் உண்டாகாமல் எல்லாம் சரியாக நடந்ததில் அவனுக்கு மிக மகிழ்ச்சி. எங்கேயோ கடன் வாங்கி மருத்துவச்சிக்குப் பத்து ரூபாய் கொடுக்கப் போனான்.

"வேண்டாம்!" என்று அவள் மறுத்து விட்டாள்.

"என்னால் இவ்வளவுதான் கொடுக்க முடியும், தாயே! கோபித்துக் கொள்ள வேண்டாம், எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று வற்புறுத்தினான்.

"வேண்டாம், இந்தப் பிரசவத்துக்கு நான் பணத்துக்காக வரவில்லை. அன்பு காரணமாகவே வந்தேன்" என்று சொல்லி விட்டு, மீனாட்சியின் பெண் குழந்தையைத் தூக்கி எடுத்து விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் கழித்து, "நான் போய் வருகிறேன், மீனாட்சி!" என்று விடை பெற்றுக் கொண்டு போய் விட்டாள்.

மருத்துவச்சி தன்னுடன் பேசியபோது நடேசனுக்கு ஏனோ முதல் மனைவி நினைவு வந்தது. அதைப் பற்றி ஞாபகப்படுத்திக் கொள்ளக் கூடாது என்று மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டான்.

5

"சாந்திதேவி! அந்த வீட்டில் நீ போயிருந்த போது உன்னை யாரும் கண்டுகொள்ளவில்லையா?" என்றார் பாகலூர் ஆஸ்பத்திரிப் பாதிரியார். சாந்திதேவி என்பது லக்ஷ்மியின் புதுப் பெயர்.

"ஆஸ்பத்திரி வேஷம் காப்பாற்றிற்று. பெண்டுகளுக்குக் கொஞ்சங்கூடத் தெரிய

வில்லை. பிரசவ ஸ்திரீக்கு என் அடையாளமே தெரியாதல்லவா? புருஷர் என்னை உற்றுப் பார்க்கவில்லை. மரியாதையாக விலகி நின்றார். கடைசி நாள் நான் பேசியபோது மட்டும் கொஞ்சம் ஏதோ சந்தேகப்பட்டது போலிருந்தது. ஆனால் என் முக்காட்டை இழுத்து முகத்தைப் பாதி மூடிக்கொண்டு சமாளித்து விட்டேன்.''

''சரி, உன் மனம் நிலையில் இருக்கிறதா?''

''இருக்கிறது, ஐயனே! நோயாளிகளுக்குச் சிசுருஷை செய்வதில் எனக்குச் சாந்தி ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் என்னை ஆற்றிலிருந்து எடுத்துப் போட்டுக் காப்பாற்றாமல் இருந்தீர்களானாலும் நான் பிசாசாகத்தானே போயிருப்பேன். அந்த மாட்டுக்காரப் பையன் சொன்னபடி!''

பாதிரியார் சிரித்தார். ''பிசாசு கிசாசு ஒன்றும் கிடையாது. அது மூடர்கள் பேச்சு. ஆனால், நீ சந்தோஷமாக இருக்கிறாயா?'' என்றார்.

''சந்தோஷமில்லை. ஓரளவு சாந்தி அடைந்திருக்கிறேன். அவ்வளவு போதும். கடவுளும் நீங்களும் இருக்கிறீர்களல்லவா?'' என்றாள்.

''புருஷனிடம் போயிருக்க உனக்குச் சம்மதமா? நான் எல்லாம் விவரமாகச் சொல்லி ஏற்பாடு செய்ய முடியும்'' என்றார்.

''வேண்டாம், அப்பனே! அந்த அறியாப் பெண் சுகமாக இருக்கிறாள். அந்தச் சுகத்தை நான் ஏன் போய்க் கெடுக்க வேண்டும்? இந்த நோய்ச் சிசுருஷை வேலையில் எப்படியோ நான் காலந்தள்ளி வருகிறேன்'' என்றாள்.

''புருஷனிடம் போயிருக்கப் பிரியம் இல்லாவிட்டால், ஏன் நீ ஞான ஸ்நானம் செய்து எங்களோடு ஒன்றாக இருக்கக் கூடாது?'' என்றார் பாதிரியார்.

''அனுமார் கோபித்துக் கொள்வார்!'' என்று சொல்லி அவள் சிரித்தாள்.

* * *

அடுத்த தீபாவளியன்று 'சாந்திதேவி' ஒரு கட்டுப் பட்டாசும் ஒரு பெரிய பொட்டணம் மிட்டாயும் கொஞ்சம் பூவும் வாங்கி ஒரு பையில் போட்டுக் கொண்டு மீனாட்சியின் ஊருக்குப் போனாள். வீட்டு வாசலில் மீனாட்சியின் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது.

''கமலா! இந்தா உனக்குப் பட்டாசு'' என்றாள். குழந்தை ஓட்டமாக ஓடி வந்தாள். பிரசவம் பார்த்த மாமியின் அடையாளத்தைக் கண்டு கொண்டாள். பட்டாசும் மிட்டாயும் கையில் வாங்கிக் கொண்டு பூவைச் சூட்டத் தலையைக் காண்பித்தாள். லக்ஷ்மியும் புஷ்பத்தைச் சூட்டிக் குழந்தைக்கு ஒரு முத்தம் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினாள்.

''அம்மா! அம்மா!'' என்று கூப்பாடு போட்டுக் கொண்டு கமலம் தாயாரிடம் போய் விஷயத்தைச் சொன்னாள்.

''அந்த மருத்துவச்சி ரொம்ப நல்லவள் போலிருக்கிறது!'' என்றாள் மீனாட்சி, மாமியாரிடம்.

நடேசன் வீட்டுக்கு வந்ததும், பார்வதியம்மாளும் ஆஸ்பத்திரி மருத்துவச்சி அன்று வந்து குழந்தைக்குப் பட்டாசும் மிட்டாயும் கொடுத்துப் போனாள் என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள்!

மணிமொழிகள்

கண்ணனும், பார்த்தனும், சீதையும், அனுமனும், பரதனும் பூஜைக்கு உரிய உயிர் கொண்ட உண்மை மூர்த்திகள். வெறும் கதாபாத்திரங்களல்ல. பெரியோர்களையும் பெற்றோர்களையும் வீர புருஷர்களையும் பார்த்து அவர்களைப் பின்பற்றுவது ஒருவிதம்; கதைகளைப் படித்துப் பின்பற்றுவது மற்றொருவிதம். பரதனையும், சீதையையும், பீமனையும் பின்பற்றுவது உயிர் கொண்ட முன்னோர்களைப் பின்பற்றுவதுபோல். கங்கையினின்றும், காவேரியினின்றும் தாகத்துக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த ஆறுகள் குடி தண்ணீர் சாதனங்கள் மட்டுமல்ல; ஜீவ நதிகள். வணங்க வேண்டிய தெய்வங்கள்.


* * * *

தருமம் நியாயம் இவற்றைக் காண்பது எளிது; கடைப்பிடித்தல்தான் அரிது. கண்டதைக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய ஆற்றல் சிலருக்கு உண்டு; சிலருக்கு இல்லை. திருதராஷ்டிரன் அந்த ஆற்றல் இல்லாமல் துன்பத்தில் மூழ்கினான். திருதராஷ்டிரன் பட்ட துயரத்தைப் படித்து அறிவோடு ஆற்றலும் நமக்குக் கொடுக்க வேண்டும் என்று நாம் கடவுளை இறைஞ்ச வேண்டும்.

— 'வியாசர் விருந்'தில் ராஜாஜி


மலரன்ன
மிருது வதனத்திற்கு
Remy
ரெமி
பவுடர் &
ஸ்னோ





அகில இந்திய

கைத்திறன் கலைப்பொருள் வாரம்

பொருட்காட்சி

5-12-59 முதல் 13-12-59 வரை

நடைபெறும் இடம் :—

தொழில் இலாகா விற்பனை நிலையம்

166-A, மவுண்ட் ரோடு, சென்னை-2.

பண்டைய கைத்திறன் கலைப்பொருட்களை ஆதரியுங்கள்



கீழ்க்கண்ட இடங்களிலும் இந்த வாரத்தில் விற்பனையாகும் கலைப் பொருள்களுக்கு ரூபாய்க்கு 10 ந பை. தள்ளுபடி உண்டு.


ஹாண்டிகிராப்ட்ஸ் எம்போரியம், சென்னை.
விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட். ,,
காதி கிராமோத்யோக் பவன். சென்னை.
இண்டஸ்ட்ரீஸ் சேல்ஸ் எம்போரியம்.
நாகர்கோயில், தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை, ராமேஸ்வரம், திண்டுக்கல், கரூர், சேலம், கோயமுத்தூர், ஊட்டி, வேலூர், கும்பகோணம்.



பொருட்காட்சி பொதுமக்களுக்கு 6-12-59 முதல் 13-12-59 வரை மாலை 3 முதல் 7 மணி வரை திறந்திருக்கும்.


பிரவேசம் இலவசம்





SISTA'S

வேங்கையின் மைந்தன்



எட்டாம அத்தியாயம்

தந்திரம் வெல்லுமா ?

வீரமல்லன் மதுரைமாநகரை விட்டுத் தஞ்சைத் தலைநகருக்குப் புறப்பட்ட அன்று, பெரும்பிடுகு முத்தரையரின் மகள் திலகவதியிடம் சென்று விடைபெற்றுக்கொண்டு வரத் தவறவில்லை. அவளைச் சந்தித்துப் பேசி விட்டு வந்ததோடல்லாமல், அவள் வாயிலாக அவள் தந்தைக்கும் அவன் செய்தி கூறிவிட்டு வந்தான்.

அவன் அப்படிச் செய்ததற்குப் பல காரணங்கள் இருந்தன.

திடீரென்று அவன் மதுரையை விட்டு மறைந்து போனால் திலகவதி வீணாகச் சந்தேகப்படுவாள். அவளுடைய சந்தேகம் அவள் தந்தைக்குப் பரவாமல் இருக்காது. வீரமல்லன் இதைச் சிறிதும் விரும்பவில்லை.

பெரும் பிடுகு முத்தரையர் சுந்தரபாண்டியரின் சேனாபதியாக இருந்தாலும் அவர் வீரமல்லனின் குலத்தைச் சேர்ந்தவர். அவனும் ஒரு முத்தரையன் என்பதாலேயே அவனை எளிதில் நம்பியவர். அவருடைய நம்பிக்கை, சுந்தர பாண்டியரிடம் அவனுக்குப் பரிச்சயம் ஏற்படுத்தி வைக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டதை நினைத்து வீரமல்லன் வியப்படைந்தான்.

முத்தரையரைப் பகைத்துக் கொள்ளவும் அவனுக்கு எண்ணமில்லை ; தான் ஓர் ஒற்றன் என்று காட்டிக் கொள்ளவும் அவன் விரும்பவில்லை. மேலும் அவருக்கு ஓர் அழகான அசட்டுப் பெண் இருந்தாள். பெண்களுக்கு அறிவு தேவை என்று அப்போது வீரமல்லன் நினைக்கவில்லை. அவளிடம் அழகு இருந்தது; கண்கவரும் பேரழகுடன் அவள் அவனுக்குத் தோற்றம் அளித்தாள்.

அகிலன்

தந்தையும் மகளும் சேர்ந்து அவன் வீரத்தைப் புகழ்ந்தார்கள்; வித்தையைப் பாராட்டினார்கள். சோழர்களால் அவன் அலட்சியப்படுத்தப்பட்டதாகக் கூறியவுடன், அவனிடம் அன்பு காட்டி ஆறுதல் அளித்தார்கள். அவர்களது வீட்டில் அவனுக்கு அறுசுவை விருந்தும் ஆர்வம் மிக்க உபசாரமும் கிடைத்தன. வளம் நிறைந்த ஓர் எதிர்கால வாழ்வுக்கே அவர்கள் வழி வகுத்துக் கொடுப்பார்கள் போல் தோன்றியது.

இவ்வளவுக்குப் பிறகும் வீரமல்லனால் எப்படி அவர்களை மறக்க முடியும்? கடமை மறவாத சோழ நாட்டானாக இருந்தால் அது வேறு விஷயம். தனது நண்பன் இளங்கோவைப் போல் வாழ முடியவில்லையே என்று மனத்தில் குறைக் குழி தோண்டிக் கொண்டவன் அவன். அந்தக் குழிக்குள் பொறாமையின் வித்தை ஊன்றிக் கொண்டவன்.

சோழப் பேரரசின் செஞ்சோற்றுக் கடனை அவன் மறந்து விட்டானா? நன்றி உணர்ச்சியை அவன் மென்று தின்று விட்டானா? அதிகார வெறியால் ஆடிச் சுழன்ற எத்தனை எத்தனையோ மனிதர்களை இந்த மண்ணுலகம் பொறுமையோடு தாங்கி வந்திருக்கிறதே!

முத்தரையரின் வீட்டுக்குள் வீரமல்லன் நுழைந்தபோது, அவன் விரும்பியது போலவே அவர் வெளியில் சென்றிருந்தார். யாரோ தன்னைத் துரத்தி வருவது போன்ற பாவனையில் அவன் பரபரப்போடு சென்று வீட்டினுள்ளே எட்டிப் பார்த்தான்.

"இலகவதி! உன் தந்தையார் இருக்கிறாரா? அவசரமாக ஒரு செய்தி சொல்லி விட்டுப் போக வந்தேன்."

"அவசரம் எதற்கு? இப்படி வந்து அமர்ந்து பேசுங்கள்" என்று ஆசனத்தைச் சுட்டிக் காட்டினாள் இலகவதி. மாலையில் அவளுடன் திரும்பியவர் மீண்டும் எங்கோ சென்றதாகக் கூறினாள்.


"விவரமாகச் சொல்வதற்கு இப்போது பொழுதில்லை. நான் மெய்யப்பரின் அங்காடியில் பணியாற்றுவதை எப்படியோ சோழ நாட்டு ஒற்றர்கள் கண்டு விட்டார்கள். என்னால் மெய்யப்பருக்குத் தொல்லை வரும்போல் தெரிகிறது. நான் இனி மதுரையில் தங்குவது நல்லதல்ல. உடனடியாகத் தென்பாண்டி நாட்டுப் பக்கம் புறப்படுகிறேன். உன் தந்தையார் வந்தால் நான் விடை பெற்றுக் கொண்டதாகக் கூறி விடு" என்றான் வீரமல்லன்.

இதைக் கேட்டவுடனேயே கண்கள் கலக்கமுற்றன இலகவதிக்கு. "வீரர்களை எந்த விநாடியிலும் ஆபத்துச் சூழ்ந்து கொண்டிருக்கும் என்று என் தந்தையார் அடிக்கடி கூறுவார்கள். உங்கள் விஷயத்திலும் அது உண்மையாகி விட்டது.—கனவில் தோன்றுவதுபோல் தோன்றி விட்டு இப்போது மறையப் பார்க்கிறீர்களே!"

"எனக்கு விடை கொடுத்து அனுப்பு இலகவதி!" என்று பதறினான் வீரமல்லன்.

"முடியாது! நீங்கள் இங்கேயே இருந்து





விடுங்கள். தந்தையார் வந்தவுடன் உங்களுடைய பாதுகாப்புக்கு அவரை ஏற்பாடு செய்யச் சொல்கிறேன். பகைவர்களுக்கு அஞ்சிக் கொண்டு நீங்கள் வேறெங்கும் போக வேண்டாம். நம்முடைய வீட்டுக்கடியில் கூட நிலவறைகளும் சுரங்கப் பாதைகளும் நிறையஇருக்கின்றன.''

முத்தரையர் திரும்பி வருவதற்குள் திலகவதியிடமிருந்து எப்படியாவது தப்பிச் செல்லப் பார்த்தான் வீரமல்லன். திலகவதியோ அவனை விடுவதாகவே இல்லை. கடைசியில், தனக்கு அவளிடம் அளவற்ற அன்பும் பற்றுதலும் இருப்பதாகவும், அவளை மறக்கவே முடியாதென்றும் விரைவில் திரும்பி வந்து விடுவதாகவும் கூறி மன்றாடினான்.

"திலகவதி! இப்போதுதான் நம்மவர்கள் போருக்குச் சித்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குள் நான் இங்கிருப்பது பகைவர்களுக்குத் தெரிந்து விட்டால், திடீரென்று என் பொருட்டுப் போர் தொடங்கினாலும் தொடங்கி விடும். என்றால் உன் தந்தையாருக்கோ, உனக்கோ உடனடியாகத் துன்பம் வரக்கூடாதல்லவா? ஒற்றர்களுக்குப் போக்குக் காட்டி விட்டு எப்படியும் சில மாதங்களில் திரும்பி வந்து விடு

நாட்டுக்கு நல்லிய நல்மொழி - 3



அரசாங்கம் வர்த்தகத்தில் ஈடுபடுவதைப் போன்ற முட்டாள்தனம் வேறு இருக்கவே முடியாது-குஜராத்தி மொழியில் இது சம்பந்தமாக ஒரு பழமொழி வழக்கில் இருந்து வருகிறது. "அரசாங்கம் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தால் மக்கள் பிச்சை எடுக்க ஆரம்பிப்பார்கள்" என்பதே அந்தப் பழமொழி. எவ்வளவு உண்மை! — ராஜாஜி

கிறேன். உன்னைக் காணாமல் என்னால் வெகு நாட்கள் பிரிந்திருக்க முடியுமா?"

பிரியாவிடை கொடுத்து அனுப்பினாள் பேதைப் பெண். அவள் உள்ளத்தை உருக்கி வழியச் செய்து விட்டு, வில்லிலின்று விரைந்த அம்பென வெளியேறி வந்தான் வீரமல்லன். 'சிறு துரும்பும் சமயத்தில் உதவி செய்யும்; அதேபோல் ஒரு நாளைக்கு இவர்களுடைய உதவியை நாட வேண்டியிருந்தாலும் இருக்கும்' என்று நினைத்துக் கொண்டான் அவன்.

தஞ்சை அரண்மனையில் இப்போது வீரமல்லனின் வேலை மகிந்தரின் குடும்பத்தாருக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் கவனிப்பதாகும்.

அரண்மனைக் கோட்டைக்குள் அரச மாளிகைக்குப்பின்புறம் இருந்த மாளிகைகளில் ஒன்றை மகிந்தருக்கு ஒழித்துக் கொடுத்திருந்தார்கள். அந்த மாளிகையின் மேற்பார்வைப் பொறுப்பு அப்போதைக்கு வீரமல்லனிடம் ஒப்புவிக்கப் பட்டிருந்தது. இளங்கோவுக்குப் பழக்கமானவன் என்பதால் அவன் தந்தை மதுராந்தக வேளார் இந்த ஏற்பாட்டைத் தாமே செய்து வைத்திருந்தார்.

"தோல்வியுற்ற மன்னர் என்ற அலட்சியம் இருக்கக் கூடாது. விருந்தினர் போல் நடத்த வேண்டும்; அதே சமயம் அவருக்குச் சந்தேகம் ஏற்படாத வண்ணம் அவருடைய நடவடிக்கைகளையும் கவனித்துச் சொல்லவேண்டும்" என்றார். "மதுரையில் உனக்கு ஒற்றனாக இருந்து பழக்கம் இருக்கிறதல்லவா? அந்த அநுபவத்தையும் பயன்படுத்திக் கொள்."

இதைக் கேட்ட வீரமல்லன் கொடும்பாளூர் வேளிர்கள் மிகவும் தந்திரசாலிகள் என்று எண்ணலானான். மதுரையில் அவன் ஒற்றனாக இருந்ததை அவர் நினைவூட்டியபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது. 'கொடும்பாளூர் வேளிரை விடச் சந்திரலேகை முத்தரையர்கள் தந்திரத்தில் சளைத்தவர்களல்லர்' என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

மகிந்தரின் குடும்பம் மாளிகையில் குடியேறி இரண்டுதினங்களுக்குப் பின், ஒரு நாள் மாலை மாளிகைத் தோட்டத்தைப் பணியாட்கள் திருத்தி அமைத்துக் கொண்டிருந்தார்கள். பின்புறக்கூடத்தில் நின்றவாறு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ரோகிணி. பணியாட்களை மேற்பார்வையிடும் சாக்கில் அவர்களிடம் சிறு பொழுது நின்றுவிட்டு, மெல்லக் கூடத்தை நோக்கி வந்தான் வீரமல்லன்.

"இளவரசி! திருவாரூரில் அன்றைக்கு இரவு நீங்கள் இட்ட பணியை நான் செய்யவில்லை என்று என்மேல் உங்களுக்குச் சினம் இருக்கும். ஆனால், உண்மையில் அவனைத் தேடிக் கொண்டுதான் போனேன்."

"மிகவும் நன்றி" என்று அலட்சியப் புன்னகை உதிர்த்தாள் ரோகிணி.

"ஆனால் நான் போய்ச் சொல்வதற்குள் அவனே உங்களிடம் வந்து விட்டானென்று தெரிந்தது."

அவள் மறுமொழி ஒன்றும் கூறவில்லை.

"நான் மறுத்துச் சொல்வதற்குக் காரணம் உங்களிடம் இருந்த அநுதாபம். மாமன்னர் எதை விரும்புவாரோ, அதை மட்டுமே நாங்கள் செய்ய வேண்டும். அவர்களுக்கு விருப்பம் இல்லாததைச் செய்தால் எங்களுக்குத்தான் ஆபத்து."

'இவன் எதற்காக இங்கு வந்து உளறிக் கொண்டு நிற்கிறான்? மாமன்னருக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?' என்று நினைத்தாள் ரோகிணி.

"மாமன்னருடைய சொந்த மைத்துனர்தாம் கொடும்பாளூர்ப் பெரிய வேளார் என்பதும், மைத்துனரின் மகன் இளங்கோ என்பதும் உங்களுக்குத் தெரியுமா, இளவரசி?"

கண்களை அகலத் திறந்து கொண்டு அவனை வியப்போடு ஏறிட்டுப் பார்த்தாள் ரோகிணி.

"மகாராணி வீரமாதேவி இளங்கோவுக்குச் சொந்த அத்தையார் முறை வேண்டும். அவர்களது பெண் இளவரசி அருள்மொழி இருக்கிறார்களே, அவர் இளங்கோவுக்கு முறைப் பெண். காலங்காலமாகவே கொடும்பாளூருக்கும் தஞ்சைத் தலைநகருக்கும் மணவினைத்


அழகின் அபிவிருத்தி
நீங்கள் "'ஹாஸலீன்' ஸ்னோ" உபயோகித்
தீர்களானால், வெய்யிலின் வெப்பமோ, காற்றோ,
மழையோ உங்களுடைய தோற்றத்திற்கு
யாதொரு கெடுதியும் விளைவிக்காது. கெடுதியற்ற
தன்மையுள்ள "'ஹாஸலீன்' ஸ்னோ"
உங்களுடைய சருமத்தை மிருதுவாகவும்
அழகாகவும் விளங்கச் செய்கிறது.
மற்றும் அது ஏமாற்றம் செய்ய
முடியாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
"'HAZELINE' SNOW" TRADE MARK
"'ஹாஸலீன்' ஸ்னோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
BWY-4

உங்கள் நரம்புகள்

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும்-அதுவும் ஓய்வில்லாத உழைப்பும் ஒழியாத கவலேயும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்டகாலமாய் மனேபலமும் தேக திடனும் வியர்த்தமாகி யிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக் கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கையிருப்பாக வைத்திருங்கள்



சிறியோர்

●

முதியோர்

●

நோயாளிகள்

யாவருக்கும் உகந்தது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

●

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:


ஆர். எல். கௌடர் & கோ.
59, பந்தர் தெரு - சென்னை

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

சத்ய நாராயண பார்மஸி
விஜயநகரம் & குமர் தெரு, விஜயவாடா-1

வாஸ்மால்

கருமையை வளர்க்கும் கூந்தல் தைலம்



- நரை மயிரைக் கருமை ஆக்கிப் பளபளப்பையும் ஊட்டுகிறது
- கேசவளர்ச்சியை ஊக்குகிறது.
- மென்மையான நறுமணம் கொண்டது. கூந்தல் வளர்ச்சிக்கு உகந்த தைலம்.



தைலமாகவும் போமேடாகவும் போசடி செய்ய முடியாதமூடியுடைய பாட்டில்களில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

ஹைஜீனிக் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்
தபால் பெட்டி என் 1192, பம்பாய்-1

சென்னை ஏஜண்டுகள்.

ஆர். எல். கவுடர் ஃ கம்பெனி
பந்தர் தெரு சென்னை

ஸிலோன் ஏஜண்டுகள்:

கபாடியா லிமிடெட்
104, கெய்சர் தெரு, கொழும்பு-11

ரேடியோ ஸிலோன் 45 & 21 மீட்டரில் 'வாஸ்மால் சங்கீத மஞ்சரி' என்ற நிகழ்ச்சியை பிரதி செவ்வாய் இரவு 8-30 மணிக்குக் கேளுங்கள்

திரைச்சீலையில் ஏதோ சித்திரம் தீட்டிக் கொண்டிருந்தாள் ரோகிணி. அவளறியாமல் மெல்லச் சென்று அதை எட்டிப் பார்த்தான். அவனுடைய தம்பி காசிபனின் உருவம் அரைகுறையாக அதில் வரையப் பட்டிருந்தது.

"உனக்குச் சித்திரம்கூட வரையத் தெரியுமா, ரோகிணி!"

"வாருங்கள்!" என்று அவசரம் அவசரமாக அருகிலிருந்த வண்ண மைக் கிண்ணங்களை ஒதுக்கி வைத்து விட்டு அவனை அமரச் சொன்னாள். திரைச் சீலையையும் நகர்த்தி வைத்தாள். தூரிகையை விட்டெறிந்தாள். "இந்த ஏழைகளின் நினைவு உங்களுக்கு மறந்து போகாமல் இருப்பது எங்கள் பாக்கியந்தான்!"

"கப்பகல்லகம் அரண்மனையில் நீங்கள் வாழ்ந்த அளவுக்கு உங்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க முடியாவிட்டாலும், ஏதோ எங்களால் இயன்றவரை செய்திருக்கிறோம். குறைகள் ஏதேனும் இருந்தால் சொல்; தந்தையாரிடம் கூறிக் கவனிக்கச் செய்கிறேன்."

"இந்த நாட்டின் அமைச்சர்தாம் உங்கள் தந்தையா?"

"ஆமாம்!"

வீரமல்லன் அவனிடம் கூறிய இதர உறவு முறைகளைப் பற்றியும் இளங்கோவிடம் கேட்டு உறுதி செய்து கொண்டாள் ரோகிணி. மணவினைத் தொடர்பு பற்றிய பேச்சை மட்டிலும் அவனிடம் அவள் எழுப்பவில்லை.

"இந்த மாளிகையில் எனக்கு ஒரே ஒரு குறை இருக்கிறது. அதை உங்களால் நீக்க முடிந்தால் சிறிது அமைதி கிடைக்கும்" என்றாள்.

திகைப்போடு, "குறையா? என்ன அது?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை; இந்த மாளிகையை மேற்பார்வை செய்வதற்கு உங்கள் நண்பன் ஒருவனை நியமித்திருக்கிறீர்களே, அவனுக்கு வேறு ஏதாவது வேலை கொடுத்தால் நன்றாயிருக்கும். அவனுடைய அளவுக்கு மீறிய உபசாரங்களையும் பணிவிடைகளையும் ஏற்றுக் கொள்வதற்கு எனக்குத் தயக்கமாக இருக்கிறது. உபசரிப்புக்கும் ஒரு வரம்பு வேண்டும், பாருங்கள்!"

"வீரமல்லனையா சொல்கிறாய்?"

"நான் அவனைக் குறை கூறவில்லை. கப்பலில் என்னுடைய தனிமையில் ஒரு முறை நீங்கள் குறுக்கிட்டபோது, உங்களிடமே நான் எப்படி நடந்து கொண்டேன் என்பது உங்களுக்குத் தெரியும். என்னைப் பொறுத்தமட்டில் அவனுடைய குறுக்கீடு எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. நீங்களாகக் கேட்டதால் சொல்கிறேன்."

நாட்டுக்கு நல்கிய நல்மொழி-5

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனில் நடைபெற்றது போல் ஏதாவது பெரிய தவறுகள் நேர்ந்து விட்டால்



சட்டங்கள் இயற்றிக் குறைபாடுகளை நிரப்பப் பார்க்கிறார்கள். திருடன் கதவை உடைத்துவிட்டுக்குள் புகுந்து கொள்ளை அடித்துச் சென்றுவிட்டான். கதவைச் சீர்ப்படுத்தி விட்டால் மட்டும் போதுமா?

—ராஜாஜி

"நான் இப்போது குறுக்கிட்டது கூடத் தவறுதானா?" என்றான் இளங்கோ.

"ஒரு முறை நான் உங்களுக்குத் தவறு செய்து விட்டேன்; இனி எப்போதும் அப்படி நடக்காது; தயவுசெய்து அதை மறந்து விடுங்கள்" என்று கனிவோடு கூறினாள் ரோகிணி. "ஆனால் வீரமல்லன் உங்களுக்கு நண்பனாக இருக்கலாம்; எனக்கு அவன் நண்பனல்ல."

இளங்கோ தன் கரங்களைப் பிசைந்து கொண்டான். குளத்தங்கரையில் வீரமல்லன் ரோகிணியைப் பற்றித் தன்னிடம் செய்த உபதேசம் அவன் நினைவுக்கு வந்தது. அவன் செய்த உபதேசத்தை அவனே மெய்யென்று நம்பியிருந்தால் எதற்காக ரோகிணியிடம் நெருங்கிப் பழக முற்படுகிறான்?

'அவனை அவசியம் இங்கிருந்து மாற்றிவிடச் செய்கிறேன்' என்று கூறக்கூடிய துணிவு இளங்கோவிடம் இல்லை. அவனை அங்கு நியமித்தவர் அவனுடைய தந்தையார் மதுராந்தக வேளார். அவரிடம் நேரில் நின்று பேசுவதற்கே இளங்கோ தயங்குவது வழக்கம். அவரிடம் இதைப் போய் எப்படிச் சொல்வது?

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"இல்லை; ஒன்றுமில்லை" என்றான் இளங்கோ. இந்த விஷயத்தில் ஒன்றுமே அவனால் செய்ய முடியாது. ஆயினும், தன் ஆற்றாமையை அவனிடம் காட்டிக் கொள்ள அவன் விரும்பவில்லை.

இந்தச் சமயத்தில் சாளரத்துக்கு வெளியே செடி மறைவுக்குப் பின்னால் இரண்டு குரல்கள் கேட்கவே, அவர்கள் இருவரும் எழுந்து சென்று எட்டிப் பார்த்தார்கள். ஒருவன் வீரமல்லன்; மற்றொருவன் மல்லர் தலைவன் மாங்குடி மாறன்.

"என்ன மாங்குடியாரே! அநுமார் ராமனைத் தோளில் தூக்கிக் கொண்டு இலங்கையில் கூத்தாடினாராம். நீங்கள் இளங்கோவைத் தூக்கிக்கொண்டு கடற்

கரையில் ஆடிய கூத்து, அதைவிடப் பெரிதாக இருந்ததே !''

''கொடும்பாளூர் இளவரசர் ராமரானால் அவருக்கு நான் அநுமாராவதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும், தம்பி! ஈழத்துக்கு நான் போயிருந்தால் அநுமார் செய்ததைத்தான் செய்திருப்பேன். அவருடைய வீரத்தைப் பற்றிக் கதை கதையாய்ச் சொல்கிறார்களே, நீ கேட்க வில்லையா?''

''கேட்டேன், கேட்டேன், அவன் வாயாலேயே சொல்லக் கேட்டேன் !'' என்று ஏளனமாய்க் கூறிவிட்டு விகாரமாகச் சிரித்தான் வீரமல்லன்.

''என்ன கேட்டாய்?'' என்று பயங்கரமாய் உறுமினான் மல்லர் தலைவன். ''நீ சிரிக்கும்படி அதில் என்ன இருந்தது?''

''வீரத்தினால் அவன் மணி முடியைக் கொண்டு வந்து விட்டதாக எல்லோருக்கும் எண்ணம். நடந்தது என்ன தெரியுமா? மகிந்தரின் பெண் ஒருத்தி இருக்கிறாளே, அவளை ஏமாற்றி அதை வஞ்சகமாக எடுத்து வந்திருக்கிறான் அவன்.''

''வீரமல்லா!'' என்று கத்திக்கொண்டே அவன்மீது பாய்ந்து அவன் தோட்களைப் பற்றிக் குலுக்கினான் மாங்குடி மாறன். ''இளவரசரைப் பற்றி நீ என்ன வார்த்தை சொல்லத் துணிந்தாய்? அவருடைய தோளை நீ பார்த்தாயா? தோளை நீ பார்த்தாயா?'' என்று கூறிக் கொண்டே அவனை இருகூறாய்க் கிழிக்க விரும்புகிறவன் போல் இருபுறமும் பற்றி இழுத்தான்.

செடிகளை விலக்கிக் கொண்டு அங்கு தாவி ஓடிச் சென்றான் இளங்கோ. இளங்கோவைக் கண்டவுடன் மாங்குடிமாறனின் மரணப் பிடி நழுவியது.

ஆனால் வீரமல்லனின் ஆத்திரம் அடங்கவில்லை. அது இன்னும் அதிகமாகக் கொழுந்து விட்டெரிந்தது.

''இதோ வந்து விட்டான்; இவனையே கேட்டுப் பாரும், மாங்குடியாரே! வீரமாவது மண்ணாங்கட்டியாவது! மகிந்தர் இவனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்காவிட்டால் இவன் இங்கு மீண்டிருக்க முடியுமா? அவருடைய மகளின் உதவி இல்லாவிட்டால் இவனை இன்றைக்கு ஊர்-உலகம் வீரனென்று சொல்லுமா?''

வீரமல்லனா இப்படிப் பேசுகிறான்? அவனுக்கு வெறிபிடித்து விட்டதா என்ன?

ரோகிணியைக் கடலில் தூக்கி எறிய நினைத்தபோது அவளை உற்றுப் பார்த்தானே, அதேபோல் இன்று வீரமல்லனைப் பார்த்தான் இளங்கோ. அவனுடைய நெற்றி நரம்புகள் புடைத்தெழுந்தன. புருவங்கள் துடித்தன.

''இளவரசே! எனக்கு அநுமதி கொடுங்கள். இவனை மிதித்தே கொன்று விடுகிறேன். எந்தச் செடியின் நிழலில் நிற்கிறானோ அதையே வெட்டக் கூடிய மாபாதகன் இவன்.— மிதித்துத் துவைத்து இவனை எருவாக்கி இந்தத் தோட்டத்து மண்ணில் போட்டு உழுது விடுகிறேன், பிரபு!'' மாங்குடிமல்லனின் மலைபோன்ற சரீரம் கோபத்தால் கிடு கிடுவென்று நடுங்கியது.

பொறாமை தூண்டிவிட்ட ஆத்திரம் வீரமல்லனிடம் மேலும் பற்றி எரியத் தொடங்கியது. ''ரோகிணியால் நீ வீரனானாய் என்பது உண்மைதானே, இளங்கோ?'' என்று கேட்டான்.

இளங்கோவால் அதற்குப் பிறகும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. 'பளீர், பளீர், பளீ'ரென்று தனது கை சளைக்கும் மட்டும் அவன் முகத்தில் ஓங்கி ஓங்கி அறைந்தான்.

வீரிட்டலறிக் கொண்டே அந்த இடத்துக்கு ரோகிணி ஓடிவந்திருக்கா விட்டால், வீரமல்லனின் நிலை எப்படி ஆகியிருக்குமோ, தெரியாது.

கன்றிக் கறுத்துப் போன முகத்தில் பதிந்திருந்த வீரமல்லனின் குரோதம் மிக்க கண்கள் இளங்கோவை எரித்து விடுவது போல் நோக்கின. அதைத் தவிர எந்தவிதமான எதிர்ப்பு உணர்ச்சியையும் அவன் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ரோகிணி அங்கு நடந்ததைப் பார்த்து விட்டாள் என்று தெரிந்தவுடன் அவனுடைய வஞ்சம் அவனது நெஞ்சையே தின்றது.

''இளங்கோ.....!'' என்று எதையோ சொல்வதற்கு வாய் திறந்தான்.

''இனிமேல் பெயர் சொல்லி அழைக்க உனக்கு உரிமை யில்லை; நட்புரிமை கொண்டாடினாயே, அதை இந்தக் கணத்துடன் மறந்து விடு. இனி நீ ஓர் ஆயிரவர் படைத் தலைவன்!''

இளங்கோ அதற்குப் பின் அங்கு நில்லாமல், சட்டென்று திரும்பி அரண்மனைப் பக்கம் நடந்தான்.

''உன்னை உயிரோடு விட்டு விட்டுப் போகிறாரே !'' என்று மாங்குடிமாறன் பதற்றத்தோடு வீரமல்லனிடம் கூறிய சொல், இளங்கோவின் செவிகளில் விழாமல் இல்லை.

இந்தக் காட்சி முழுவதையும் மேல்மாடத்திலிருந்து ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டு நின்றார் மகிந்தர். நண்பர்களைப் பகைவர்களாக மாற்றிய அந்தக் காட்சி அவர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்தது. தமது கண்களை இடுக்கிக் கொண்டு அவர் மௌனப் புன்னகை புரியலானார். (தொடரும்)

தொடர்பு உண்டு. அப்படியிருக்கும் போது தமது பெண் அருள்மொழியை இளங்கோவுக்குக் கொடுக்க வேண்டுமென்பது சக்கரவர்த்திகளின் நோக்கமாக இருக்கலாமல்லவா?"

இதைக் கேட்டவுடன் காரணத்துடனோ, காரணமில்லாமலோ ரோகிணியின் முகம் சினத்தால் சிவந்தது. "யாருக்கு யார் என்ன உறவு முறை என்று நான் உன்னிடம் கேட்டேனா என்ன? யார் எப்படியிருந்தால் எனக்கு என்ன? இதையெல்லாம் எதற்காக என்னிடம் வந்து கூறுகிறாய்?" என்று சினத்தோடு வினவினாள்.

"அதற்கில்லை, இளவரசி! நீங்களும் இளங்கோவும் சந்தித்து உரையாடுவது சக்கரவர்த்திகளுக்குத் தெரிந்தால், அதைத் தவறாக நினைத்து விடுவாரோ என்று நான் அஞ்சினேன். அதனால் உங்களுக்கும் தீங்கு நேரலாம். அதற்குக் காரணமாக இருந்த எனக்கும் கடுமையான தண்டனை கிடைக்கலாம். இதையெல்லாம் நன்றாக யோசித்துத்தான் முதலில் நான் மறுத்தேன். இல்லாவிட்டால் உங்களைப் போன்றவர்களின் சின்னஞ் சிறு வேண்டுகோளுக்கு நான் செவி சாய்க்காதிருந்திருப்பேனா?"

ரோகிணி வேறு பக்கம் திரும்பிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள். அவன் கூறிய செய்திகள் அவளுக்குச் சஞ்சலத்தைக் கொடுத்தன. அந்தச் செய்திகளால் அவள் மனம் எதற்காகக் கலக்கமுற வேண்டும் என்று அவளுக்கே விளங்கவில்லை.

'ஆமாம், மாமன்னரின் கருத்து அதுதான் என்று உனக்கு எப்படித் தெரியும்?' என்று அவனிடம் திருப்பிக் கேட்க நினைத்தாள். ஆனால் கேட்கவில்லை. 'இவனிடம் நமக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?' என்று பேசாதிருந்து விட்டாள்.

ரோகணத்திலிருந்த வரையில் அவளுக்கு இளங்கோவைக் கொடும்பாளூர் இளவரசன் என்ற முறையில் மட்டுமே தெரியும். ஒருவேளை, சக்கரவர்த்திகளுக்கு அவன் தூரத்து உறவினனாக இருக்கக் கூடும் என்ற அளவுக்கே நினைத்திருந்தாள். ஆனால் இவ்வளவு நெருக்கமான உறவினர்களா அவர்கள்? இளங்கோவின் தந்தையார் இந்த மாபெரும் சோழ சாம்ராஜ்யத்தின் அமைச்சர் போலிருக்கிறதே!

வீரமல்லன் கூறிய செய்திகளில் ஒன்று கூட அவளுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. பகற்கனவிலிருந்து விழித்துக் கொண்டவள் போல், தன்னையே பார்த்துக் கொண்டு நின்ற வீரமல்லனை நோக்கி, "நீ போகவில்லை? இன்னுமா இங்கு நின்றுகொண்டிருக்கிறாய்?" என்று வேதனையோடு கேட்டாள்.

"சிறிதேனும் நன்றி உணர்ச்சி கிடையாது, இந்தப் பெண்ணுக்கு!" என்று முணுமுணுத்துக் கொண்டே வீரமல்லன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

இந்த நிகழ்ச்சியால் வீரமல்லன் ஒன்றும் மனம் தளர்ந்து விடவில்லை. எப்படியாவது அவளுடைய அநுதாபத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமென்பது அவன் திட்டம். அதற்காக அடிக்கடி அவளுடைய தந்தையார் மகிந்தரிடம் சென்றான். அவருடைய கவனத்தைக் கவரும் அளவுக்கு அவருக்கு வசதிகள் செய்து கொடுத்தான். சமயம் நேர்ந்த போது இருவரும் உரையாடிக் கொள்ளத் தவறவில்லை. ஈழ நாட்டின் செழிப்பைப் பற்றித் தான் கேள்வியுற்றிருப்பதாகவும், தனக்குப் புத்தர்பிரானின் மீது அளவற்ற பக்தியென்றும் அவரிடம் சொல்லிக் கொண்டான்.

நாளடைவில் ரோகிணியிடம் மகிந்தர் வீரமல்லனைப் பற்றிப் புகழ்ந்து பேசும் அளவுக்கு அவர்களுடைய தொடர்பு வளர்ந்து கொண்டு வந்தது. அந்த வளர்ச்சி ரோகிணியின் தனிமையில் வீரமல்லன் குறுக்கிடும் நிலைக்கு வந்தபோதுதான் அவளால் அதைத் தாங்க முடியவில்லை.

ஒன்பதாம் அத்தியாயம்

இனி நண்பனல்ல!

அரண்மனை அந்தப்புரத்தில் இளங்கோவை அவன் அன்னையார் ஆதித்த பிராட்டி, அத்தையார் வீரமாதேவி, பாட்டியார் பெரிய குந்தவை இவர்கள் அனைவரும் சூழ்ந்துகொண்டு தங்களது ஆனந்தக் கண்ணீரால் குளிப்பாட்டினார்கள். அருள்மொழியின் தங்கை அம்மங்கையோ அவன்மீது தன் பரிகாசச் சொற்களைச் சரமாரியாகப் பொழியத் தொடங்கினாள்.

"ஒரே ஒரு போர்க்களத்துக்குச்சென்று ஒரே ஒரு விழுப்புண்ணோடு திரும்பியிருக்கிறார் இவர். இவரைப் போய் எல்லோரும் வீராதி வீரர், சூராதிசூரர் என்கிறார்கள். இவருக்கும் புகழ் தேடிக் கொள்ளவே தெரியவில்லை. சின்னஞ்சிறு

நாட்டுக்கு நல்கிய நன்மொழி-4

பத்துப் பேர்கள் ஒன்று சேர்ந்து கோவில் தேரை இழுக்கலாம். ஆனால் அதே பத்துப் பேர்கள் ஒன்று சேர்ந்து



ஓர் ஏரைப் பிடித்து உழ முடியாது. அப்படி உழ ஆரம்பித்தால் எல்லாம் கெட்டுப்போகும். விளைச்சலும் தடைப் பட்டுப் போகும். —ராஜாஜி

விழுப்புண் தழும்புகள் ஐம்பது அறுபதாவது உடலில் இருக்க வேண்டாமோ?'' என்றாள் அம்மங்கை.

''நீ சற்று நேரம் சும்மா இருக்கமாட்டாயா?'' என்று தமது மகளை அதட்டினார் வீரமாதேவி.

''போங்களம்மா! கவசம் போட்டுக் கொள்ளாமல் இப்படியா போய்ப் பகைவன் கையில் அகப்பட்டுக் கொள்வது? ஒரு சாண் ஆழம், இரண்டு சாண் அகலத்துக்கு அவன் இவர் தோளைப் பிளந்து தள்ளியிருக்கிறானே! இதைப் போல் இரண்டாவது விழுப்புண்ணைத் தேடிக் கொண்டிருந்தால் இவர் கதி என்ன?''

''உனக்குக் கவசம் போட்டு விடுகிறேன். நீ அதோடு கடலுக்குள் இறங்கி நீந்திச் செல்கிறாயா?'' என்று கேட்டான் இளங்கோ.

''எனக்கு நீந்தத் தெரிந்தால் நான் மலையைக் கட்டிக்கொண்டு கடலில் கூடக் குதித்து விடுவேன்.''

இதற்குள் பாட்டியார் பெரிய குந்தவை குறுக்கிட்டு, ''ஆமாம், போர்க் களத்துக்கு நீ இவனை அழைத்துக் கொண்டு போயிருக்க வேண்டும்; இவன் பேச்சைக் கேட்டுவிட்டே பகைநாட்டு வீரர்கள் புறமுதுகுகாட்டி ஓடியிருப்பார்கள்'' என்றார். அம்மங்கையின் வாய் தானாக அடைத்துக் கொண்டது.

அங்கிருந்து இளங்கோ திரும்பிய போது, அருள்மொழி ஒரு கூடத்துக்குள்ளிருந்து வெளிப்பட்டாள்.

''நங்கையாரே! நீங்கள் நெற்றியில் இட்டுவிட்ட வீர திலகம், இன்னும் மறையாமல் என் தோளில் பதிந்திருக்கிறது, பார்த்தீர்களா?'' என்று கூறிச் சிரித்தான் இளங்கோ. ''இனிமேல் என்றைக்குமே இது மறையாது!'' என்று தனது வலது தோளிலிருந்த செந்தழும்பைச் சுட்டிக் காட்டினான்.

ஏறிட்டு நோக்கிய அருள்மொழியின் விழிகளில் பனித்திரை படர்ந்தது.

''என்னுடைய விரலில் சிறு புண் ஏற்பட்டதாக நினைத்து அன்றைக்கு நீங்கள் என்ன பாடு பட்டீர்கள்! எப்படி உங்களால் இந்த வேதனையைத் தாங்க முடிந்தது?''

''நீங்கள் தானா நான்? நீங்கள் மலரைப் போன்றவர்கள். காற்றுக்கூட உங்கள் மீது கடுகி வீசக்கூடாது. நான் மலையைப் போன்ற முரடன். போர்க்களத்தின் சலசலப்பு என்னை என்ன செய்து விடும்?''

''நான் எவ்வளவோ சொல்லி அனுப்பியும் அதையெல்லாம் மறந்து விட்டீர்களே!'' என்றாள் அருள்மொழி.

''மறந்திருந்தால் நான் திரும்பி வந்திருக்க முடியுமா? எனக்கும் சிறிது விவேகமிருக்கிறது, இளவரசி!''

பெருமையோடு புன்னகை பூத்துவிட்டு அந்தப்புரத்துக்குள் நுழைந்து மறைந்தாள் அருள்மொழி. அவளது புன்னகை தென்றலாக மாறி அவன் தோளுக்குக் குளுமை தந்தது.

மூன்று நான்கு தினங்களாகவே ரோகிணி இளங்கோவின் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. அம்மங்கை தேவியுடன் சேர்ந்து கொண்டோ, அல்லது அருள்மொழியுடன் கூடிக்கொண்டோ அவன் பொழுது போக்கிக் கொண்டிருந்தான். அவர்களை விட்டுப் பிரிந்திருந்த வேளைகளில் அவனுடைய மாளிகை அவனுக்குப் புகலிடம் அளித்தது போலும்.

கமலாலயக் கரையில் ரோகிணி அவனை அந்தரத்தில் விட்டுச் சென்ற பிறகு, அவள் நினைவு அவனுக்கு அவ்வளவாக மகிழ்ச்சி யளிக்கவில்லை. அவனுடைய தந்தையார் மாமன்னரின் உறவை நாடி வந்து விட்டு, பின்பு திடீரென்று மனம் மாறி விட்டாரல்லவா? அதுபோலவே அவளும் செய்து விட்டாளோ என்று நினைத்தான்.

வீரமல்லன் வாயிலாகத் தன்னை விரும்பி அழைத்துவரச் சொன்னவள், தன்னிடம் 'விரும்புகிறேன்' என்று ஒரு சொல் சொல்லியிருந்தால் என்ன குறைந்துவிடும்? இதற்குப் பெயர் ராஜதந்திரமா? அல்லது சாகசமா?

மகிழ்ச்சி யளிக்காத நினைவென்றாலும் அது என்னவோ அவன் மனத்தின் ஒரு மூலையில் உறுத்திக் கொண்டுதானிருந்தது. அந்த உறுத்தலோடு அவன் தன்னையறியாது மகிந்தரின் மாளிகையை நாடிச் சென்றான். முதன் முறையாக அவர்களுடைய நலத்தைக் கேட்டு வர வேண்டுமென்று தோன்றியதுஅவனுக்கு!

தோட்டத்துப் புறமாக இருந்த சாளரத்தின் அருகே உட்கார்ந்து கொண்டு



தென்கரை

ஆர்வி

அத்தியாயம் 19

அக்கறையில்லை!

பாரிஸ்டர் பரமசிவம் உண்மையை எப்படிக் கண்டறிவது என்று எண்ணியபடி வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். குப்பன் சாவியை முடுக்கும் போது, "யார் அந்தப் பையன்?" என்று கேட்டார் அவர். குப்பனுக்குக் கொஞ்சம் யோசனைதான். இருந்தாலும் மிகவும் தணுக்காக, "முந்தி நம்ம ஜட்ஜ் ஐயா வீட்டிலே அட்டெண்டரா வேலை செய்து கொண்டிருந்த பையன். இப்போ வேலையை விட்டுட்டுப் படிச்சுக்கிட்டிருக்கான்."

"உனக்குத் தெரிந்தவன்தானே?"

"ஆமாம், தெரிஞ்சவன்தான்; ரொம்ப நல்ல மாதிரி!"

"சரிதான்; இவனை எங்கேயோ, எப்போதோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்றுதான் கேட்டேன். ஆமாம்; இப்போது எதற்காக இங்கே வந்திருக்கிறான்? உஷாவை அவனுக்குத் தெரியுமா?"

பரமசிவம் பேசிய விதம் குப்பனுக்குச் சிறிது தைரிய மூட்டியது. எதையாவது விசாரித்துத் தெரிந்துகொள்ள பாரிஸ்டர் இப்படித்தான் கேட்பது வழக்கம்.

"குழந்தையை என்ன, எல்லாரையுமே அவனுக்குத் தெரியும். முந்தியெல்லாம் அடிக்கடி வருகிறவன்தானே?"

"எதற்கு?"

"குழந்தை படிச்ச பழைய புத்தகம் இருந்தா கேட்டு வாங்கிக்கிட்டுப் போக எப்பவாவது வருவான். காசு கொடுத்து இதெல்லாம் வாங்க முடியுமா? அதுக்காகத்தான்..."

"சரி; கிளப்புக்குப் போ!" என்று உத்தரவு போட்டார் பாரிஸ்டர். வண்டி புறப்பட்டுவிட்டது. குப்பன் "இந்த நல்ல தருணத்தை நழுவவிடக் கூடாது" என்று எண்ணினான்.



"நான் இருக்கிற தோட்டத்திலே இவங்க நாலஞ்சு பேரா சேர்ந்துகிட்டு ஒரு சங்கம் நடத்தறாங்க. பள்ளிக்கூடம் வச்சு, ஏழைகளுக்கும் பெரியவர்களுக்கும் கூடப் படிப்புச் சொல்லித் தருகிறாங்க. நம்ம குழந்தைதான் அதை ஆரம்பிச்சு வச்சுது. எப்பவாவது அவங்க கேட்டா, துட்டு கூடக் கொடுக்கிறது தான். எல்லாம் சரியா நடக்குதான்னு போய்ப் பார்த்துட்டும் வரது தான்!" என்றான் குப்பன்.

குப்பன் இதையெல்லாம் சொன்ன மாதிரியும், சொன்ன விஷயமும் பாரிஸ்டருக்குத் தவறாகப் படவில்லை. சொர்ணம்பாள் எதையெல்லாம் விபரீதமாக எண்ணிச் சொன்னாளோ, அவற்றின் உண்மையை இப்போதுதான் அவர் தெளிவாக உணர்ந்து கொண்டார். பார்க்கப் போனால் அற்பமான விஷயங்களையெல்லாம் அவன் பிரமாதப்படுத்திச் சொல்லியிருந்தான். உஷாவின் போக்கில் ஒரு குற்றமும் இருப்பதாக அவருக்குப் படவில்லை.

"இதையெல்லாம் நீ ஏன் என்னிடம் அப்போதே சொல்லவில்லை?" என்றார்.

குப்பன் இதற்கு ஒன்றும் கூறாமல் இருந்தான். வண்டி ஒழுங்காகச் செல்வதிலேயே கவனமாக இருந்தது, அவனுடைய பார்வை. பாரிஸ்டருக்கு அப்போதுதான் யோசிக்கச் சிறிது வாய்ப்பு உண்டாயிற்று. காலம்தான் எவ்வளவு வேகமாக மாறி வருகிறது! புதிய தலைமுறையைப் புரிந்துகொள்ள எவ்வளவு பொறுமை வேண்டியிருக்கிறது! எவ்வளவு விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது! காய் உச்சாணிக் கொம்பிலிருந்தாலும் கனிந்து விட்டால் தரையில் வந்து விழுந்துதானே ஆக வேண்டும்? இதில் இயற்கைக்கு விரோதமாக என்ன இருக்கிறது? மேலும் உஷா இந்தக் காலத்தைச் சேர்ந்தவள்; இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவள்; இன்றுள்ள மாறுதலான சூழ்நிலையில் வாழ்பவள். அவள் இப்படியெல்லாம்தான் நடந்துகொள்ள முடியும். பழைய முறைகள் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் பலிக்கும்!

பணக்காரன் தன் வண்டியை விட்டுக் கொஞ்சம் இறங்கி நடந்துதான் பார்க்க வேண்டும்; ஏழை அந்த வண்டியில் சிறிது ஏறி உட்கார்ந்துதான் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் பகைதான் புகைபோல் சூழ்ந்து கொள்ளும். உஷா இதை உணர்ந்து வரும் யுகத்தில் வாழ்பவள். சொர்ணம்பாள் நினைத்தபடி உஷாவின் உடலில் ஓடுகிற இரத்தத்துக்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. தங்கள் இரத்தம் வேறு, அந்த இரத்தம் வேறு என்ற பேச்சுக்கே இடமில்லை. நாளைக்குச் சுந்தரிகூட இதேபோல்தான் நடந்து கொள்ளப் போகிறாள். இதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை.

காலம் தலைகீழாக மாறி விட்டதைப் பற்றிக் குறை சொல்லாதவர்கள் எந்தத் தலைமுறையில்தான் இருந்தார்கள்? அவர்கள் வாழத் தெரியாதவர்கள். காலத்துக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்ளத் தெரியாதவர்கள். உடலும் உள்ளமும் ஒருங்கே கிழடு தட்டிப்போனவர்கள். பாரிஸ்டர் அப்படி யிருக்க விரும்பவில்லை. கால மாறுதலை அறிந்து உணர்ந்து, அதற்கேற்ப நடந்து கொள்வதுதான் சிறந்தது என்று அவர் எண்ணினார்.

இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? புகழின் ருசியில் திளைத்துப் போதையுற்றிருப்பவர்களுக்கு இந்த மாறுதலும் மாறப் போகிற எதிர்காலம் என்ற ஒன்று இருப்பதைப் பற்றியும் என்ன கவலை? போதையிலிருப்பவர்களுக்குப் பார்வை மட்டுந்தானே! புகழ் என்னும் மதுவின் வெறியிலிருப்பவர்களுக்கு லட்சியமோ, தர்மமோ ஏது? அவர்கள் எதையும் விட்டுக் கொடுக்கப் பின் வாங்குவதில்லை. அவர்களால் ஓட்டத்தைத் தேக்கி, ஒழுங்கான வழியில் திருப்ப முடியாது. அவர்கள் ஓட்டத்தோடு ஓட வருபவர்கள்! அந்த ஓட்டத்திலும் எல்லாருக்கும் முன்னால் போய் நிற்க வேண்டும் என்று நினைப்பவர்கள்!

பாரிஸ்டரின் சிந்தனை இதையொட்டித்தான் இருந்தது. அவருக்கு இப்போதுதான் எல்லாம் தெளிவாக விளங்கியது. இதெல்லாம் சொர்ணம்பாளுக்கு எங்கே புரியப் போகிறது? அவள் ஒவ்வொன்றையும் தவறாகவே புரிந்துகொண்டு எல்லாவற்றையும் மிகைப் படுத்திக் கொண்டு வேதனைப் படுகிறவள்; பிறரையும் வேதனைப் படுத்துகிறவள். இனி அவளைத் திருத்துவது எங்கே? அவள் சொல்வதைக் காதில் போட்டுக் கொண்டால்தானே வம்பு? பாரிஸ்டர் தீர்மானமான முடிவுக்கு வந்து விட்டார். அவருக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரியும்.

எல்லாரும் தூங்கிப்போன பிறகுதான் அவர் கிளப்பிலிருந்து திரும்பி வந்தார். மறுநாள் எதுவுமே நடக்காதது போலத்தான் நடந்து கொண்டார். சொர்ணம்பாள் வீட்டில் இருந்தாளா, இல்லையா என்பதே தெரியவில்லை. அவளுக்கு எல்லாருமே எதிரிகள்; எல்லாருமே அவளுக்குச் சத்துருக்கள். அவளுடைய நன்மையையும் மகிழ்ச்சியையும் குலைப்பதற்கென்றே கங்கணம் கட்டிக் கொண்டு சதிசெய்கிறவர்கள். சுந்தரி ஒருத்திதான் அவளைச் சேர்ந்தவள். அவளைத் தவிர அவள் வேறு யாரிடமும் பேச விரும்பவில்லை; யார் முகத்திலும் விழிக்க அவளுக்குப் பிடிக்கவுமில்லை.

“என்ன நடந்தது, குப்பா?” என்று கேட்டாள் உஷா.

குப்பன் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான்.


“அப்பா என்ன கேட்டார்? நீ என்ன பதில் சொன்னாய்?”

“அதைப்பற்றி யெல்லாம் உனக்கு என்ன, குழந்தை? உனக்கு இனிமேல் எங்கே போகணும் சொல்லு; நான் இருக்கேன்; பாத்துக்கறேன்!” என்று கூறினான் அவன்.

“பாபுவைப் பற்றிக் கேட்டாரா? சங்கத்தைப் பற்றிச் சொன்னாயா?”

“அவங்க துனித்தான் கேட்டாங்க! நான் எல்லாத்தையும் சொல்லி விட்டேன். ஏன்? நமக்கு என்ன பயம்? மடியிலே கனமிருந்தாத்தானே மனசிலே பயம்? இல்லியா, குழந்தை!”

உஷா முகத்தைத் திருப்பிக்கொண்டு, “ஆனால் நான் இனி எங்கும் வரமாட்-



டேன். நீங்கள் எல்லாரும் எது வேண்டுமானாலும் பேசலாம், எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் நாங்கள் பேசினால் குற்றம். நாங்கள் ஏதாவது செய்தால் குற்றம்! யார் யார் எங்கே எங்கே இருக்க வேண்டுமோ, அங்கே இருந்தால்தான் மதிப்பு. அதுதான் நல்லதும் கூட! நீ கூப்பிட்டாயே என்று முதல் முதல் உங்கள் தோட்டத்துக்கு வந்தேன். பொன்னி இருக்கிற தோட்டமாச்சே என்று இருந்ததைக் கொடுத்தேன். இல்லாவிட்டால் நான் ஏன் வரப் போகிறேன்? போதும் நான் வந்தது! நான் வருவானேன்; நீங்கள் எதையோ எண்ணிக் கொள்வானேன்?" என்று மனஸ்தாபத்துடன் பேசினாள்.

"நீங்க நீங்கன்னு யாரைச் சொல்றே, குழந்தை?"

"அது யாரையோ?"

"எங்களையுமா சேர்த்துச் சொல்றே?"

"உங்களைத்தான் சொல்றேன். உங்களோடு வேறே யாரையும் சேர்த்துச் சொல்லவில்லே!"

குப்பனுக்கு மேலே பேசத் தோன்றவில்லை. என்ன தவறு நேர்ந்து விட்டது என்று அவனுக்குப் புரியவில்லை. அவனோ, பொன்னியோ மனம் அறிந்து பிழையேதும் செய்திருந்தால்தானே!

"உங்களைச் சொல்லலாம் என்றுதான் எதிரிலேயே சொல்கிறேன். இல்லாவிட்டால் நான் ஏன் பேசப் போகிறேன்? நான் பாபுவோடு பேசுவதும் பழகுவதும் உங்களுக்கே பிடிக்கவில்லை. உங்களுக்கே இது தப்பாகப் பட்டால், மற்றவர்கள் எதைத்தான் சொல்ல மாட்டார்கள்? இந்தப் பேச்சுக்கெல்லாம் இடம் கொடுப்பானேன்?"

குப்பனும் பொன்னியும் இதைப் பற்றிப் பல தடவைகள் பேசியிருக்கிறார்கள். உஷா தோட்டத்துக்கு வருவதைப் பற்றியோ, பாபுவிடம் பழகுவதைப் பற்றியோ அவர்கள் குறை சொல்லவில்லை. ஆனால் கோடீசுவரப் பிரபுவான கண்ணபிரானை வேண்டாம் என்று மறுத்ததைப் பற்றித்தான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சொர்ணம்பாள் வற்புறுத்திக் கேட்டபோது அவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டது என்னவோ உண்மைதான். ஆனால் உண்மையே விபரீதமாக ஒலித்தால் அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்? அவன் குற்றவாளியைப் போல் தலையைக் குனிந்துகொண்டு நின்றான்.

பொன்னிக்குப் பொல்லாத்தனம் கொஞ்சம் அதிகமாகத்தான் போய் விட்டது. குழந்தை பிறக்காத ஏக்கத்தில் அவளுக்குப் பொறுமை கொஞ்சம் மட்டுப்பட்டுப் போயிருந்தது. அதனால்தான் குப்பனும் ஒதுங்கித் தணிந்து போய்க் கொண்டிருந்தான்.

நாட்டுக்கு நல்கிய நல்மொழி - 6

குயவனுடைய சக்கரத்தைச் சர்க்கார் சுழற்ற ஆரம்பித்தால் முக்காலணாவுக்குக் கிடைக்கக் கூடிய பானையை ஒரு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டி



யிருக்கும். சர்க்கார் தங்கள் காரியாலயங்களை நடத்துவதுடன் நிற்கவேண்டும். தொழிலும் வியாபாரமும் தனியாரிடம் விட்டுவிட வேண்டும். —ராஜாஜி

"சும்மா இரு, மச்சான்! பொம்பிளைப் புள்ளைங்க சுபாவத்தை ரொம்பக் கண்டுப்பிட்டியோ? இதெல்லாம் சரியில்லே. பூ செந்தாமரையின்னாலும் இருக்கிறது சேத்துக் குட்டைதானே? பாக்கறவங்க என்ன சொல்வாங்க! எந்த லிமிட்டோட பழகணுமோ, அந்த லிமிட்டோடேதான் வைச்சுக்கணும். அப்பறமா நம்மாலேதான் கெட்டிச்சின்னு பேரு வரும். ஊரைக் கட்டிப்பிட்டா மூட்டுக்கலாம்; பொம்பிளைங்களுக்குப் பேரைக் கட்டிப்பிட்டா மூக்க முடியுமா?" என்று அவள் காரசாரமாகத்தான் உஷாவைப் பற்றிக் கண்டித்துப் பேசினாள். இது உஷாவின் காதில் விழுந்திருக்குமோ? இது தேவானைக்கு எட்டி, சண்முகத்துக்கு எட்டி, பாபுவுக்கும் எட்டியிருக்குமோ?

"சிறிசுங்கதானே பொன்னி!" என்று கூட அவன் சமாதானமாகச் சொல்லி வைத்தான்.

"சிறிசுங்களா? யாரு சிறிசுங்க? அது மேசரான பொண்ணு; அது மேசரான புள்ளே. எத்தினி நாளைக்குச் சிறிசு? இல்லே, கேக்கறேன்! இவங்க நல்லவங்கதான்; நமக்குத் தெரியும். ஆனா ஊரிலே, தோட்டத்துலே இருக்கிறவங்க நல்லவங்கதானா? பாஞ்சாலி ஒருத்தி பத்தாது, கொள்ளியை இறப்புலே சொருகி வைக்க? எல்லாம் எனக்கு அரசப்புரசலா காதுலே விழுந்துக்கிட்டுத்தான் இருக்கு!" என்றாள் பொன்னி.

அதைக் கேட்டதும் குப்பனுக்கும் நியாயமாகத்தான் இருந்தது. அந்தப் பேச்சு நடந்த மறுநாளே அவர்கள் சொர்ணம்பாளிடம் நடந்ததையெல்லாம் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆனால் அதுதான் எப்படி எப்படியெல்

லாமோ மாறிப் புரண்டு இப்பொழுது சரியாகிப் போய் விட்டதே! இனிமேல் என்ன கவலே?

குப்பனுடைய மகிழ்ச்சியெல்லாம் மறைந்து விட்டது. "இதோ பாரு, குழந்தே! எங்களுக்கு உன்னேவிட யாரும் ஒசத்தியாப் போயிடமாட்டாங்க! நாங்க ஏதானும் பேசியிருந்தா, உனக்கு நல்ல துக்குன்னு பேசியிருப்பமே தவிர, தப்பா எதுவும் பேசியிருக்க மாட்டோம். நீ தோட்டத்துப் பக்கம் வராமெ இருக்கிறதே சரி. வரக் கூடாதுன்னுதான் எங்களுக்கும். எங்களுக்காகத்தானே நீ வந்தே? இப்ப நாங்களே வாண்டாம்னு சொல்றோம். அப்புறம் என்ன? ஏன் சொல்றோம்? நீ படிச்ச புள்ளே. இந்த எடத்தைத்தான் நீ நல்லாக் கவனிக்கணும். தெரிஞ்சுதா? அதை விட்டுட்டு எங்கபேரிலே வருத்தப்பட்டே, அப்புறம் எங்களுக்கு இந்த வீட்டிலே என்ன வேலே? இந்த அம்மாகிட்டேயும் எசமாங்கிட்டேயும் இனிமே இருந்து, எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டு வேலே பாக்கறதுக்கா? அந்த ஆசையெல்லாம் அப்பவே விட்டுப் போச்சே! எல்லாம் மாறிப் போச்சு! அம்மா சுந்தரி பொறந்திச்சு; எங்களுக்குத் தொந்தரையும் பொறந்திடுச்சு. எல்லாம் உம் முகத்துக்காவத்தான், அதைத் தெரிஞ்சிக்க முதல்லே!" என்றான் குப்பன்.

எதையோ சொல்லி அவன் வாயை அடைத்து விட்டதாகத்தான் முதலில் எண்ணினாள் உஷா. ஆனால் முடிவு என்னவோ நேர் மாறுதலாகத்தான் இருந்தது. அவளுக்கே தன்னுடைய பலவீனம் தெரிந்தது. அந்தப் பலவீனத்தை வெல்லும் வழிதான் தெரியவில்லே. பாபுவிடம் அன்பு காட்டிப் பேசுவது ஒரு தவரு? அது அப்படி ஒரு பலவீனமாகுமா? புரியவில்லே அவளுக்கு. நாளுக்கு நாள் பொன்னி குப்பன் எல்லாரும் சொல்லச் சொல்ல, அவனிடம் அவளுக்கு அன்பு அதிகமானதாகத் தோன்றியதே தவிர, குன்றியதாகத் தெரியவில்லே. அவளுக்கே இது ஒரு விளையாட்டாகத் தோன்றியது. பாபுவை என்றும் அவள் தனக்கு நிகரானவனாக எண்ணியதுமில்லே. அந்த எண்ணம் உண்டாவதற்கு ஓர் அவசியமே ஏற்பட்டதில்லே. அவன் எப்படியிருந்தால் அவளுக்கு என்ன? அவள் கல்யாணம் என்று யாரையோ செய்து கொள்ளத்தான் போகிறாள். அது யாரோ, எங்கு இருக்கிறானோ அவளுக்குத் தெரியாது. அவன் சிவப்போ, கறுப்போ, உயரமோ, குள்ளமோ ஒன்றும் தெரியாது. ஆனால் சிறந்த கல்வி ஞானமுள்ளவனாக, கண்ணியமானவனாக இருப்பா[ன்] இருக்க வேண்டும் என்பது தெரியும். மானம் உள்ளவனாக இருக்க என்பதும் தெரியும். [அ]து மட்டும் இருந்து விட்டால் போதுமா?

உயர்ந்த அந்தஸ்தும் செல்வமும் இருக்க வேண்டாமா? உள்ளத்தைக் கவரும் உருவ அழகுதான் வேண்டாமா? கலேயுள்ளம் படைத்தவனாகவும், திறமையுள்ளவனாகவும் யோக்கியப் பொறுப்புடையவனாகவும் இருக்க வேண்டாமா?

அதைப்பற்றியெல்லாம் அவளுக்குத் தெரியாது; அக்கறையும் இல்லே. ஆனால் பாபுவுக்கு இவற்றில் பல அம்சங்கள் தேவை என்பது அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. அவன் விஷயத்தில் இலே மறைவு, காய் மறைவான அக்கறையும் இருந்தது.

ஏன் இது இப்படி?

அத்தியாயம் 20

வித்தியாசம் ஏன்?

பல மாதங்களுக்குப் பிறகுதான் அப்பா, அம்மாவை முன்போல் அழைத்துப் பேசுவதாகத் தோன்றியது. அப்போது உஷா நடராஜ விக்கிரகத்துக்கு முன்னால் வைத்திருந்த வெள்ளிக் குத்து விளக்குகளுக்குப் பொட்டு இட்டு, முத்துப்போல் ஒளிஏற்றிக்கொண்டிருந்தாள்.

"சொர்ணம்! கண்ணபிரான் மறுபடியும் சென்னேக்கு வருகிறானும். தந்தி வந்திருக்கிறது!" என்றார் பரமசிவம்.

"பெரியவர்தான் தந்தி கொடுத்திருக்கிறாரா?" என்று பேச்சுக்குக் கேட்டாள் சொர்ணம்பாள்.

"இல்லே; அவனேதான் கொடுத்திருக்கிறான்!"

இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்புவதற்கும், குத்துவிளக்கைப் பொருத்திவிட்டு உஷா நிமிர்ந்து அவரைப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

"அவர்களுக்கு என்ன, சென்னப்பட்டணமும் சிங்கப்பூரும் கொல்லேத் தலேமாடாகத்தான் இருக்கிறது!" என்று கூறி விட்டுக் கணவனேயும் உஷாவையும் மாறி மாறிப் பார்த்தாள் சொர்ணம்பாள்.

"ஆனால் இந்தத் தடவை அவன் அதிக நாட்கள் தங்கும்படியாகத்தான் இருக்

கும். முத்தையா அவன் பெயருக்கு எல்லாவற்றையும் மாற்றி எழுதி வைத்து விடப் போகிறார்!''

''எழுதி வைத்தால்தானா? எழுதா விட்டாலும் அவருக்கு வாரிசு வேறே யார் இருக்கிறார்கள்?''

''அப்படியில்லே, சொர்ணம்! என்னை யோசனை கேட்டதற்கு நான்தான் உயில் எழுதிவிட வேண்டும் என்று சொன்னேன். என்னதான் எல்லாம் நிச்சயமாக இருந்தாலும், எழுத்துமூலமாகவும் அவர் காலத்திலேயே எழுதி வைத்துவிடுவது நல்லதில்லையா?'' என்றார் பரமசிவம்.

இதைச் சொல்லும்போதே அவர் கண்கள் வெளிச்சத்திலே பளபளத்தன. அளவிட்டுச் சொல்ல முடியாத செல்வமெல்லாம் தம்முடைய தாட்சிண்யத்துக்குக் கட்டுப்பட் டிருப்பது போல் அவர் உள்ளம் பூரித்தது. அந்தப் பூரிப்பின் புன்னகை அவருடைய உதடுகளிலே நெளிந்து கொண்டிருந்தது.

குத்து விளக்கின் ஐந்து முகங்களிலிருந்தும் பரவிய ஒளியில் உஷா கனகமயமாக விளங்கினாள். உருக்கி வார்த்த சிற்பம் ஒன்று உயிர்பெற்று நிற்பதுபோல் அவள் பணிவோடு நின்றாள். சொர்ணம்பாளுக்கே அவளைக் கண்டு பொறாமையாகத்தான் இருந்தது. இது என்ன கொள்ளை அழகு! முன்புறத்தைப் போலவே பின்புறத்திலும் முதுகு வரையில் இறங்கியிருந்தது பிளவுஸின் கழுத்து. தந்தக் கடைசலைப் போல் அது என்ன பளபளப்பு! மென்மை! உஷா ஆடைகளைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொள்கிற அழகே தனியாகத்தான் இருந்தது. அவளுக்கென்று விதம்விதமாக யார்தான் இவ்வளவு பொருத்தமாக வெட்டித் தைக்கிறார்களோ? அழகை அழகினால் அடக்கமாக மறைத்துக்கொண்டிருந்தன அவளுடைய நேர்த்தியான ஆடைகள். சேல் விழிகள் இரண்டும் பாலில் நீந்துவதுபோல் சென்று வந்தன. செவ்விய அதரங்கள் செந்தாமரையை நினைவூட்டின. மென் தோளும் கன்னல் கழுத்தும் செழுங்கரங்களும் சிறு இடையும் அழகிய பாதங்களும் பார்ப்பவரைக் கவர்ந்து பிரமிக்கச் செய்தன; அப்சர மங்கையோ என்று ஐயுற வைத்தன.

சொர்ணம்பாள் பெருமூச்செறிந்தாள். தெய்வம் தன்னைக் கொண்டே தன்னை வஞ்சித்து விட்டதாக அவள் எண்ணிக் கொண்டாள். அவளையும் சுந்தரியையும் ஒப்பிட்டுப் பார்த்து அவள் நெஞ்சம் பொருமியது. அவளுக்கும் இவளுக்கும்தான் எத்தனை வேறுபாடுகள்! ஒவ்வொரு சிறு விஷயங்களிலும் அவர்களுக்குள் எத்தனை வேற்றுமை!



இரண்டு பேரையும் அவள்தானே வளர்த்தாள்? பார்வையிலும், ருசியிலும் உருவிலும் உணர்விலும் மணத்திலும் குணத்திலும் இத்தனை வித்தியாசத்தை இவர்களுக்கு ஊட்டியது யார்? சுந்தரி அழகில்லாதவளாக இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். அழகுணர்ச்சி கூடவா இல்லாமல் போகவேண்டும் அவளுக்கு? அவளுக்குப் பிடித்த வண்ண ஆடைகள் எல்லாமே அவளை மேலும் குறைவுபடுத்திக் காட்டின. உஷாவின் புன்சிரிப்பிலே முல்லைப் பற்கள் ஒளிவீசிக் காட்டிவிட்டு ஒளிந்துகொண்டன. ஆனால் சுந்தரியின் சிரிப்பில் பற்கள் புரண்ட சோழிகளைப்போல் தோன்றின. சொர்ணம்பாளுக்கு வேதனையோடு அங்கே நிற்கவே முடியவில்லை. உஷாவின் அதிருஷ்டத்தைவிட அவளுடைய எழில் வடிவமே சொர்ணம்பாளுடைய சினத்தை அதிகப்படுத்தியது. பரமசிவம் மட்டும் எதிரில் இல்லாதிருந்தால் உஷாவைப் பிடித்து நிறுத்தி, ''நீ என் மகள் அல்ல! நான் உன்னுடைய தாயல்ல! அதனால் உனக்கு இங்கே இடமில்லை; போய்விடு!'' என்று கதறி யிருப்பாள்.

இத்தனை வருஷ காலமாக அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் வெடித்துக்கொண்டு புறப்பட்டுவிடுமோ என்று தான் அவளுக்கே திகிலாக இருந்தது.

"இப்பொழுதெல்லாம் கல்யாணப் பேச்சுக்கு உஷா ஒன்றும் தடுத்துப் பேசுவதில்லை, பார்த்தாயா?" என்று அவள் போனபிறகு, சொர்ணம்பாவிடம் கூறினார் பாரிஸ்டர்.

சொர்ணம்பாள் பல்லைக் கடித்துக் கொண்டாள். இன்னும் ஒரு வார்த்தை அவர் அவளைப் பற்றிப் புகழ்ச்சியாகச் சொல்லியிருந்தால் போதும்; அவளது நெஞ்சே வெடித்திருக்கும்.

"இதோ பாருங்கள், இப்போதே சொல்லி விட்டேன். விருந்து, பாட்டு, கூத்து என்று இந்தத் தடவை பெரிதாக ரகளை பண்ணிக் கொண்டிருந்தீர்களோ, நான் இந்த ஊரிலேயே இருக்க மாட்டேன். யாரை வேண்டுமானாலும் நீங்கள் ஏமாற்றிக் கொண்டிருங்கள். யார் வேண்டுமானாலும் உங்களிடம் ஏமாறட்டும்; ஆனால் நான் என்னவோ இனி ஏமாந்து கொண்டிருக்க மாட்டேன். இதனால் வருகிற அவமானத்தை நான் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்கவும் மாட்டேன்!" என்று கூறி விட்டு அவர் போவதற்கு முன்னால் அவள் அவ்விடத்தை விட்டு எழுந்து சென்றாள்.

பரமசிவம் ஒரு கணம் திகைத்துப் போய் நின்றார். சொர்ணம்பாளுடைய அறியாமையை அவர் பொறுத்துக் கொள்ளச் சித்தமாக இருந்தார். இத்தனை வருஷங்களாகப் பொறுத்துக் கொள்ளவில்லையா? ஆனால் இப்போது அறியாமையோடு கலந்த மூர்க்கத்தனத்தை அவரால் சகிக்கவே முடியவில்லை. அதை முளையிலேயே கிள்ளி யெறிந்துவிட நினைத்தார்.

வாசலில் வண்டியைக் காணவில்லை.

"வண்டி எங்கே, சுந்தரி?"

"அந்த உஷா தான் எடுத்துக்கொண்டு போயிருக்கிறாள்!"

"அந்த உஷா என்று அவளைச் சொல்வது நீ?" பரமசிவம் பொருமினார்.

"அந்த உஷா இல்லாமல் எந்த உஷா என்று சொல்வதாம்?"

"சீ! வாயை மூடு! மூதேவி!"

"மூத்தவள் தான் மூதேவி! இளையவள் அல்ல, அப்பா!" என்று மரியாதையின்றி எதிர்த்துப் பேசினாள் சுந்தரி.

பரமசிவத்தின் நான்கு விரல்களும் அவளுடைய கன்னத்திலே அழுத்தமாகப் பதிந்து போயின.

அவள் கன்னத்தைத் தடவிக்கொண்டு, "அவள் அந்தப் பேப்பர் தூக்குகிறவனுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கப் போனால், அதற்கு என்னை வந்து அடிக்கச் சொல்லியிருக்கிறதோ?" என்று கூறிப் பெரிதாக அழத் தொடங்கி விட்டாள்.

பரமசிவத்துக்கு ஒன்றும் தோன்றவில்லை. இவள் உண்மையைத்தான் சொல்கிறாளா, இல்லை, கதை கட்டி விடுகிறாளா? அவர் உள்ளம் கலக்கமுற்றது. ஆயினும் சமாளித்துக் கொண்டார். "எல்லாம் எனக்குத் தெரியும்! உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!"

குப்பன் வண்டியை எடுத்துக் கொண்டு வந்ததும் அவர் ரோசத்தோடு போய் ஏறிக் கொண்டார்.

"உஷா எங்கே போயிருக்கிறாள்?"

"சங்கத்துக்குத்தான், எசமான்!"

"யாரடா உன்னை வண்டியை எடுத்துக் கொண்டு போகச் சொன்னது?"

"எசமான்! இனிமே வெளியிலே போக மாட்டேங்களோன்னு...."

பரமசிவம் வேறு ஏதோ சொல்ல நினைத்தார். ஆனால் அதை அடக்கிக் கொண்டு, "இனி மேல் அங்கெல்லாம் போக வேண்டாமென்று உஷாவிடம் சொல்லி விடு! இன்னும் ஒரு வண்டி சின்னதாக வாங்கிவிட வேண்டியது தான்! இது போதாது!" என்றார் அவர்.

"ஆமாங்க!" என்று தலையை ஆட்டினான் குப்பன்.

(தொடரும்)

சுவர்ணமுகியும் ஏழு சித்திரக்குள்ளர்களும்

ஒரே ஒரு காலத்தில்...ஒரு ராஜாவுக்கு ஒரு பெண் இருந்தாள். அவளுடைய பொன் போன்ற வதனம் காரணமாக அவளுக்கு சுவர்ணமுகி என பெயரிடப்பட்டது.

சுவர்ணமுகியின் தாயார் இறந்தவுடன் ராஜா வேறொரு மனைவியைக் கல்யாணம் செய்து கொண்டான். புதிதாக வந்தவள் மாயக் கண்ணாடி ஒன்றின் முன்னே நின்று. "என்னைவிட அழகி யார் உண்டு. சொல் பார்க்கலாம்" என்று கேட்டாள். "சுவர்ணமுகி" என்று பதில் வந்தது.

உடனே ராணிக்குக் கோபம் பொங்கியது. தன் ஆளைக்கூப்பிட்டு சுவர்ணமுகியை உடனே கொன்றுவிடுமாறு உத்திரவிட்டாள். அந்த ஆள் சுவர்ணமுகியை கொல்லாமல் காட்டில் கொண்டு போய் விட்டுவிட்டான்.

காட்டில் வாழ்ந்து வந்த ஏழு சித்திரக் குள்ளர்கள் சுவர்ணமுகி மேல் கருணைகொண்டு அவளை வளர்த்து வந்தனர்.

மறுபடியும் ஒருநாள் ராணி மாயக்கண்ணாடி முன்பு நின்று "யார் என்னைவிட அழகி" என்று கேட்டாள். முன்போலவே "சுவர்ணமுகி" என்று பதில் வந்தது.

திரும்பவும் ராணிக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. விஷம் கலந்த ஆப்பிள் பழம் ஒன்று எடுத்துக் கொண்டு, கிழவி போல் வேஷம் தரித்து அவள் விடுவிடு வென்று காட்டிற்குச் சென்று, சுவர்ணமுகியை கண்டுபிடித்து அவளிடம் ஆப்பிளை உண்ணக் கொடுத்தாள். ஒரு துண்டைச் சாப்பிட்டவுடன் சுவர்ணமுகி உயிரற்று விழுந்தாள்.

பின்னர் ஏழு சித்திரக் குள்ளர்களும் சுவர்ணமுகியின் உடலை ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்துக் காப்பாற்றிவந்தனர்.

ஒரு நாள் அவ்வழியே வந்த ராஜகுமாரன் சுவர்ணமுகியின் அழகைக் கண்டு அப்படியே மயங்கி விட்டான்.

"எதைக் காண்பித்தால் இவளுக்கு உயிர் வரும் என்பது எனக்குத் தெரியும்" என்று சொல்லிக்கொண்டே ராஜகுமாரன் பாரிஸ் மிட்டாய் டின் ஒன்றை சுவர்ணமுகி முன் காட்டினான். உடனே சுவர்ணமுகி கண்களைத் திறந்து பார்த்து எழுந்து நின்றாள். யார்தான் பாரிஸ் மிட்டாய்களை மறுக்க முடியும்?



PRS 593a



நீதி: நீ காதலிப்பவர்களில்

பாரி மிட்டாயை விரும்பாதவரும் உண்டோ

Parry's

பாரிஸ் மிட்டாய்கள் நிறைந்த ருசியும், தூய்மையும் கொண்டவை. இவற்றை உங்கள் இஷ்டப்படி சில்லறையாகவோ, அல்லது கண்கவர் மோஸ்தர்களில் அமைந்துள்ள அழகான டின்களிலோ வாங்கலாம். விலை ரூ. 1.75 லிருந்து ரூ. 5.00 வரை.

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்

மாமல்லத் தல சயனர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

துவாபர யுகத்திலே ஓர் அரசன். அரக்கர் இனத்தைச் சேர்ந்தவன் என்றாலும் நல்ல இதயம் படைத்திருந்தான். மக்களையெல்லாம் நீதி தவறாது ஆண்டு வந்தான். ஆனால், மூன்று லகையும் அடிமைகொண்டு திரிலோகத்துக்குமே ஏக சக்ராதிபதியாக வாழ்ந்து வந்தான். ஆதலால் அவனை வீழ்த்த வேண்டினர் தேவர்கள் நாராயணனிடம். நாராயணனிடத்து இந்த அரசனுக்கு அளவிடற்கரிய அன்பு. ஆதலால் நாராயணனும் அவனை ஆட்கொள்ள நாளும் கிழமையும் எதிர்நோக்கி இருந்தார். அரசன் ராஜசூய யாகம் ஒன்றைச் சிறப்பாக நடத்தினான். யார் எதைக் கேட்டாலும் கொடுக்கிறேன் என்று சங்கல்பம் கொண்டு செய்யும் யாகம் அது. அந்த யாகசாலைக்கு ஒரு குள்ள வேதியன் வருகிறான். அரசனிடம் மூன்றடி மண் யாசித்துப் பெறுகிறான். அரசனின் குலகுருவாம் சுக்கிராச்சாரியார் தானம் கொடுக்காதே என்று தடுக்கிறார். அதையும் மீறியே கேட்ட தானத்தைக் கொடுத்து விடுகிறான் அரசன். உடனே குள்ளனாக வந்த வேதியன் விசுவரூபம் எடுக்கிறான். விண்ணுக்கும் மண்ணுக்கும் வளர்ந்து திரிவிக்கிரமனாக உயர்கிறான். ஒரு தாளால் வானம் முழுவதையும் மற்றொரு தாளால் இந்தப் பூவுலகம் முழுவதையுமே அளந்து விடுகிறான். மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று கேட்டபோது பரமபக்தனான அரசன் தன் தலையையே தாழ்த்திக் கொடுக்கிறான். அவன் தலையில் கால் வைத்து அவனைப் பாதாளத்துள் அமிழ்த்துகிறபோது அவன் வேண்டிக் கொள்கிறான், அவன் இருந்து அரசாண்ட இடம் அன்று முதல் அவன் பெயராலேயே வழங்க வேண்டுமென்று. பக்தன் விருப்பத்தை நிறைவேற்றுகிறார் பரந்தாமனும். ஆதலால்தான்-அந்த அரசனான மகாபலியின் பெயராலேயே இந்த ஊர் மகாபலிபுரம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

இப்படி ஒரு வியாக்கியானம் மகாபலிபுரத்துக்கு. இந்த வியாக்கியானம் சொல்பவர்கள், கால் ஆங்கிலமும் அரைக்கால் இந்தியும் அரைத்தமிழும் பேசும் அங்குள்ள வழிகாட்டிகள் (Guides). இதோடு விடுவார்களா? அங்குள்ள கல் ரதங்களைக் காட்டி, இங்கு பஞ்சபாண்டவர்கள், பாரத யுத்தம் முடிந்த பின் ரதங்களில் வந்திருக்கிறார்கள். அவர்களது அஸ்தினாபுரத்திலே ரதங்களையெல்லாம் நிறுத்த இடம் இல்லை என்று கண்டு இங்கேயே நிறுத்திவிட்டுப் புஷ்பக விமானத்தில் ஏறி ஊர் சென்றிருக்கிறார்கள். அவர்கள் நிறுத்திப்போன ரதங்கள்தான் இந்தப் பஞ்சபாண்டவ ரதங்கள் என்பார்கள். மேலும், இது 'ஹஸ்பெண்ட் எலிபெண்ட்' இது 'வைப் எலிபெண்ட்', இது 'சன் எலிபெண்ட்' என்றெல்லாம் விளக்கம் தருவார்கள். இவர்கள் சொல்லும் அத்தனையும் உண்மை அல்ல. சுத்த 'கப்ஸா' என்று சரித்திரம் படித்தவர்கள் நன்கு அறிவார்கள்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் ஒரு பெரிய சித்திரக்காரப் புலி. சிற்பக்கலையில் அளவில்லாத காதல் உடையவன். அவன் மகன் நரசிம்மவர்மனோ தந்தையையும் மிஞ்சிய ஆர்வம் உடையவன் சிற்பிகளை ஆதரிப்பதிலே. மலைகளைக் குடைந்து குடைந்து குடைவரைக் கோயில்களை உருவாக்கிக்கொண்டிருந்தான் மகேந்திரன் என்றால், மலைகளையே வெட்டிச்செதுக்கிக்கோயில்கள், விஹாரங்கள், ரதங்கள் எல்லாவற்றையும் நிர்மாணித்துக் கொண்டிருந்தான் நரசிம்மன். அவன் உருவாக்கி இருக்கிறான், ஓர் அரிய சிற்பக்கலைக் கூடத்தை. சிற்பக்கலை விற்பன்னனான நரசிம்மன், நல்ல மல்வீரனும் கூட. பெரிய பெரிய மல்லர்களையெல்லாம் யுத்தத்தில் வீழ்த்தியவன் ஆனதினாலே 'மாமல்லன்' என்ற விருதுப் பெயரும் பெறுகிறான். இந்த மாமல்லன் ஆதரவில் உருவாகிய சிற்பக் கூடத்தையே அன்று அதை உருவாக்கிய சிற்பிகள் "மாமல்லபுரம்" என்று அழைத்திருக்கிறார்கள். இந்த மாமல்லபுரத்தையே, திருமங்கை மன்னர் 'கடல் மல்லை' என்று பாடியிருக்கிறார். மல்லைபுரம் மல்லை ஆனது வியப்பில்லை. ஆனால் மகாபலிபுரம் என்றே ஆகிவிட்டதே, அதுதான் வியப்புக்குரியது. இதைவிட வியப்புக்குரியது, இத்தனை விவரமும் தெரிந்த இந்த நாளிலே, லக்ஷக்கணக்கான பணத்தைச் செலவுசெய்து விருந்தினர் விடுதி கட்டும் சர்க்கார்கூட அந்த மகாபலியை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு 'மகாபலிபுரம் விருந்தினர் விடுதி' என்று பெயர் வைத்திருப்பதுதான். போகட்டும், மகாபலியின் பெயராலேயே மகாமல்லனது புகழ் நின்று நிலவினால் சரிதான்.

இன்று இப்பிரசித்தி பெற்ற மாமல்லபுரத்துக்கே போகலாம். இங்குள்ள கற்பாறைகள் சொல்லும் கதைகளையும் அவை விரிக்கும் கலைச் செல்வங்களையும் பற்றித் தெரிவதற்கு முன்பு, இங்குள்ள பிரதான கோயிலையும் அங்கு கோயில் கொண்டிருக்கும் தலசயனரையும் பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ளலாம். மகாவிஷ்ணு நிற்பார், இருப்பார், கிடப்பார் என்பதை அறிவோம். இதில் அவரது சயனத்திருக்கோலமே நிரம்பவும் வசீகரமானது. கிட்டத்தட்ட இருபத்து ஏழு தலங்களில் அவர் சயனித்திருக்கிறார். அந்தச் சயனத்தில் தான் எத்தனை எத்தனை வகை. இருபதுக்கு மேற்பட்ட இடங்களிலே அவர் சயனித்திருப்பது ஆதிசேஷன் பேரிலேதான். இதனையே புஜங்க சயனம் என்பர். மற்றவையெல்லாம் உத்தியோக சயனம், தர்ப்ப சயனம், போக சயனம், மாணிக்க சயனம், வடபத்ர சயனம்,

வீரசயனம் என்பனவாம். இதையெல்லாம் விட்டுவிட்டு ஓரிடத்திலே தரையிலேயே படுத்துக் கொள்கிறார். அதனைத் தலசயனம் என்றே சொல்கிறார்கள். அப்படி, படுக்கப் பாயோ, தலைக்கு அணையோ இல்லாமல் சும்மா தரையிலே கிடக்கிறவர்தான் தலசயனப் பெருமாள். அப்படிக் கிடக்கும் இடம்தான் மாமல்லபுரம். இவரையே திருமங்கை ஆழ்வார் கடல் மல்லைத் தலசயனர் என்று அழைக்கிறார்.

> ஞானத்தின் உருவாகி, நிலமங்கை
> எழில் கொண்டான்
> வானத்தில் அவர் முறையால்
> மகிழ்ந்து ஏத்தி வலங்கொள்ள
> கானத்தின் கடல் மல்லைத்
> தலசயனத்து உறைகின்ற
> ஞானத்தின் ஒளி உருவை
> நினைவார் என்நாயகரே

என்று பாடியும் மகிழ்கின்றார்.


இங்கு எப்படி இவர் தரையிலேயே படுக்கும்படி நேர்ந்தது என்று தெரிய வேண்டாமா? அதற்குப் பிரும்மாண்ட புராணத்தையே ஒரு திருப்புத் திருப்ப வேணும். புண்டரீகர் என்று ஒரு மகரிஷி. அவர் மகாவிஷ்ணுவிடம் அத்தியந்த பக்தி உடையவர். தினம் தாமரை மலர் கொண்டே அர்ச்சித்து வழிபடுபவர். அவர் தலம் தலமாகச் செல்லும்போது திருவிடவெந்தை வந்து அங்குள்ள வராகப் பெருமானை வணங்குகிறார். அங்குள்ள தடாகத்தில் ஆயிரம் இதழ்கள் உள்ள ஓர் அரிய தாமரை மலர் கிடைக்கிறது அவருக்கு. அதனைப் பரந்த கடலில் உள்ள பரந்தாமர் திருவடியில் சேர்க்க அவரது உள்ளுணர்வு கூறியது. பாற்கடல் செல்வதற்குமுன், இடையே உள்ள கருங்கடலைக் கடக்க வேண்டியிருக்கிறது. இதனை எப்படிக் கடப்பது? அதற்காக அக்கடற்கரையிலே ஒரு கொண்டம் கட்டுகிறார். அந்தக் கொண்டத்துக்கு அப்புறம் கடல் தண்ணீரையெல்லாம் இறைத்துக் கொட்டிக் கடலை வற்ற அடித்து விட்டால், பாற்கடல் செல்வது எளிதாக இருக்குமே என நினைக்கிறார். இது முடிகிற காரியமா என்று கூட எண்ண வில்லை. வேலையைத் துவங்கி விடுகிறார். மலர் வாடுவதற்குள் கடல் நீரை வற்ற வைக்க வேண்டுமே என்று துரிதமாகவே வேலை நடக்கிறது. இவர் எடுத்துக் கொள்ளும் சிரமத்தைக் கண்டு பரந்தாமனே ஒரு வயோதிகர் வடிவில் வந்து, 'நானும் உமக்குத் துணை செய்யட்டுமா?' என்கிறார். அதற்குக் கூலியாகக் கொஞ்சம் உணவும் தண்ணீரும் கேட்கிறார். புண்டரீகர் அதற்கு ஒத்துக் கொண்டு அவருக்கு உணவு கொண்டுவர ஊருக்குள் செல்கிறார். திரும்பி வந்து பார்த்தால் வயோதிகர் சங்கு சக்ரதாரியாய், புண்டரீகர் கட்டிய கொண்டத்திலேயே படுத்துக் கொண்டிருக்கிறார். கடல் நீர் வற்றியிருக்கிறது. பாற்கடலுக்கு வழி நேரே திறந்திருக்கிறது. புண்டரீகரை வழிமறித்துத் தரிசனம் கொடுக்கவே, பரந்தாமன் இந்தத் தலசயனனாக எழுந்தருளியிருக்கிறார். அன்று புண்டரீக மகரிஷி வேண்டிக் கொண்டபடி என்றுமே தரையில் கிடக்கும் தலசயனனாகவே மக்களுக்குச் சேவை சாதிக்கிறார். இவர் வெறும் தலசயனன் மட்டும் அல்ல, ஜல சயனரும் கூடத்தான். தலசயனர் கோயில் கொண்டிருப்பது மாமல்லபுரம் ஊரில் உள்ள கோயிலில் என்றால் ஜலசயனர் கோயில் கொண்டிருப்பது கடற்கரைக் கோயிலிலே. இருவரையும் சேர்த்தே இருபத்தேழு பாசுரங்களில் மங்களா சாஸனம் செய்திருக்கின்றார் மங்கை மன்னன்.

மகாபலிபுரத்துக்குச் சென்னையிலிருந்தும் செல்லலாம்; செங்கல்பட்டிலிருந்தும் செல்லலாம். கார் வசதி யில்லாதவர்கள் பஸ்ஸில் ஏறித்தான் செல்லவேண்டும். எப்படிச்சென்றாலும் செல்கிறவர்களைத் தலசயனப் பெருமானை வலம் வரச் செய்து, அவர் கோயிலுக்கு இடப் பக்கம் இருக்கும் காலி மனையில் இறக்கி விட்டு விடுவார்கள். கொஞ்சம் பக்தி உடையவர்கள் என்றால் முதலில் தலசயனர் கோவிலுள் நுழைந்து, தலசயனரைத் தரிசித்து விட்டு வெளியே வரலாம். இல்லை, நமக்கும் பக்திக்கும் வெகு தூரம்; நமக்கும் கலைக்குமே நெருங்கிய தொடர்பு என்று பெருமைப்பட்டுக் கொள்கிறவர்கள் எல்லாம் அப்படியே மேற்கு நோக்கி நடக்கவே புறப்பட்டு விடலாம். உண்மைதான்; தலசயனர் கோயில் உள்ளே தலசயனரைத் தவிர பார்க்க வேண்டிய சிற்ப வடிவங்கள் அதிகம் இல்லை. இருக்கின்ற ஒரு சில ஆழ்வார்களின் வடிவங்கள் பேரில் இருக்கும் எண்ணெய்க் கசடு எல்லாம் எத்தனையோ வருஷ காலத்தியவை. ஆதலால் எல்லாம் மொழுமொழு வென்றே இருக்கும். அதனால் விரைவாகவே கோயிலுக்கு வெளியே உள்ள கலைச் செல்வங்களைக் காண்பதிலேயே அக்கறை காட்டலாம்.

இப்படி நமது பிரயாணத்தைத் துவங்கும் போது நாம் முதலில் காண்பது கிருஷ்ண மண்டபத்தையே. அங்குதான் கண்ணன் கோவர்த்தன கிரியையே குடையாகப் பிடித்துக் கோக்களையும், கோவலர்களையுமே காத்துக் கொண்டு நிற்கிறான். அங்குள்ள கண்ணன் அப்படி ஒன்றும் சின்னப் பையன் இல்லை. எட்டடிக்கு மேலே வளர்ந்த ஆஜானுபாகு. அவனையும் மற்றவர்களையும் பார்க்கிற போதே அங்கு பால் கறக்கும் கோபாலனையும் பார்க்கிறோம். அந்தக் கோபாலன் இன்றையக் காலத்தியவன். நாம் படம் பிடிக்கிறோம் என்று தெரிந்து, நம்மைத் திரும்பிப் பார்த்து ஒரு நல்ல 'போஸ்' வேறே கொடுக்கிறான். பெரியதொரு பாறையிலே வெட்டிச் செதுக்கிய அற்புதச் சிற்ப வடிவம். பின்னால் யாரோ மண்டபம் எல்லாம் கட்டி நாமெல்லாம் நின்று பார்க்க நல்ல வசதி பண்ணியிருக்கிறார்கள்.

இதற்குக் கொஞ்சம் மேற்கே நகர்ந்தால் பிரபலமான அர்ச்சுனன் தவம் என்னும் அர்த்த சித்திரப் பாறைமுன் வந்து நிற்போம். நாம் நிற்கும் இடத்திலிருந்து பதினைந்து அடி தாழ்ந்தும் மேலே இருபது அடி உயர்ந்தும் நீண்ட பெரிய இரண்டு பாறைகள் முழுவதையுமே அடைத்துக்கொண்டிருக்கும் இந்தச் சிற்ப வடிவம். (இது அர்ச்சுனன் தவமா? இல்லை பகீரதன் தவமா? என்பது இன்னும் விவாதத்துக்குரிய விஷயமாகவே இருக்கிறது. ஆனால் புதை பொருள் இலாகா டைரக்டர்


புஜங்க சயனர்


ஜலசயனர் இருக்கும் கடற்கரைக் கோயில்


மஹிஷாசுரமர்த்தனி

திரு டி. என். ராமச்சந்திரன் பேச்சை ஒரு தரம் கேட்டுவிட்டால் அவர் காது கேட்க இதைப் பகீரதன் தவம் என்று சொல்லத் துணிய மாட்டோம்!) இந்தச் சிற்ப சித்திரம் கல்லிலே வடித்த ஒரு கவிதை. எத்தனையோ விதமான வடிவங்கள், பூனை முதல் யானை வரை; தேவர்முதல் தவசி வரை. அர்ச்சுனன் தாடி, சடையுடன் தவம் செய்யும் கோலமும் அங்கு சிவபெருமான் எழுந்தருளிப் பாசுபதம் அளிக்கும் காட்சியும் தத்ரூபம். இடையே ஒரு 'கார்ட்டூன்' சித்திரமும் கூட. உண்மைத் தவசிகளிடையே ஒரு போலித் தவசி போல ருத்திராக்ஷப் பூனை தவம் செய்யும் காட்சி ஒன்றும் செதுக்கப் பட்டிருக்கிறது. தவம் செய்யும் பூனையைச் சுற்றி எலிகள் அடிக்கும் கும்மாளம் எல்லாமே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது அங்கே. இன்னும் என்ன என்ன அங்கே இருக்கிறது என்பதை விட என்ன என்ன இல்லை என்பது எளிது. அங்கு 'இல்லாதன இல்லை' என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் தானே.

இன்னும் மேற்கே நகர்ந்தால் பேன் பார்க்கும் குரங்குகள்; கண்ணன் வெண்ணெய் உண்டை என்றெல்லாம் காட்சிகள். பின்னும் தெற்கே திரும்பி மேட்டில் ஏறினால் அடுக்கடுக்காய் மண்டபங்கள். **லக்ஷ்மி மண்டபம், வராக மண்டபம், மஹிஷாசுரமர்த்தனி மண்டபம்** என்று பல மண்டபங்கள். எல்லாம் மலைகளைக் குடைந்து நிர்மாணிக்கப் பட்டவை. ஒரு மண்டபத்திலே வராகருக்கு எதிரே உலகளந்தார், மற்றொரு மண்டபத்திலே மஹிஷமர்த்தனிக்கு எதிரே புஜங்க சயனர். இப்படி அழகு அழகான சிற்ப வடிவங்களெல்லாம் Bas relief என்னும் அர்த்த சித்திர சிற்ப வடிவங்கள். இவைகளையே பார்த்துக்கொண்டு பல்லவர் காலத்துக் கலை வளத்தை வியந்து கொண்டே நிற்கலாம். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும்.

இன்னும் இம் மாமல்லையில் பார்க்க வேண்டியது எவ்வளவோ இருக்கின்றனவே. மலை மேல் கட்டிய கோயில். அக்கோயிலை அடுத்துக் கட்டிய கலங்கரை விளக்கம், எல்லாவற்றையுமே ஏறிப் பார்க்கலாம், நேரமும் காலில் வலுவும் இருந்தால். இதற்கெல்லாம் நேரம் இல்லை என்றால் விறுவிறு என்று கீழே இறங்கி ஐந்து ரதங்கள் என்று கைகாட்டி காட்டும் திசையில் சென்றால் அந்தப் பஞ்சபாண்டவ ரதங்களைப் பார்க்கலாம். பாண்டவர்களுக்கும் இந்த ரதங்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றாலும் ரதங்கள் எல்லாம் அழகானவை; பிரும்மாண்டமானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'பாணி'யிலே, நல்ல வேலைப்பாட்டுடன் செதுக்கப் பட்டவை. எத்தனை சிற்பிகள் எவ்வளவு காலம் வேலை செய்து இந்த அசையாத தேர்களை ஆக்கி முடித்தார்களோ?

இதோடு தீர்ந்து விடுகிறதா? இன்னும் கொஞ்சம் திரும்பிவந்து கிழக்கே பார்க்க நடந்து சவுக்குத்தோப்புகளையெல்லாம் கடந்தால்— அந்தக் கடற்கரைக் கோயிலுக்கே வரலாம். மற்றவையெல்லாம் கற்பாறைகளை வெட்டிச் செதுக்கியதாக இருக்க, இங்குள்ள கோயில்கள் இரண்டு மட்டும் கல்லால் கட்டிய கோயில்களாக இருக்கப் பார்ப்போம். ஒன்று சிவனுக்கு, ஒன்று விஷ்ணுவுக்கு என்று பங்கு. சிவனது லிங்கத்திருவுருவைவிட, ஜலசயனராக இருக்கும் பெருமான் மிகவும் காத்திரமான வடிவம். கையிலே டார்ச் இருந்தால், இருட்டில் புதைந்து கிடக்கும் அவரை நன்றாகத் தரிசிக்கலாம். பூஜை புனஸ்காரத்தை எல்லாம் தலசயனருக்குக் கொடுத்துவிட்டு, இந்த ஜலசயனர் ஒதுங்கியே வாழ்கிறார். இந்தக் கோயில்களை அடுத்த கடற்கரை அழகானது. எவ்வளவோ பகுதிகளைக் கடல் கொண்டு போய்விட்டது என்பர். இருக்கிற பகுதியைக் கூட விழுங்க வருவதுபோலவே கடல் அலை, அலையாக வந்து மோதும். இங்கு கொண்டு வந்திருக்கும் கட்டமுதை அவிழ்க்க வேண்டியதுதான். அதைக் கொண்டுவர மறந்தவர்கள், அங்கு விற்கும் பட்டாணிக் கடலையை மெல்லுவதுடன் திருப்தி அடைய வேண்டியதுதான்.


தமிழ் நாட்டில் கலை வளர்த்த பேரரசர்களில் தலையாய மகாமல்லன் புகழ் எல்லாம் இந்தக் கடல் மல்லையிலே கற்பாறை காட்டும் கவின் உருவிலேயே அடங்கிக் கிடக்கின்றன என்று சொன்னால் வியப்பில்லை. தமிழ் நாட்டின் கலைச்செல்வம் என்று உலகோர் எல்லாம் வியந்து நிற்கும் கடல் மல்லையை மகாமல்லன் பேரால் மாமல்லபுரம் என்று அழைத்தது தான் எவ்வளவு பொருத்தம். மாமல்லனது கனவெல்லாம் நனவான இடம் அது. நமக்கும் நம் நாட்டைப் பற்றி, நம் மொழியைப் பற்றி, நம் கலைகளைப் பற்றி, நம் இலக்கியங்களைப் பற்றி எத்தனையோ கனவுகள். அதெல்லாம் நனவாக வேண்டுமென்றால், மாமல்லபுரத்துக்கு ஒரு நடை விறுவிறு என்று போய்த் திரும்பிய உடனடியாகவே காரியத்தைத் துவங்கலாம்; அப்போது நம் கனவும் நனவாகும் என்று நம்பலாம்.

ஒரு சிறப்பான டானிக்



இளை
ஞருக்கும்

... முதியோருக்கும்



ஆல்போ-ஸாங்

ஜே. & ஜே. டிஷேன்
ஹைதராபாத் - டெக்கான்.



உலகப் பிரசித்திபெற்ற தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள் ... வேதனையைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.



பெப்ஸ்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணம் அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM

சோல் ஏஜண்டுகள்: தாதா அண்டு கம்பெனி
86, கைனியப்ப நாயக் தெரு, சென்னை - 3

கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 5


கேள்விக்குறி

சுந்தரத்தின் வருகையை எதிர் நோக்கி விஜு ஆஸ்பத்திரி வீட்டில் காத்திருந்தாள். அவள் டாக்டராக இருந்தால்தான் என்ன? டாக்டருக்கு நோய்நொடியே வராதா? பிறந்ததி லிருந்துஅவளுக்கு வீட்டுச் சாப்பாடுதான் சாப்பிட்டுப் பழக்கம். இப்பொழுது கிட் டத்தட்ட ஒரு மாதமாக ஹோட்டல் சாப்பாடு. அதுவும் கேசவபுரத்து ஸ்டே ஷன் ஹோட்டல் சாப்பாட்டைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அங்கே ஆறு மாத காலம் தொடர்ந்து சாப்பிட்டு ஒருவர் உயிரோடு இருந்தாரென்றால், அவருடைய உடல் தசையால் ஆன தில்லை; உருக்கால் ஆனது என்று கூசா மல் சொல்லி விடலாம். அப்படிப்பட்ட சாப்பாடு மென்னுடல் படைத்த விஜு வுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. சுந்தரத் தின் விஷயம் வேறு. அவன் பல ஹோட் டல்களில் சாப்பிட்டுப் பழக்கப்பட்ட வன். ஆதலால் அவனை அந்த உணவு ஒன்றும் செய்யவில்லை. ஆனால் விஜு ஹோட்டல் சாப்பாட்டை ருசிப்பதே இப்பொழுதுதானே!


கடந்த இரண்டு நாட்களாக அவள் உணவை முழுவதும் துறந்து விட்டாள். இன்று காலையில்தான், சுந்தரம் பிரத்தி யேகமாகத் தயாரிக்கச் செய்து எடுத்து வந்த ரசம் சாதத்தில் சிறிதளவு உட் கொண்டாள். இன்று அவள் உடல் நிலை அநேகமாகச் சரியாகிவிட்டது. அவள் சுந்தரத்தின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியவாறு பசியோடு காத்திருந் தாள். நர்ஸ் லலிதாவை அவள் ஏற் கெனவே வீட்டுக்கு அனுப்பி விட்டாள். ஆஸ்பத்திரியில் அப்பொழுது அவளை யன்றி வேறு யாரும் இல்லை. விஜு தனது ஆபீஸ் அறையில் மேசை மீது தலையைக் கவிழ்த்த வாறு அமர்ந்திருந்தாள்.

மணி ஒன்பதடித்து விட் டது. இன்னும் சுந்தரம் வரக்காணோம். விஜுவின் நெஞ்சில் இனமறியாத வேதனை ஒன்று எழுந்தது. அது பசியால் ஏற்பட்டதா, அல்லது சுந்தரத்தை இன்னும் காண வில்லையே என்ற கவலையால் ஏற்பட் டதா என்பதை அவளால் நிச்சயிக்க முடியவில்லை. என்னவோ அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. நாற்காலியி லிருந்து எழுந்து, ஒருதடவை வெளியே வந்து அடைத்திருந்த வாசற் கதவைத் திறந்து சுந்தரம் வர வேண்டிய திசை யில் பார்வையை ஓட்டினாள். தெரு ஒரே அமைதியாக இருந்தது. எங்கோ, ஏழெட்டு வீடுகளுக்கப்பால், ஒரு வீட்டுத் திண்ணையில் ஏழெட்டுப் பேர்கள் அமர்ந்து மெல்லிய குரலில் பேசிக் கொண் டிருந்தனர்.

அடுத்த தெரு குடியானவர் தெரு. அங்கிருந்து நாய் ஒன்று குரைத்தது. தெருவின் கோடியில் தெற்கு வடக்காகச் சென்ற ராஜபாட்டை வழியாக லாரி ஒன்று பெருங் குரலில் முனகிக் கொண்டு சென்றது. சாலை மரத்திலிருந்து ஆந்தை ஒன்று இடைவிடாமல் அலறிக் கொண் டிருந்தது. இவையெல்லாம் விஜுவின் மன வலியை இன்னும் அதிகமாக்கின.



மாயாவி



நீ அவளுக்குத் தெருவில் நிற்கவே பயமாக இருந்தது. சட்டென்று வாயில் கதவை மூடித் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்து மீண்டும் மேசைமீது தலையைக் கவிழ்த்துப் படுத்துக் கொண்டாள்.

எத்தனை நேரம் அவ்வாறு படுத்திருந்தாளோ, தெரியாது; வாசலில் மாட்டு வண்டி ஒன்று வரும் மணியோசை கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். வண்டி ஆஸ்பத்திரி வாசலில் நிற்கவே, "சுந்தரந்தான் வந்துவிட்டார்!" என்று ஆவலுடன் வாய்விட்டுக் கூறிக் கொண்டே வாசல் கதவைத் திறக்க ஓடினாள். கூடத்தில் எரிந்த பெட்ரோமாக்ஸ் விளக்கின் ஒளி வாசல் வரையில் வீசிற்று. வண்டி தங்கள் வீட்டு வண்டி என்பதைக் கண்டதும் அவளுக்கு ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. "ஆமாம், நம் வீட்டு வண்டிதான். அதோ மாடசாமி இறங்கி வருகிறானே!" என்று கூறிக் கொண்டவள் மறுகணம், "ஐயோ!" என்று அலறினாள். "இது என்ன மாடசாமியின் உடலெல்லாம் ரத்தம்!"

"என்ன, மாடசாமி, ஐயோ, எங்கே விழுந்தாய்?" என்று வண்டியை நோக்கி ஓடி வந்த அவள், வண்டியிலிருந்து தன் தந்தை இறங்கிக் கொண்டிருந்ததையும், அவர் மண்டையிலிருந்து உதிரம் வழிந்து கொண்டிருந்ததையும் கண்டதும், "ஐயோ அப்பா! என்ன நேர்ந்தது? வண்டி குடை சாய்ந்து விட்டதா?" என்று பரபரப்புடன் அவரது கைகளைப் பற்றிக்கொண்டாள்.

சச்சிதானந்தம் ஒன்றும் பேசவில்லை. அவர் அவளை அமைதியாயிருக்குமாறு கையினால் சாடை காட்டினார். பிறகு அவளை அணைத்தவாறு, "உள்ளே வா, அம்மா!" என்று கூறிவிட்டு, மாடசாமியை நோக்கி, "ஜாக்கிரதையாக உள்ளே தூக்கிக் கொண்டு வந்து போடு, மாடசாமி!" என்றார்.

"யாரை?" விஜயா அவர் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு வண்டிக்குள்ளே பார்வையைச் செலுத்தினாள். இருட்டில் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. ஆயினும், உள்ளே இன்னும் யாரோ கிடத்தப்பட்டிருந்ததை அவள் காண முடிந்தது. "யார் அப்பா அது? அத்தையா அல்லது மாலாவா? ஐயோ, எங்கே, சென்றிருந்தீர்கள் நீங்கள்? எங்கே ஏற்பட்டது விபத்து?"

"உள்ளே வா அம்மா, சொல்லுகிறேன். இங்கே கூக்குரலிடாதே. கூட்டம் கூடிவிடப் போகிறது" என்று சச்சிதானந்தம் மகளின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார்.

வீணா அவர் பிடியில் சிக்காமல் வண்டியின் கூண்டைப் பிடித்துக் கொண்டு, உள்ளேயிருந்து மாடசாமி இறக்கிக் கொண்டிருந்த உருவத்தைக் கூர்மையாக நோக்கினாள். முதலில் அவளுக்குத் தெரிந்தது 'டிரௌஸர்-பூட்ஸ்' அணிந்த இரு பாதங்கள்தாம். அந்த டிரௌஸரையும் பூட்ஸையும் பார்த்ததுமே அவள் "சுந்தர்!" என்று தெருவே கலங்கும்படி வீரிட்டாள்.

சச்சிதானந்தம் அவள் வாயைப் பொத்திப் பலவந்தமாக வீட்டினுள்ளே இழுத்துச் சென்றார். பின்னாலேயே மாடசாமி சுந்தரத்தின் உடலைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு உள்ளே வந்தான். நோயாளிகளைப் பரிசோதிக்கும் அறையிலிருந்த மெத்தை விரிக்கப்பட்ட நீண்ட மேசைமீது அவன் சுந்தரத்தைக் கிடத்தியதும், வீணா மீண்டும் தந்தையின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு சுந்தரத்திடம் பாய்ந்தாள். சச்சிதானந்தமும் அவளை விட்டுவிட்டு, மாடசாமியிடம் திரும்பி, "நீ வண்டியை முதலில் தெருவின் நடுவிலிருக்கும் சந்தில் கொண்டுபோய் ஒதுக்கி நிறுத்திவிட்டு வா, மாடசாமி. ஒருவரிடமும் ஒன்றும் சொல்லாதே" என்று எச்சரித்து அனுப்பினார்.

பிறகு, சுந்தரத்தின் உடல்மீது தலையை வைத்துக் கதறிக் கொண்டிருந்த மகளின் முகத்தை நிமிர்த்தி, "முதலில் உயிர் இருக்கிறதா, பார் அம்மா!" என்று விம்மினார்.

வீணா சட்டென்று விழிப்புற்றுச் சுந்தரத்தின் கையைப் பிடித்து நாடி பார்த்தாள். அவள் முகத்தில் சிறிதளவு நிம்மதி காணப்பட்டது. "சாகவில்லை அப்பா; என்ன நேரிட்டது உங்கள் எல்லாருக்கும்?" என்று அவள் அழுதாள்.

"அதைப் பிறகு சொல்கிறேன், அம்மா! முதலில் சுந்தரத்துக்கு என்ன என்ன சிகிச்சைகள் செய்யவேண்டுமோ, அவற்றைச் செய்து அவனை நினைவடையச் செய்" என்று அவர் சோகத்தில் தன்னை மறந்திருந்த அவளுக்குக் கடமையை நினைவூட்டினார்.

அடுத்த சில நிமிஷங்களுக்கு வீணா பம்பரமானாள். சுந்தரத்துக்கு மண்டையில் இரண்டு-மூன்று இடங்களில் பலமாக அடிபட்டு இருந்தபோதிலும் ஒரே ஒரு காயந்தான் சிறிது பயமளிக்கும் வண்ணம் இருந்தது. உடலிலும் பல இடங்கள் தடியடியால் வீங்கிப் போயிருந்தன. ஆனால் எலும்புகளுக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்பதைப் பரிசோதித்துப் பார்த்த பிறகு வீணா இன்னும் நிம்மதி அடைந்தாள். அவள் சுந்தரத்தின் காயங்களைச் சடுதியில் கழுவிக் கட்டி, அவன் நினைவடைய ஓர் இன்ஜெக்ஷனையும் செலுத்திவிட்டுத் தந்தையின் காயங்களை ஆராய வந்தாள்.

சச்சிதானந்தம் இப்பொழுது நினைவற்ற நிலையில் நாற்காலியில் சாய்ந்து கிடந்தார். அவருக்கு நடு மண்டையில் ஒரே ஒரு காயந்தான் இருந்தது. ஆயினும் அது சுந்தரத்தின் காயத்தைவிட ஆழமாக அவருடைய வழுக்கை மண்டையைப் பிளந்திருந்தது. ஏதோ ஒரு வேகத்தில் இத்தனை நேரம் அவர் அதன் வேதனையைச் சகித்துக் கொண்டிருந்தார். ஆனால் முதிர்ந்த உடல் எத்தனை நேரந்தான் ஈடுகொடுக்க முடியும்? சுந்தரம் பிழைத்திருக்க வேண்டுமே என்ற கவலையில் அவர் தமது வேதனைகளை மறந்திருந்தார். அவன் உயிரோடிருக்கிறான் என்பது தெரிந்த பிறகுதான் தமது காயத்தின் வேதனை அவருக்குத் தெரிந்தது. மண்டையின் மீது வைத்த கை வைத்தபடியே இருக்க மயங்கி விட்டார்.



வீணா சடுதியில் அவருக்கும் சிகிச்சை செய்து, இன்ஜெக்ஷனைச் செலுத்தினாள். இதற்குள் மாடசாமி திரும்பி வந்துவிட்டான். அவன் கெட்டிக்காரன், முன்

யோசனை உள்ளவன். வண்டியைச் சந்தில் நிறுத்திவிட்டு, அடுத்த தெருவிலிருந்த நர்ஸ் லலிதாவின் வீட்டுக்குச் சென்று அவளை உடன் அழைத்து வந்திருந்தான். பிறகு லலிதாவும் வினுவும் மாடசாமியின் உதவியுடன் சுந்தரத்தையும் சச்சிதானந்தத்தையும் பின் கட்டிலிருந்த இரண்டு கட்டில்களுக்குத் தூக்கிச் சென்று படுக்க வைத்தனர். அவர்களைக் கவனித்துக் கொள்ள லலிதாவை நிறுத்திவிட்டு மாடசாமியின் காயங்களுக்குக் கட்டுப் போட வந்தாள் வினு. மாடசாமிக்கு அடி ஒன்றும் அவ்வளவு பலமில்லை. கையிலிருந்த தார்க் குச்சியால் அவன் மண்டையில் விழ வேண்டிய அடிகளைத் தடுத்துவிட்டான். உடலில் தான் இரண்டு இடங்களில் தடியடிபட்டு வீங்கியிருந்தது. முகத்தில் ஓர் இடத்தில் அவன் கையிலிருந்த தார்க்குச்சியே கிழித்துக் காயம் ஏற்படுத்தியிருந்தது. அவன் காயங்களுக்கு மருந்திட்டுக் கொண்டே, "எந்தப் பாவிகளின் காரியம் இது?" என்று கேட்டாள் வினு.

மாடசாமி நடந்ததைச் சுருக்கமாகக் கூறினான். "வேறே யாரு சின்னம்மா இதைச் செய்திருக்கப் போறாங்க? எல்லாம் அந்தப் பாவி தாணுவதி ஐயாவின் வேலையாகத்தான் இருக்கும். என்னவோ போங்க, நாங்க சமயத்திலே வந்ததினாலே ஐயா இந்த மட்டோடாவது உசிரு பிழைச்சாரு; இல்லாட்டி...."

"நீங்கள் இந்த ராத்திரி நேரத்தில் ஸ்டேஷன் பக்கம் எங்கே போயிருந்தீர்கள்?" என்று கேட்டாள் வினு.

"பனையங்குளத்து நிலத்திலே அறுவடை ஆகியிருக்குது சின்னம்மா. ஐயாவும் நானும் குத்தகை நெல்லைப் பிரிச்சிக்கிட்டு வரப் போயிருந்தோம். நாளைக்குத்தான் திரும்ப வருவதாக இருந்தோம். என்னவோ, அந்தச் செந்திலாண்டவன் இன்னைக்கே வேலையை முடிச்சுக் குடுத்து எங்களைக் கருக்கலிலே அங்கேயிருந்து புறப்படவைச்சுட்டான்."

நர்ஸ் லலிதா ஓடி வந்து சுந்தரம் நினைவடைந்து விட்டதாக அறிவித்தாள். வினுவும் மாடசாமியும் பின்கட்டுக்கு விரைந்தனர். வினுவைக் கண்டதும் சுந்தரம் வேதனை நிறைந்த முறுவலுடன் கைகள் இரண்டையும் அவளை நோக்கி நீட்டினான். அக் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அவள் கதறினாள். சுந்தரம் மெதுவாக அவள் தலையை வருடிக்கொண்டே, "அழாதே, வினு! கடவுள் நம் பக்கம் இருக்கிறார் என்பதற்கு நான் உயிர் மீண்டிருப்பதே அத்தாட்சி!" என்று ஏதேதோ கூறி அவளைத் தேற்ற முயன்றான்.

வினு கண்ணீர் சோர்ந்த முகத்தைச் சட்டென்று நிமிர்த்தி, "கடவுள் இருக்கிறாரா முதலில்? எங்கே இருக்கிறார்? நீங்கள் யாருக்கு என்ன தீங்கிழைத்தீர்கள் என்று அவர் இந்தக் கொடுந் தண்டனையை உங்களுக்கு அளித்தார்?" என்று வெடித்தாள்.

சுந்தரத்தின் உள்ளத்தில் சுருக்கென்று தைத்தது இந்தப் பேச்சு. ஆம், அவன் யாருக்காவது துரோகம் இழைத்திருந்தான் என்றால், அது அவனைப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட பெற்றோருக்குத்தான். ஒருகால் அதற்குத்தான் தனக்கு இத்தகைய தண்டனை கிடைத்ததோ? மறுநிமிஷம் அவன் நீரில் மூழ்கிய காகம் ஈரம் போக உடலைச் சிலிர்த்துக் கொள்வதுபோல் இந்த நினைவிலிருந்து தன் மனத்தைச் சிலிர்த்துக் கொண்டான். இல்லை, இத்தகைய மனத் தளர்ச்சிக்கு அவன் இடம் கொடுக்கலாகாது. எது வந்தாலும் ஏற்கத் துணிந்து தியாகத் தீயில் குதித்திருக்கையில் இது என்ன அசட்டு நினைவு! அவன் அவளுக்குப் பதில் சொல்லாமல் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். ஆயினும் அன்றிரவு முழுவதும், காயத்தின் வேதனைக்கும், உடலின் சோர்வுக்கும் இடையே வினுவின் இந்தக் கேள்வி அவன் உள்ளத்தே சுழன்று கொண்டுதான் இருந்தது-அவன் யாருக்கு என்ன தீங்கிழைத்தான் என்று இந்தத் தண்டனையைக் கடவுள் அவனுக்கு அளித்தார்? யாருக்கு.....? யாருக்கு.....?

அன்றிரவு இந்தச் செய்தியை யாரும் வெளியே பரவ விடவில்லை. ஆனால் மறுநாள் பொழுது விடியுமுன்பே அது ஊரெங்கும் பரவி விட்டது - புஷ்பவனம் பிள்ளையின் மகனையும் சச்சிதானந்தம் பிள்ளையையும் யாரோ சில முரடர்கள் வழிமறித்து மண்டையைப் பிளந்து விட்டார்களாம்! அவர்கள் இருவரும் அபாயமான நிலையில் வினுவின் ஆஸ்பத்திரியில் கிடக்கின்றனராம்.

என்ன இருந்தாலும் பெற்ற மனம் பித்தல்லவா? புஷ்பவனமும் மரகதத்தம்மாளும் இச்செய்தி அறிந்ததுமே வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு வடக்குத் தெருவுக்கு ஓடி வந்தனர். மரகதத்தம்மாள் மகனைக் கட்டிக் கொண்டு இத்தனை நாட்களாய் அடக்கி வைத்துக் கொண்டிருந்த அழுகை முழுவதையும் அழுது தீர்த்தாள். "வேண்டாண்டா சுந்தரம். நீங்க செய்யப் போறது கடவுளுக்குப் பிடிக்கலே; அதனாலேதான் இப்படியெல்லாம் நடந்திருக்குது. தலைக்கு வந்தது தலைப்பாகை


ஷாலிமார் ஸூபர்லாக்
தொழிற்சாலை களிலும், வீடுகளிலும் உபயோகிக்க பிரகாசமான பெயிண்ட்
ஷாலிமார் ஸூபர்லாக்
ஸின்தடிக் எனாமல்
... தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும் பலவிதமான உபயோகங்களுக்கு மிகப் பொருத்தமானது. எல்லா வித இயந்திரங்கள், அதற்குத்தேவையான சாமான்கள், போக்குவரத்து சாதனங்கள், வெளிகளில் நிறுத்தப்படும் அட்வர்டைஸ்மெண்ட் போர்டுகள், மரத்தாலும், உலோகங்களாலும் செய்யப்பட்ட பொருள்கள், மேஜை, நாற்காலி முதலியன, விளையாட்டு சாமான்கள் மற்றுமுள்ள வீட்டு சாமான்கள் எல்லாவற்றிற்கும் ஏற்றது.
ஷாலிமார் ஸூபர்லாக் அதிசீக்கிரத்தில் இறுகி உலர்ந்து, அதிகமான, கண்ணாடிபோல் மிகப்பளபளப்புடன் இருக்கக் கூடியது. உட்புறமோ, வெளிப்புறமோ, எந்தப்புறமானாலும் பூசலாம் ப்ரஷ்ஷினாலாவது, ஸ்ப்ரேயினாலாவது, அல்லது டிப்பிங் முறையிலாவது, எல்லா விதமான இடங்களிலும்பூசலாம் கலர்களை ஒன்றோடொன்று கலந்தும் உபயோகிக்கலாம்.
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD
Calcutta • Bombay • Madras • New Delhi • Kanpur
SPW 538 TAM


அமுல்

பால் தயாரிப்புக்களில் எல்லா நல்ல அம்சங்களும் பொருந்தியிருக்கின்றன...

உதாரணமாக,

பாலைச் சேகரிக்கும் முறையைப்பற்றி எடுத்துக்கொள்ளுங்கள்...





புதிய, சுத்தமான பால், இயற்கை வெண்ணெய்ச் சத்து நிறைந்த பால், தினந்தோறும் சுமார் 2,00,000 பவுண்டு பால் சேகரிக்கப்படுகிறது. தொழிற்சாலையில் இந்த சேகரிக்கப்பட்ட பாலிலுள்ள நோய்க் கிருமிகளை அறவே அகற்ற பால் பாஸ்டுரைஸ் செய்யப்படுகிறது. இதில் சுமார் 80,000 பவுண்டு பால் புகழ்பெற்ற ஆரே மில்க் காலனி மூலம் பம்பாயில் விநியோகிக்கப்படுகிறது. சுமார் 8000 பவுண்டு பால் கெய்ரா ஜில்லாவில 16,000 குழந்தைகளுக்கு "யுனைடெட் நேஷன்ஸ் இன்டர்நேஷனல் சில்ட்ரன்ஸ் எமர்ஜென்ஸி பண்ட்"இன் ஆதரவில் இலவசமாக வழங்கப்படுகிறது. இவைபோக மீதமுள்ள பாலைக்கொண்டு, இன்று வீடுதோறும் வழங்கும் அமுல் பால் தயாரிப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன.


அமுல் — சிறந்த தரத்தின், பரிசுத்தத்தன்மையின் சின்னம்.

கெய்ரா டிஸ்டிரிக்ட் கோஆபரேடிவ் மில்க் புரொடியூஸர்ஸ் யூனியன் லிமிடெட், ஆனந்து, (வெஸ்டர்ன் ரெயில்வே)

ஆடை நிறைந்த அமுல் கண்டென்ஸ்டு மில்க்

உங்கள் சுவைக்கேற்ப இனிமையாக்கப்பெற்றது. பானங்கள் தயாரிக்க மிகவும் சிறந்தது.





அமுல் வெண்ணெய்

வெளிநாட்டுப் பால்பண்ணை நிபுணர்களால் உலகிலேயே சிறந்த வெண்ணெய்க்கு ஈடானது என்று மதிப்பிடப்பட்டிருப்பது.

சத்துள்ள அமுல் பால் பவுடர்

ஆரோக்கியத்துக்குகந்த, சுத்தமான பால் பவுடர். அதன் புதுமை கெடாமல் பாதுகாக்க நைட்ரஜன் நிறைந்த டின்களில் அடைக்கப்பட்டிருக்கிறது.





அமுல் நெய்

மத்திய உணவு விவசாய அமைச்சகத்திலும் சிறந்த நெய்யென்று தரமாக மதிக்கப் பெற்றிருக்கிறது.

PSKMP-26

யோட போச்சுன்னு வீட்டுக்குத் திரும்பி வந்துடு!" என்று அவள் பிரலாபித்தாள்.

புஷ்பவனத்தின் கண்களிலும் கண்ணீர் சிந்தியது. அவர் நெடுநேரம் ஒன்றும் பேசாமலே நின்று கொண்டிருந்தார். ஆனால் மனைவியின் கதறலை யெல்லாம் அலட்சியமாகச் செவிமடுப்பவன் போல் மேற்கூரையைப் பார்த்துக்கொண்டு அசையாமல் கிடந்த மகனின் நிலை அவருக்குக் கோபத்தை எழுப்பியது. அவர் சட்டென்று மனைவியின் கையைப் பிடித்து இழுத்து, "ஏய்! செவிடன் காதிலே சங்கு ஊதினாப்போலே நீ ஏன் இங்கே வந்து ஒப்பாரி வைச்சுக்கிட்டிருக்கிறே? பெற்றவங்களுக்குச் செய்த துரோகத்துக்கு அவன் படவேண்டிய தண்டனைகளிலே பாக்கியையும் பட்ட பிறகல்லவா அவன் புத்தி வந்து திரும்பி வரப் போறான். வா, போகலாம்" என்று கத்தினார்.

சுந்தரத்தின் உள்ளத்தை அவர் வார்த்தைகள் இன்னும் அறுத்தன. ஆனால் அவன் மனத்தை மீண்டும் கல்லாக்கிக் கொண்டான். 'வயது வந்த இளைஞன் தனக்குப் பிடித்தவளை மணந்துகொள்ள விரும்புவது பெற்றோருக்குச் செய்யும் துரோகம் என்றால், அதற்காகத் தனக்கு இத்தகைய தண்டனைகள்தான் கிடைக்குமென்றால், அத் தண்டனைகளை நான் ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்' என்று சொல்ல அவன் நாத் துடித்தது. ஆனால், இந்த இடத்தில் அதிலும் அடுத்த கட்டிலில் சச்சிதானந்தம் படுத்திருக்கையில் தான் ஏதாவது பேசினால் அது அவருக்கும் தன் பெற்றோருக்கும் நேரடிச் சண்டையைக் கிளப்பிவிடுமென்று தன்னை அடக்கிக் கொண்டான்.

"வாடா சுந்தரம், வீட்டுக்குப் போகலாம்; நீ இல்லாம வீடு வெறிச்சுன்னு கிடக்குடா; வாடா மகனே, வாடா" என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் பெற்றவள்.

ஆனால் சுந்தரம் வறண்ட சிரிப்பொன்றைச் சிந்திவிட்டு, "நான் வருங்காலம் வரும் அம்மா; அப்பொழுது வருகிறேன். இப்பொழுது நீ போ. என்னைப் பற்றிக் கவலைப்படாதே!" என்றான்.

மரகதத்தம்மாள் அழுது கொண்டே கணவனைப் பின்பற்றிச் சென்றாள்.

அவர்கள் போய்ச் சிறிது நேரமானதும், "ஐயோ தம்பி! என் தலையிலே கல்லைப் போட்டுட்டியேடா!" என்று கத்திக் கொண்டு தைலம்மாள் ஓடி வந்தாள். அவள், தலையில் பெரிய கட்டுடன் படுத்திருந்த சச்சிதானந்தத்தின் கட்டிலில் அவர் அருகில் அமர்ந்து கொண்டு ஓர் அரைமணி நேரம் ஒப்பாரி வைத்தாள். சுந்தரம் தன் பெற்றோரிடம் எத்தகைய மௌனத்தைக் கடைப்பிடித்தானோ, அதே மௌனத்தைத்தான் சச்சிதானந்தமும் தைலம்மாளின் புலம்பல்களுக்குப் பதிலாக அளித்தார். ஆனால் அவருடைய பொறுமையும் அவளுடைய பேச்சுக்களால் சோதிக்கப்பட்டது. "அவன் பண்ணின பாவத்துக்குச் செந்தில் வேல் முருகன் அவனுக்குப் பலன்கொடுத்தான். நீ ஏன்டா குறுக்கே விழுந்து அதைத் தடுக்கப் போய் மண்டையிலே வாங்கிக்கிட்டே? சரி, பட்டதுதான் பட்டுக்கிட்டே; அப்புறமும் புத்திவராம இங்கே ஏன்டா வந்து படுத்துக்கிட்டிருக்கிறே, மானங்கெட்டவங்க வாழ்ந்துக்கிட்டிருக்கிற இடத்திலே!" என்று தன் ஆத்திரத்தை யெல்லாம் காட்டிப் பொரிந்து தள்ளியபோது, சுந்தரத்தைப் போல் அவரால் சிரித்து மழுப்ப முடியவில்லை. "நிறுத்து அக்கா உன் பிதற்றலை!" என்று கத்தினார். தைலம்மாள் திடுக்கிட்டு வாயடைத்து நின்ற போது, "ஏய் மாணிக்கம்! மாணிக்கம்!" என்று வீணையின் ஆஸ்பத்திரி வேலைக்காரனை விளித்தார். "எசமான்!" என்று ஓடி வந்த அவனிடம், "இனி மேல் எந்த ராசாவாக இருந்தாலும் உங்கள் ஆஸ்பத்திரி அறையைத் தாண்டி உள்ளே வர விடாதே. மனிதன் உடலும் உள்ளமும் புண்பட்டுக் கிடப்பது போதாதென்று அந்தப் புண்ணிலே கோலிட வந்துகொண்டிருக்கிறதுகள் ஒன்றொன்றாய். போடா போ, இந்த அம்மாளைக்கொண்டுஆஸ்பத்திரிக்கு வெளியே விட்டுட்டு வா" என்று கூறிவிட்டுத் தைலம்மாளின் முகத்தைப் பார்ப்பதற்கே வெறுப் படைந்தவர் போல் மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டார்.

தைலம்மாள் இன்னும் சிறிது நேரம் ஏதேதோ சளைத்து விட்டு, வீணையையும்

நாட்டுக்கு நல்கிய நல்மொழி-7

ஏற்கனவே இருக்கும் ஜாதி வித்தியாசங்கள் போதாதென்று ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகளையும் வெறுப்பையும் வளர்க்கப் பார்க்கிறார்கள். நாட்டில் இரண்டே ஜாதிகள்தான் இருக்க வேண்டும். யோக்யன், அயோக்கியன் என்ற இரு ஜாதிகள்தான் அவை. —ராஜாஜி



சுந்தரத்தையும் ஒரு பாட்டம் திட்டித் தீர்த்துவிட்டுப் போய்ச் சேர்ந்தான்.

• • •

அன்றிரவு எட்டு மணி இருக்கும். வீணை கடைசி நோயாளிக்கு மருந்து எழுதிக் கொடுத்து விட்டு உள்ளே போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது முன்னறையில் மெல்லிய விசும்பல் ஒன்று கேட்டது. இன்னும் யாரேனும் நோயாளிகள்தான் காத்திருக்கிறார்களோ என எண்ணிய அவள் நாற்காலியிலிருந்து எழுந்து முன்னறைக்கு வந்து பார்த்தாள். அங்கே நோயாளிகள் அமரும் பெஞ்சு ஒன்றில் மாலா அமர்ந்து முகத்தை மூடியவாறு தேம்பிக் கொண்டிருந்தாள். மாலாவை அவள் பார்த்துக் கிட்டத்தட்ட ஒரு மாதமாகி விட்டது. சரியாக அவளுடன் பேசியோ பல மாதங்கள் ஆகிவிட்டன. என்றைக்கு அவள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை; தான் மறு வாழ்வில் புகுந்து விடுவது என்று தீர்மானித்தாளோ, அன்று தொட்டு அவள் முகம் பார்த்துப் பேச வீணைக்கே வெட்கமாக இருந்தது. எப்பொழுதோ ஒரிரு தடவைகள் எதைப் பற்றியோ அவளிடம் பேசியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதுகூடச் சுவரைப் பார்த்துக் கொண்டுதான் பேசினாள்; மாலாவும் தரையைப் பார்த்துக் கொண்டுதான் பதிலளித்தாள். ஆனால் இன்று அவளால் அப்படி இருக்க முடியவில்லை. ஏதோ ஒரு வேகம் அவளை உந்தியது. "மாலா!" என்று அவளிடம் பாய்ந்தோடினாள்.

"என்னை மன்னித்துக் கொள் அக்கா. உள்ளே யாரையும் விடவேண்டாம் என்று மாமா கட்டளையிட்டிருப்பதாக அம்மா வந்து சொன்னாள். இருந்தாலும் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் அவரை ஒரு தடவை பார்க்காமல்...." அவளால் மேலே பேச முடியவில்லை. மீண்டும் முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"அழாதே மாலா. அப்பாவைத் தானே பார்க்க வேண்டும்? இதோ அடுத்த அறையில்தான் அவருக்குத் தனியாகப் படுக்கை போட்டுக் கொடுத்திருக்கிறது. போய்ப் பார்த்து விட்டு வா; ஆனால் உன் அம்மாவைப் போல் அவர் மனம் புண்படும்படியாக எதுவும் பேசாதே" என்று அவளைக் கையைப் பிடித்து எழுப்பினாள் வீணை.

"மாமாவை நான் பிறகு பார்த்துக் கொள்கிறேன். இப்பொழுது அவரை... அவரை...ஒரே தடவை மட்டும் அக்கா. உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவு செய்து....இதோ, என் நெஞ்சைத் தொட்டுப் பார். அது துடிக்கும் துடிப்பைக் கேள். அக்கா...."

"யாரை? சுந்தரத்தையா!" வீணையின் மனம் திடுக்கிட்டது. "அவரை...நீ...!"

"ஆமாம், நான்தான்.....அவரைத் தான்...பார்க்கக் கூடாதா? இந்த ஒரு தடவைதான் அக்கா; ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டேன். நீ வேண்டுமானால் என் கூடவே வந்து நின்று கொண்டிரு. தயவு செய்."

"மாலா! அவரை நீ....?" வீணை மீண்டும் தடுமாறினாள்.

"நிச்சயமாகச் சொல்கிறேன். அவரை உன்னிடமிருந்து பறித்துக் கொள்ள மாட்டேன். இன்று நீ அவருக்கு எப்படி இனித்திருக்கிறாயோ, அப்படித்தான் நானும் ஒருகாலத்தில் இருந்தேன், அக்கா. என் வாய்த் துடுக்கு அவரை என்னிடமிருந்து பறித்து உனக்கு அளித்துவிட்டது."

"நீ என்ன சொல்கிறாய், மாலா? சுந்தரம் உன்னை....!"

"ஆமாம், காதலித்தார். உயிராக மதித்தார். ஒரு வருஷமா, இரண்டு வருஷங்களா? ஐந்து வருஷங்கள் நாங்கள் இன்பத்தில் மிதந்தோம், அக்கா. பிறகு எனக்குக் குழியை நானே பறித்துக் கொண்டேன். நீ என்றைக்கு இந்த ஊருக்கு வந்தாயோ அன்றைக்கு. தவறு முழுவதும் என்னுடையதுதான். அவர் மனம் என்னைவிட்டு என்றுமே மாறாது என்று இறுமாந்து விட்டேன். அன்று உன்னைப் பற்றிய பேச்சு எழுந்தபோது அவர் உனக்கு மறுமணம் செய்விக்க வேண்டும் என்றார். 'ஆண்கள் வெறும் வாய் வீச்சுத்தான் வீசுவார்கள்; பிறருக்கு உபதேசம் செய்வார்கள். நீங்கள் மணந்து கொள்வீர்களா ஒரு விதவையை?' என்று கேட்டு என் தலையிலேயே நெருப்பைக் கொட்டிக் கொண்டேன். அன்று தொட்டு...."

வீணையின் சிரம் சுழன்றது. "நீ போ, மாலா; உள்ளே போ. மாமா படுத்திருக்கும் அறையையும் ரேழியையும் கடந்து தாழ்வாரத்துக்குப் போ. அங்கேதான் அவர், உன் அத்தான் படுத்திருக்கிறார். பார், நன்றாகப் பார்; பேசு, நிறையப் பேசு; அழு, உன் உள்ளத்து ஏக்கம் தீரும் வரையில் அழு." வீணைக்கே இப்பொழுது அழுகை வந்து விடும் போல் இருந்தது. அவள் வேகமாக மாலாவை உள்ளே தள்ளிவிட்டுப் பம்பரமாகச் சுழன்ற தன் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்த பெஞ்சியிலேயே அமர்ந்து விட்டாள்.

பிரும்மாண்டமான கேள்விக் குறி ஒன்று அவள்முன் நின்றது. **(தொடரும்)**





M&B
ZEPHROL
FORMULA
DIRECTIONS

ஜீவ

சாந்தா பரபரப்புடன் இறங்கி வந்தாள். அவள் முகத்தில் பீதி நிறைந்திருந்தது. டாக்டர் மூர்த்தியின் வீட்டு வாசலில் இருக்கும் மின்சார மணியை அழுத்தினாள் அவள். ஒன்றும் பதிலிறுக்கவில்லை. அவள் நிமிர்ந்து கதவின் இடுக்கு வழியாக எட்டிப் பார்த்தாள். உள் அறையில் சோபாவில் கணவனும் மனைவியுமாக அமர்ந்து சல்லாபமாகப் பேசிக் கொண்டிருந்தனர். மனைவியின் முகத்தில் இளமையின் எழில் மிளிர்ந்தது. தங்களை மறந்து அவர்கள் தனி உலகத்தில் இருந்தார்கள் போலும். அவர்களைக் கவனித்தபடியே மீண்டும் மணியை அழுத்தினாள் சாந்தா. மனைவியின் முகம் சுளித்தது. கணவனின் முகம் ஒரு முறை வாசல் பக்கம் பார்த்தது. அவன் எழுந்திருக்க முயன்றதும், அவள் அவன் கையைப் பிடித்து இழுத்து அமர்த்தி விட்டாள். கணவன் அதற்கு இணங்கி மீண்டும் அமர்ந்தான்.

சாந்தா வெறுப்புக் கொண்டு வெளியே வந்தாள். காரில் அவள் நான்கு வயதுக் குழந்தை உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தது. அவளை மடியில் சாய்த்துக் கொண்டு காத்திருந்த அவள் தாயார் மிகுந்த கவலையுடன் கேட்டாள்: "என்ன, டாக்டர் இல்லையா?" என்று.

"டாக்டர் தூங்குகிறாப்போலத் தெரிகிறது...." என்றாள் மகள்.

"ஐயோ! இவரை விட்டால் பக்கத்தில் டாக்டரே இல்லையே!" என்று வாய்விட்டு அரற்றிவிட்டாள் சாந்தாவின் தாயார்.

"சரி! மறுபடியும் போய்ப் பார்க்கிறேன்" என்று மீண்டும் கதவண்டை வந்து தன் குல தெய்வங்களையெல்லாம் வேண்டிக்கொண்டே மணியை ஒலித்தாள் சாந்தா.

கதவு ஒருவாறாகத் திறந்தது. டாக்டர் மூர்த்தி சிடுசிடுத்த முகத்துடன் வெளியே வந்தார். "என்ன, இரவெல்லாம்தொல்லை?" என்று அலுத்துக் கடிந்து கொண்டார்.

"டாக்டர்! என் குழந்தைக்கு ஆபத்தாக இருக்கிறது. டிப்தீரியா என்கிறார்கள்—உங்களிடம்தான் அதற்கு மருந்து இருக்கிறதாமே? சற்று ஊசி போடுகிறீர்களா? நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று சாந்தா மன்றாடத் தொடங்கவும் அவளைத் தடுத்து டாக்டர், "சரி! சரி! குழந்தையைக் கொண்டு வாருங்கள்" என்றார்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள் அவளும் அவள் தாயும். டாக்டர் ஊசி போட்டார். சாந்தா தன் கைக்குக் கிடைத்த பணத்தை அவர் கையில் திணித்து விட்டுக் கிளம்பினாள்.

"நாளைக் காலையில் வந்து குழந்தையின் நிலைமையைப்பற்றிச் சொல்லுங்கள்" என்றார் டாக்டர்.

வைத்தியருக்கு நன்றி செலுத்தி விட்டுச் சாந்தா மறைந்தாள்.

மறுநாள் டாக்டர் அவளை எதிர்பார்த்தார். பிறகு அன்றைய வேலை மும்முரத்தில் மறந்து விட்டார்.

* * *

பல ஆண்டுகளுக்குப் பிறகு சாந்தா மீண்டும் அதே வைத்தியரிடம் வந்து அமர்ந்தாள். முன்பிருந்த அந்தப் பணியாள்தான் இன்றும் அவளை வரவேற்றான். ஆனால் ஆஸ்பத்திரி நன்றாக அபிவிருத்தியடைந்து விட்டது. [illegible]

"ஏம்மா! சொன்னால் தெரியாது உங்களுக்கு? டாக்டரை இப்பொழுது பார்க்க முடியாது!" என்று அதட்டினான் பணியாள்.

"போய்ச் சொல், அப்பா! — ஆஸ்பத்திரி விஷயமாக வந்திருக்கிறேன். நான் இன்று ஊருக்குப் போக வேண்டும்."

"அப்புறம் வாங்க. அவர் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். எழுப்ப முடியாது."

சாந்தா அவனுடன் மேலும் பேச்சுக் கொடுக்கவில்லை. பேசாமல் இருந்த இடத்திலேயே அமர்ந்திருந்தாள். அப்பொழுது உள் புறத்துக் கதவு திறந்து கொண்டது. டாக்டரே வெளியே வந்தார்.

"என்னடா இது? யாரை விரட்டுகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே வெளியே எட்டிப் பார்த்தார் அவர்.

அவரைக் கண்டவுடன் சாந்தாவின் முகம் ஒரு இறுசாக மாறியது. ஆயினும் உடனே தெளிந்து கொண்டாள்.

"டாக்டர்! நான் உங்கள் ஆஸ்பத்திரிக்கு நன்கொடை கொடுப்பதற்காக வந்திருக்கிறேன்" என்று எடுத்த எடுப்பிலேயே கூறி விட்டாள் அவள்.

"ஒரு நிமிஷம் இருங்கள். இதோ வந்து விட்டேன்" என்று சொல்லிக் கொண்டு உள்ளே போனார் டாக்டர். போகுமுன் பணியாளைக் கூப்பிட்டு ஏதோ கூறினார். அவன் உடனே அதிக மரியாதையுடன் சாந்தாவைக் கவனிக்கத் தொடங்கினான். என்ன மறுத்தும் கேட்காமல் அவளை உள்ளே அழைத்துச் சென்று சோபாவில் அமர்த்தினான். மின் விசிறியை முடுக்கி விட்டான்.

ஆனால் சாந்தா ஒன்றையும் கவனித்ததாகத் தெரியவில்லை. நீர் பனித்த கண்களுடன் அவள் எங்கோ நோக்கிக் கொண்டிருந்தாள். டாக்டர் வந்ததையும் பார்க்கவில்லை.

டாக்டர் மூர்த்தி அவளைப் பார்த்தார். எங்கோ எப்பொழுதோ பார்த்தமாதிரி இருந்ததே தவிர, யார் என்று அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சாந்தா அவர் வந்திருப்பதைக் கவனித்ததுமே சட்டென்று எழுந்தாள். தன் கைப் பையிலிருந்து மூவாயிரம் ரூபாய்களை நோட்டுக்களாக எடுத்து எண்ணிக் கொடுத்தாள்.

"இதற்கெல்லாம் சிரமமாகப் பத்திரம்..." என்று ஆரம்பித்தார் டாக்டர்.

"என்ன வேண்டும்? இதோ கைப்பட எழுதித் தருகிறேன். இதில் ஒரு சிக்கலும் இல்லை" என்று சொல்லிக் கொண்டே தன் கைப் பையைத் திறந்து ஓர் உறையும், ஒரு வெள்ளைக் காகிதமும் எடுத்து 'விரு விரு' வென்று எழுதி அவரிடம் நீட்டினாள் சாந்தா.

"மூவாயிரம் ரூபாய்களை என் சொந்த விருப்பத்தின் பேரில் வைத்தியசாலைக்காக நன்கொடையாகத் தருகிறேன். இந்தப் பணம் முக்கியமாக டிப்தீரியா நோய் ஆராய்ச்சிக்குப்


விளக்கு

நாட்டுக்கு நல்கிய நல்மொழி-8



சோஷலிஸம் என்பது ஒரு முடிவை அடைவதற்கான வழி. சோஷலிஸமே முடிவு அல்ல. சோஷலிஸப் பாதையில் செல்ல எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் பலாத்காரம் இருந்தாலொழிய, தோல்வியே அடையும். சோஷலிஸம் பல நாடுகளில் தோல்வியுற்றது. பலாத்காரம் இல்லாத காரணத்தால். தனி மனிதனின் சுதந்திரம் இட்டு நிரப்ப முடியாத ஒன்று. அதனை இழக்கலாகாது. —ராஜாஜி

பயன்பட வேண்டும்"" என்று படித்த டாக்டர் மூர்த்தி, சாந்தாவை ஊடுருவிப் பார்த்தார்.

''ஏன் டிப்திரியாவைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று பளிச்சென்று கேட்டு விட்டார் அவர்.

''ஒரு காலத்தில் ஒரு குழந்தையைக் கொண்டு வந்தேன். அப்பொழுது நீங்கள் ஒருவர்தான் அதற்கு மருந்து வைத்திருந்தீர்கள். அந்தமாதிரி ஓர் ஊரில் ஒருவர் மட்டுமே இருப்பதைவிடப் பலர் இருப்பது சமூகத்துக்குத் தேவையென்ற எண்ணம்தான்.''

டாக்டர் மூர்த்தி அவள் எழுதிக் கொடுத்த சீட்டைப் படித்துப் பார்த்தார். சாந்தா எழுந்து விட்டாள்.

''நான் அவசர வேலையாக ஊருக்குப் போக வேண்டும், டாக்டர்!'' என்றாள் அவள்.

''உங்கள் பெயர், விலாசம், மற்றும் தகவல்கள்?''

''என் பெயர் சீட்டில் இருக்கிறது. விலாசமும் மற்றதும் எதற்கு டாக்டர்? நான் உங்களிடமிருந்து நற்செயல் ஒன்றைத்தான் எதிர்பார்க்கிறேன்'' என்றாள் சாந்தா.

டாக்டர் எழுந்து அவள் அருகில் வந்தார். ''நில்லுங்கள், அம்மா! உங்களை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறது. அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை...உங்கள் கணவரை ஒருகால் எனக்குத் தெரியுமோ, என்னமோ....'' என்று இழுத்தார் மூர்த்தி.

''இது காஞ்சீபுரம்.''

''அப்படி யென்றால்....?''

''அம்மனுக்குத் தனிக் கோவில். அவரும் நானும் வேறு வேறாக இருக்கிறோம்'' என்று தடுமாற்றமில்லாமல் கூறினாள் சாந்தா.

''மன்னிக்க வேண்டும். நீங்கள் அளித்திருக்கும் பணத்தை உங்கள் பேரிலேயே வைக்க எண்ணுகிறேன்.''

''வேண்டாம்''

''அப்படியானால்......அன்று ஒரு நாள் உங்கள் குழந்தையைக் கொண்டு வந்தேன் என்றீர்களே? அவன் பெயரில்......''

''வேண்டாம்!''

''அவன் நன்றாக இருக்கிறானா?''

''சுகமாக இருக்கிறான்.''

''எங்கே இருக்கிறானோ?''

''என்னிடம் இல்லை.''

''அவன் தகப்பனாரிடம் இருக்கிறானாக்கும்'' என்று மொழிந்த டாக்டர் தம் நாக்கைக் கடித்துக் கொண்டார். ''மன்னிக்க வேண்டும். அதிகமாகப் பேசிவிட்டேனோ என்னமோ? நீங்கள் அளித்த தொகைக்குக் கைம்மாறாக ஒரு பெயர் கூட வைக்காமல் பெறுவது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.''

''நான் உங்களைக் கவனித்துக் கொண்டே இருப்பேன். செயலில் நீங்கள் என்னைத் திருப்தி செய்தால் அதைவிட மேலானது ஒன்றுமில்லை'' என்றாள் அவள்.

அதன் பிறகு விடுவிடென்று வெளியே காத்துக் கொண்டிருந்த வாடகை மோட்டாரில் ஏறி அமர்ந்து கொண்டாள். டாக்டர் அவள் அருகில் வந்தார். அவர் முகம் சஞ்சலத்துடன் விளங்கியது.

''கவலைப் படாதீர்கள், டாக்டர்! இன்றைக்குள் வக்கீல் ராமமூர்த்தி வந்து உங்களுடன் பேசுவார் என்று நினைக்கிறேன். சிக்கல் ஒன்றும் இல்லை!'' என்றாள் சாந்தா.

டாக்டர் மூர்த்தி நெரித்த புருவங்களுடன் தம் அலுவல் அறையில் நுழைந்தார். அவர் மனைவி வந்து பேச்சுக்கொடுத்தும் அவர் ஒன்றும் சரியாகப் பதிலளிக்கவில்லை. சாந்தா வந்ததும் பணத்தைத் தந்ததும், புதிராகப் பேசி, மீண்டும் மறைந்ததும் குழந்தைகளுக்குச் சொல்லப்படும் தேவதைக் கதைகளைப் போல் இருந்தன. அவர் ஒன்றும் புரியாமல் யோசித்துக் கொண்டே இருக்கையில், வக்கீல் ராமமூர்த்தி வந்திருப்பதாகப் பணியாள் கூறினான்.

''டாக்டர்! உங்களிடம் ஒரு முக்கிய அலுவலாக வந்திருக்கிறேன்'' என்று ஆரம்பித்தார் வக்கீல்.

''நானும் உங்களை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறேன்'' என்றார் டாக்டர்.

''என்னுடைய கட்சிக்கார அம்மாள் ஒருத்தியைப் பற்றி......''

''சொல்லுங்கள்.''

''உங்கள் ஆஸ்பத்திரிக்கு நிதி ஒன்று அளித்திருக்கிறாள்......''

''ஆமாம்! இப்பொழுதுதான் வந்துவிட்டுப் போனாள். யார் அந்த அம்மாள்?''

''என்ன? தன் பெயரைச் சொல்லவில்லையா?''

''பெயர் ஒன்றில் என்ன தெரியும், சார்? எவ்வளவு கேட்டாலும் மற்றத் தகவல் ஒன்றுமே சொல்லவில்லை. மூவாயிரம் ரூபாய்ப் பணத்தைக் கொடுத்து விட்டு மறைந்து விட்டாள். அதற்கு என்னிடமிருந்து ரசீதும் பெற்றுக் கொள்ளவில்லை. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதாவது மூளைக் கோளாறோ? பிறகு ஏதாவது தப்பு, தண்டா வருமா?''

வக்கீல் ராமமூர்த்தி எதிரே மாட்டியிருந்த ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய படத்தையே நோக்கிக் கொண்டிருந்தார்.

''அந்த அம்மாள் பெரிய பணக்காரி. பிறந்த இடத்திலும் இரண்டு லட்சத்துக்கு அதிகாரி. புகுந்த இடமும் நல்ல பசையுள்ள இடம்...''

''...............''


ஒரு புத்திசாலியான மனைவி தன் கணவனின்
துணிமணிகளை
தேர்ந்து வாங்குவதில் உதவி செய்கிறாள்
நியூ ஷோராக் பாப்லின்கள்
வெண்மை, கலர் மற்றும் கோடிட்ட ரகங்கள்
பிளாடிக்னம் டச் • ஸில்வர் டச்
டெஸர்ட் • மதுகுஞ்ச்
குஞ்ஜாலின்
பைன் மற்றும் ஸூப்பர் பைன் ரகங்கள் உள்ளன
SANFORIZED
தவிர ஷர்டிங்குகள், கம்பரிக், லாங்கிளாத்
SISTA'S-NS-20-TAM


டால்கம் பௌடர்
ஒ டி கோலான்
லிப்ஸ்டிக்
பேஸ் பௌடர்
டஸ்டிங் பௌடர்
Lakmé
லக்மே
அழகின் அலங்காரத்திற்கென
ப்ரஞ்சு முறையிலிருந்து
தயாரிக்கப்பட்ட சாதனங்கள்
Lakmé
லக்மே ஒரு டாடா தயாரிப்பு

"யார் தெரியுமா ?......குடும்ப ரகசியங்களை வெளியிடுவது ஒருவக்கீலுக்கோ டாக்டருக்கோ அழகில்லை. அதனால் நான் ஒன்றும் சொல்ல வில்லை. அந்த அம்மாளின் கணவர் பெரிய உத்தியோகஸ்தர் தான்."

"அந்த அம்மாள் அவரிடம் இல்லையாமே?"

"அதைச் சொல்லி விட்டார்களா ?"

"அவ்வளவுதான் சொன்னது."

"பெரிய கதை, டாக்டர், அவளுடையது."

"சொல்லுங்கள். விவரம் முழுவதும் தெரியாமல் எனக்கு நிம்மதியாக இருக்க முடிய வில்லை......"

"அந்த அம்மாளின் கணவர் அவள் சொந்த அத்தை மகனேதான்-கல்யாணமான புதிதிலேயே அவர் நடத்தை சரியாக இல்லை. அதற்குப் புண்ணியம் கட்டிக் கொண்டவள் வேறு ஒரு முறைக்காரப் பெண்தான். முதலில் எவ்வளவோ கண்டித்தும் அவர் மசிய வில்லை. சமூகத்தில் இருக்கும் மதிப்பை உத்தேசித்து அவர் மனைவி வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் மிகவும் பொறுமையாக இருந்தாள். அந்தப் பழிகாரி இவர்கள் வீட்டுக்கே வந்து இருந்தபோதுகூட அன்பாகவே பழகினாள். அந்தக் காலத்தில் நான் அவளை மிகவும் கடிந்து கொண்டிருக்கிறேன். தன் உரிமையை நிலைநாட்டாமல் கணவன் நடத்தைக்கு உடன்பாடுடன் இருப்பது தன் வாழ்வுக்கு உலை தேடுவதாகும் என்றேன். அவள் கேட்கவில்லை, டாக்டர்.

"'அவரோ மாவட்டத்துக்கு ஒரு முக்கிய உத்தியோகஸ்தர்—அவர் மதிப்புக் கெட்டு விட்டால் எப்படிச் சமூகத்தில் அவர் வெளியே வர முடியும் ?' என்று அவள் என்னைக் கேட்டாள்.

"'அதற்காக ? இப்பொழுது மட்டும் அவர் விஷயம் வெளியே தெரியாதா ? எல்லோர் முன்னிலையிலும் அவர் அவளுடன் பழகும் விதத்தை யாரும் பார்க்கவில்லையா ?' என்று வாதாடினேன் நான். அவள் அப்பொழுதும் என்னை மடக்கினாள்.

"'எனக்கு அவரிடம் குன்றாத அன்பு இருக்கிறது. எந்த நிலையிலும் அவருடன் இருக்க உடன்பட்டவள் நான். நான் அவரைக் கைவிட மாட்டேன். எவ்வளவுதான் அவர்கள் வித்தியாசமாக நடந்து கொண்டாலும் நான் அருகில் இருப்பது அவருக்கு ஒரு கவசம்போல்" என்று உறுதியாக இருந்து விட்டாள் அவள் — ஆனால் அந்தப் பாவி அவளைக் கைவிட்டு விட்டான்."

"அவள் குழந்தைகள் இப்பொழுது எங்கே இருக்கிறார்கள் ?"

வக்கீல் ராமமூர்த்தி தம் அங்கவஸ்திரத்தினால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"ஒரு பிள்ளை, ஒரு பெண் அவளுக்கு."

"அவர்கள் எங்கே ?"


"அந்தப் பெண் கல்யாணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளுடன் சுகமாக இருக்கிறாள்."

"பிள்ளையும் சுகமாக இருப்பதாகக் கூறினாளே அந்த அம்மாள்."

"பிள்ளையைப் பற்றிப் பேசினாளா ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் வக்கீல்.

"ஒன்றும் விவரம் சொல்லவில்லை."

"அந்தப் பையனுக்கு நான்கு வயதில் டிப்தீரியா வந்தது. குழந்தையைச் சிகிச்சைக்கு



"இந்தாங்க துணிமணிகளை வீணாக லாண்டிரியிலே போட வேண்டாங்க. சோப்புத்தூள் கம்பெனி விளம்பரப் பொண்ணு வந்து வீடு வீடாகத் துணிகளைத் தோய்ச்சுப் போட்டுப் போவுது !"

அழைத்துச் செல்லவே மறுத்து விட்டான் அவள் கணவன். அந்த இருட்டு நேரத்தில் தாயாரை அழைத்துக்கொண்டு தானே வ காரரைச் செலுத்திக்கொண்டு அலைந்து ஒரு வைத்தியனிடம் சென்றாளாம். புது மனைவியுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு எழுந்து வந்த அந்த டாக்டர் குழந்தைக்கு ஊசி போட்டானாம். மருந்துதான் கோளாறோ, நேரம்தான் மிஞ்சி விட்டதோ அந்தக் குலக் கொழுந்தும் இறந்து விட்டது."

"ஹா!" என்று துள்ளினார் டாக்டர்.

"அது ஆகிப் பதினைந்து வருடங்கள் ஓடிப் போய் விட்டன."

"சார்.....!"

"இத்தனை நாட்கள் கழித்து நான் சொல்லும்போது நீங்கள் பரபரப்பு அடைகிறீர்களே! அவள் அன்றுகூடப் பதற்றப் படவில்லையே! அவள் நிதானமாகத்தானே இருந்தாள்! ஆனால் அந்த நிகழ்ச்சியுடன் அவளுக்குத் தன் கணவனிடம் இருந்தபற்று விட்டுவிட்டது. தன் பெண்ணுடன் தனி வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டாள். அவள் மாமனார் வேறு பிள்ளையின் நடவடிக்கையில் சினம் கொண்டு சொத்து முழுவதையும் மருமகள் பெயரிலேயே எழுதிவைத்து விட்டார். தன் ஒரே சொத்து போய்விட்டது. பண பாக்கியத்துக்குக் குறைவு இல்லாமல் இருந்து வந்தாள்."

"சார்! அவன் குழந்தையைக் கொன்ற பாவி நான்தான்" என்று கூறிவிட்டு டாக்டர் தம் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டார். "பழி வாங்கிவிட்டாளே, சார்! பழி வாங்கி விட்டாளே!" என்று அரற்ற ஆரம்பித்து விட்டார்.

"சாந்தாவைப் பற்றி நீங்கள் அப்படிப் பேசுவது அபசாரம், டாக்டர்! அவள் உங்க

நாட்டுக்கு நல்லிய நல்மொழி-9

பெற்றோர்களிடம் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தாலும் ஒரு பெண் வயது வந்ததும் கல்யாணம் செய்துகொண்டு கணவனுடன் தனித்துச் சுதந்திரமாக வாழ்வதையே விரும்புவாள். அதே போலத்தான் குத்தகைக்குச் சாகுபடி செய்யும் குடியானவனும் சில வருஷங்களுக்குப் பின்னராவது ஒரு சிறு துண்டு நிலத்துக்காவது சொந்தக்காரனாகிச் சாகுபடி செய்ய விரும்புவான். கூட்டுறவுப் பண்ணையில் இந்தச் சுதந்திரத்தை அவன் இழக்க நேரிடும். —ராஜாஜி



லைத் தேர்ந்தெடுத்த காரணமே உங்கள் நன்மையைக் கோரித்தான் இருக்கும். எந்த வியாதியினால் தன் குழந்தை இறந்தாளோ, அந்த வியாதியின் சிகிச்சையில் நிபுணத்துவம் கொண்ட வைத்தியனைத் தேடி எடுப்பது சகஜம்தானே?''

''இல்லையே? என்னை யார் என்று அறிந்து தானே வந்திருக்கிறாள்?''

''சாந்தாவின் குணத்தை அறிந்தவர்கள் அவளைப் பற்றி இப்படிப் பேச மாட்டார்கள். பழி வாங்க நினைப்பவள் பதினைந்து வருடங்கள் காத்துக்கொண்டிருப்பாளா, டாக்டர்? அன்றைக்கே நான் உங்கள் பெயரில் கேஸ் போடச் சொன்னேன். அவள்தான் தடுத்தாள், சார்! என்ன சொன்னாள், தெரியுமா?''

''என்ன?'' என்றார் டாக்டர் வேதனை மிகுந்த குரலில்.

'''தவறுவது இயல்புதான், மாமா! இது பெரிய பிழைதான். ஆனாலும், அந்த மனிதன் மீது வழக்குத் தொடங்கி, அவர் வாழ்வு கெட்டு, அவன் மனைவி அலறினால் மட்டும் எனக்கு உய்வு வந்துவிடுமா? என் மகள் எழுந்து வந்துவிடுவாளா; கணவனைப் பிரிந்து நான் படுவது போதாதா? இனி ஒருத்தியின் வாழ்வையும் நான் கெடுக்க வேண்டுமா?' என்று அவள் அன்று பேசியது இன்றுபோல் ஒலிக்கிறது. உண்மையைச் சொல்கிறேனே, எனக்கு அப்பொழுது அவள்மீது அசாத்தியக் கோபம்தான்— 'பெண்பிள்ளை வாதங்கள் வாழ்க்கைக்கு ஒவ்வா. நீ இப்பொழுது அவனைக் கண்டிக்காவிட்டால், அவன் இனி எந்தெந்தக் குழந்தைகளுக்கு என்னென்ன செய்துவிடுவானோ? அசிரத்தை என்பது டாக்டருக்குப் பெரிய குறைபாடாயிற்றே' என்று நான் வெகுவாகக் கடிந்து கொண்டேன். அவள் அசைந்து கொடுக்கவில்லை.

''வேண்டாம், மாமா—வீணாக ஒரு குடும்பத்தைக் கலக்க வேண்டாம். ஒவ்வொருவர் மனத்திலும் மனச்சாட்சி என்கிற நீதிபதி உட்கார்ந்திருக்கிறது. அதன் சாட்டையடியை விடக் கொடிய தண்டனை வேறு கிடையாது. தன் தவற்றைக் காலையில் உணர்ந்ததுமே அந்த வைத்தியன் எவ்வளவோ கஷ்டப்படுவான். தன்னைத் திருத்திக்கொள்ளவே முயல்வான். நல்ல மனிதனின் இயற்கைச் செயல் அது. அவன் நல்ல மனிதனாக இல்லாமல் போனால் எந்த நீதிமன்றமும் அவனைத் திருத்தப்போவதில்லை' என்று தீர்மானமாகத் தடுத்தாள்.''

''அவள் கூறியது சரிதான் சார்! மறுநாள் காலை என் பிழை எனக்கு நன்றாகத் தெரிந்தது. அன்று முதல் நான் எவ்வளவோ மன வேதனைப்பட்டாயிற்று. மறுநாள், அதற்கு மறுநாள், அதற்கு மறுநாள் என்று காத்திருந்தேன். ஒன்றும் தகவல் தெரியவில்லை. என்னவோ நப்பாசை. அந்தக் குழந்தை விதிவசமாகப் பிழைத்திருப்பாள் என்றெண்ணி ஆறுதல் அடைவேன். அதன் விளைவாக, டிப்தீரியாவின் ஆராய்ச்சி என்னை மேலும் கவர்ந்தது. அந்தத் துறையிலேயே நிபுணத்துவம் பெற்றேன். ஆனால்...''

''ஆனால் ஒன்றுமில்லை, டாக்டர்! நீங்கள் செய்ததுதான் சரி. அவள் என்னை விடச் சிறியவளானாலும் புத்தியில் என்னை மிஞ்சி விட்டாளே? அன்று உங்கள் மீது வழக்குத் தொடங்கியிருந்தால், வழக்கில் நீங்கள் ஜயித்து மீண்டிருந்தால் கூட உங்கள் தன்னம்பிக்கை ஓரளவு பாதிக்கப்பட்டிருக்குமே!''


''ஓரளவு என்ன? நான் சாகாமல் செத்திருப்பேன். சமூகத்தில் எனக்கு என்ன மதிப்பு இருந்திருக்கும்? அந்த அம்மாள் எங்கே இருக்கிறாள்? நான் கண்டு மனம் திறந்து பேச வேண்டுமே?''

''அவள் தன் சொத்து முழுவதையும் பங்கிட்டு செய்துவிட்டாள், டாக்டர்! பெண்ணுக்கு ஏராளமான சொத்து வைத்துவிட்டு, அந்த நன்றி கெட்ட கணவனுக்கும் ஒரு வீடு கொடுத்துவிட்டு, உங்கள் சிகிச்சை இல்லத்துக்கும் வருஷத்தில் ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி எழுதி வைத்துவிட்டாள். தன் செலவுக்குப் பத்தாயிரம் பணமாக எடுத்துக் கொண்டு போய்விட்டாள். தன் விலாசத்தை யாருக்குமே கொடுக்க விரும்பவில்லை. எனக்கே கொடுக்கவில்லை. எங்கோ மறைந்து விட்டாள். அவள் இங்கே இருப்பாள், நிறுத்தலாம் என்ற எண்ணத்துடன் வந்தேன். அதுவும் நிராசையாகிவிட்டது. என்றாவது அவளுக்கு ஏதாவது நேர்ந்தால் அன்று எனக்குத் தகவல் தெரியும். அந்த நாள் என் ஆயுளில் நேராமல் இருக்க ஆண்டவனைப் பிரார்த்திப்பது தவிர எனக்கு வேறு வழி?'' வக்கீல் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு மெதுவாக எழுந்தார்.

''இப்படியும் ஒரு பிறவி இந்தக் கலிகாலத்தில் இருப்பார்களா சார்?'' என்று கேட்டார் டாக்டர், கனத்துக் கரகரத்த குரலில்.

''இல்லாமல் என்ன டாக்டர்? இவர்கள் தாம் ஆண்டவன் நமக்களிக்கும் பரிசுகள். ஒரு குடும்பத்தில் ஒரு பெண்! ஒரு சமூகத்துக்கு ஒருவர் இப்படி இருந்தால் போதுமே! தன்னல இருட்டிலே பொன்னொளி தரும் தீப விளக்குகள் இவர்கள்—மாய உலகின் வியாதிக்கு ஆண்டவன் அளிக்கும் மருந்து இவை. நான் வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே வக்கீல் கிளம்பி விட்டார்.


உணவருந்த
பயப்பட வேண்டாம்
ஹ்யூலட்ஸ்
மிக்சர்
உணவிற்குப் பின் வரும்
வயிற்று வலியை நிரந்தர
மாகப் போக்குகிறது.
வி. ஜே. ஹ்யூலட் அண்டு ஸன்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்
96/A, நைனியப்ப நாயக் தெரு.
மதராஸ் - 3
CIH/835 a


நாள் முழுவதும்
தூய்மையுடன் விளங்க
பாம்பியா லோஷனை
உபயோகியுங்கள்
தொடக்கத்திலிருந்தே பிரஞ்சு
முறையில் அதற்கேற்ற தனிப்பட்ட
வாசனையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.
உலக முழுவதும் லக்ஷக்கணக்கானவர்
களால், எல்லாக் காலங்களிலும், விசேஷ
தினங்களிலும் உபயோகிக்கப்படுகிறது.
POMPEIA LOTION
LOTION POMPEIA

குழந்தை இலக்கியம் வளர்கிறது!

முதலாவது மகாநாடுதான். ஆனால் முழுமையான மகாநாடாக விளங்கியது. நவம்பர் 21, 22 ராஜாஜி ஹாலில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தார் நடத்திய முதலாவது குழந்தை இலக்கிய மகாநாட்டைத்தான் குறிப்பிடுகிறேன். குழந்தை இலக்கியத்துக்குத் தொண்டாற்றிய முன்னோர்களைப் போற்றியது; இன்று இத்துறையில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கியது. வருங்காலத்தில் இத்துறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கருத்தரங்கு நடத்தி வழிவகுத்தது. அம் மகாநாடு.

மாநாட்டைத் திறந்து வைத்தார் சென்னை கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்கள். ''நாட்டின் எதிர்காலம் தற்போதுள்ள குழந்தைகளை நாம் வளர்க்கும், அறிவூட்டும் முறையைப் பொறுத்திருக்கிறது. அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் உளப் பண்பாட்டுக்கும் உகந்தவகையில் நல்ல புத்தகங்களைத் தயாரிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

கடந்த பத்தாண்டு காலத்தில் குழந்தை எழுத்தாளர் செய்துவரும் பயனுள்ள ஆக்க வேலைகளைப் பாராட்டி, இளம் மனத்தை நன்கு பக்குவப்படுத்தும் இலக்கியத்தைப் படைக்கும்படி குழந்தை எழுத்தாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

குழந்தை இலக்கியத்துக்கு நீண்டநாட்கள் தொண்டாற்றிய பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களுக்கும் பல குழந்தை நூல்களுக்கும், பத்திரிகைக்கும் ஆசிரியராக விளங்கும் திரு பெ. தூ. ர. அவர்களுக்கும் கவர்னர் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தார். இவ் இரண்டு முன்னோடிகளையும் மனமாரப் பாராட்டினர், டாக்டர் மு. வரதராஜனும் திரு கி. வா. ஜகந்நாதனும்.

குழந்தை இலக்கியம் நம் நாட்டில் நீண்ட நெடுங்காலமாகப் பழக்கத்தில் இருக்கிறது. பெயர் தெரியாத எழுத்தாளர்கள் இயற்றிய நாடோடிக் கதைகள் பரம்பரை பரம்பரையாக வழங்கி வருகின்றன. தற்காலக் குழந்தை இலக்கியத்தின் ஆரம்பநாளில் உழைத்த அ. மாதவையா, டி. வி. சுவாமிநாதய்யர் வரகவி அ. சுப்பிரமணிய பாரதி, பி. ஆர். ராஜசூடாமணி ஆகியோர் நினைவுகூரப் பட்டனர். மகாகவி பாரதியாரும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும் யாருடைய நினைவையும் விட்டு அகலவில்லை!


மாநாட்டுத் தலைவர் திரு அழ. வள்ளியப்பா, தமிழில் குழந்தை இலக்கிய வளர்ச்சியைக் கணித்து, வருங்காலத்துக்குச் சில பயனுள்ள யோசனைகளை வெளியிட்டார். நாடோடிப் பாடல்களையும் கதைகளையும் திரட்டி வெளியிடுவது, குழந்தைகளுக்கான கலைக் களஞ்சியம் தயாரிப்பது, குழந்தைகளுக்கேற்ற நாடகங்களை இயற்றுவது, அதிக அளவில் அறிவியல் நூல்களை எழுதுவது- இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அமைப்பிலும் ஒறனிலும் தரத்தை உயர்த்துவது பற்றி விரிவாக விளக்கினார் தலைவர்.

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இரண்டு காட்சிகளுடன் தொடங்கின. குழந்தை எழுத்தாளரின் புகைப்பட-வரலாற்றுக் காட்சி; அண்மையில் வெளியான குழந்தை நூல்களின் காட்சி ஆகிய இரண்டையும் திரு தெ. து. சுந்தரவடிவேலு திறந்து வைத்தார்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் பல பரிசுகளை அளித்து, எழுத்தாளரையும் ஓவியரையும் பதிப்பாளரையும் ஊக்குவித்து வருகிறது. ஆண்டுதோறும் குழந்தைகள் தினத்தில் குறைந்தது பத்துப் புதுப் புத்தகங்களாவது வெளிவர உதவுகிறது. இந்தப் பணிகளைப் பாராட்டி, திரு சுந்தரவடிவேலு ஆண்டு முழுதும் ஓரிரு பாடப் புத்தகங்களையே படித்து வரும் குழந்தைகளின் பொது அறிவு விரிவடையப் பொதுப் புத்தகங்கள் நிறையத் தேவை என்பதையும், இதற்காகக் குழந்தை நூல் நிலையங்கள் பள்ளிதோறும் பெருக வேண்டும் என்பதையும் எடுத்துச் சொன்னார்.

வருங்காலச் சந்ததியின் நல்வளர்ச்சி குழந்தை எழுத்தாளரைப் பொறுத்தே இருக்கிறது என்ற பொறுப்புணர்ச்சியையும் உணர்த்தினார் கல்வி அதிகாரி.

மகாநாட்டில் கேடயம் பெற்ற திரு பெ. தூ. ர.வும் திரு மயிலை சிவமுத்துவும் கவர்னர் மேதி அவர்களுக்கு இருபுறமும் இருக்கின்றனர். திரு வள்ளியப்பா, டாக்டர் மு. வரதராசனார் திரு கி. வா. ஜகந்நாதன், ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோரையும் காணலாம்.



மாநாட்டின் இரண்டாவது நாள் காலையில் திரு கி. வா. ஜகந்நாதன் தலைமையில் 'குழந்தை இலக்கியம்' பற்றிச் சுவையான கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. குழந்தைக்கு ஏற்ற கவிதை, கதை, நாடகம், திரைப்படம், அறிவியல், பத்திரிகை, புத்தக அச்சு அமைப்பு, ஒலிபரப்பு ஆகிய ஏழு பொருள் பற்றி அந்தந்தத் துறையை நன்கு அறிந்த திருவாளர்கள் ந. சஞ்சீவி, ஆர். காந்திமதி டி. கே. சண்முகம், பூவண்ணன் பெ. நா. அப்புஸ்வாமி ஆர்வி, வை. கோவிந்தன் தி. ஜானகிராமன் ஆகியோர் தாம் ஆராய்ந்து அறிந்த கருத்துக்களையெல்லாம் சுவைபட எடுத்துரைத்தனர்.



திரு தம்பி சீனிவாசன் எழுதிய 'தங்கக் குழந்தைகள்' என்ற குழந்தை நாடகத்துக்கு மத்திய சர்க்கார் பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

தலைமுறை தலைமுறையாக நமது நாட்டில் வழங்கி வரும் குழந்தை இலக்கியமாகிய வாய்மொழிக் கதைகளிலும் பாடல்களிலும் உள்ள இலக்கிய நயத்தை எடுத்துக் காட்டினார் கருத்தரங்கின் தலைவர் திரு கி. வா. ஜகந்நாதன். அத்தகைய இலக்கியங்களைத் தேடித் திரட்டி வெளியிட வேண்டும். மேலும் புதுப் புது அறிவியல் நூல்களைக் குழந்தைக்கு என்று எழுதும் போது விஷயம் தெரிந்தவரும், எளிய இனிய மொழியில் எழுதத் தெரிந்தவரும், கூட்டாகப் பணி புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இந்த யோசனையையும் திரு கி. வா. ஜகந்நாதன் வெளியிட்டார்.

செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்காகவே தமது பாடல்களைச் சமர்ப்பணம் செய்த கவிமணியின் உருவப்படத்தைக் குழந்தை இலக்கிய மாநாட்டில் திறந்து வைப்பது பொருத்தம்தானே. அதையும் நாஞ்சில் நாட்டு மந்திரி லூர்தம்மாள் சைமன் திறந்தது பொருத்தம்தான். கவிமணிக்கு அஞ்சலி செய்த கையோடு வளரும் கவிமணிகள் அறுவருக்குப் பரிசும் பாராட்டும் அளித்ததும் பொருத்தமாகத்தான் இருந்தது. ஆம்: குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய கவிதைப் போட்டிக்கு வந்த 551 பாடல்களில் சிறந்தவற்றை எழுதிய சென்னை திருமதி ஏ. நிர்மலா, குறிஞ்சிப்பாடி புலவர் கலைச் செழியன், மட்டக்களப்பு திமிலைத் துமிலன் ஆகியோருக்குப் பரிசுப் பதக்கங்களும், சென்னை நாகமுத்தையா, கொத்தாம்பாக்கம் வெண்ணெய் வேலன், குன்னம் சொ. அடைக்கலம் ஆகியோருக்குப் பாராட்டு இதழ்களும் வழங்கப்பட்டன.

மாலை நிகழ்ச்சி சுவாமி சித்பவானந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குழந்தை என்னும் உயர்ந்த தத்துவத்தையும், மனிதனின் மன அமைதிக்கும் வளர்ச்சிக்கும் குழந்தையுடன் நன்கு மனம் விட்டுப் பழகுவது எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் விளக்கினார் சுவாமிகள். கடவுளைக் குழந்தையாகவும் குழந்தையைக் கடவுளாகவும் காணும் இந்த நாட்டில் வளரும் குழந்தைகளின் உடலில் வலுவும் உள்ளத்தில் உற்சாகமும் வளர்ந்தால்தான் நாட்டுக்கு நல்லது. அந்த நிலையில் குழந்தைகளை வைத்துக் கொள்ள வேண்டும் பெற்றோர்கள் என்றும் கூறினர்.

நல்லனவற்றையே இயற்றும்படி குழந்தை எழுத்தாளர்களைத் திரு ம. பொ. சிவஞானம் கேட்டுக் கொண்டார்:

"சர்வதேச ஸ்தாபனங்கள் இன்று குழந்தைகளின் நலனில் பெரும் அக்கறை காட்டத் தொடங்குகின்றன. குழந்தையைக் கவனித்தால் போதும்-உலகம் உருப்பட்டுவிடும் என்பதை அவை இப்போது உணரத் தலைப்பட்டிருக்கின்றன" என்று சொல்லி, நீண்ட காலமாகவே குழந்தைகளுக்குத் தொண்டு புரிந்துவரும் எழுத்தாளர்களைப் பாராட்டினார் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு மீ.ப. சோமசுந்தரம்.

இரண்டுநாள் மாநாட்டு நிகழ்ச்சிகளிலும், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்த 150 குழந்தை எழுத்தாளரும் மற்றும் பதிப்பாளர்கள் பெற்றோர் முதலியோரும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். குழந்தைக்கு எழுதுவதைத் தொழிலாகக் கொண்டவர் நடத்திய மாநாடு அல்ல; அதை ஒரு தொண்டாகக் கருதியோரே நிரம்பிய மாநாடு அது என்பதை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நன்கு உணர முடிந்தது.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் திருமதி சௌந்தரம் கைலாசம் விரிவான வசதிகள் செய்து அதன் வெற்றிக்குப் பெரிதும் காரணமாக இருந்தார். உற்சாகமான இளம் எழுத்தாளர்கள் ஒரு தொண்டர் படையெனவே விளங்கி வேலை பார்த்தனர். விழாவின் வெற்றிக்கு அவர்கள் அயராத தொண்டும் காரணமாகும்.

மாநாட்டை யொட்டிக் குழந்தை இலக்கிய மலர் ஒன்று வெளியிடப்பட்டது. சங்கத்தைப் பற்றியும் பாராட்டுப் பெற்ற பெரியோரைப் பற்றியும் உள்ள கட்டுரைகளோடு பிற மொழிகளில் குழந்தை இலக்கியம் வளர்ந்து வருவதைப் பற்றிய தகவல்களும் மலரில் விரிவாக வெளியாகியுள்ளன.

'நமது வருங்காலக் குழந்தைகள் பாக்கியசாலிகள்தாம்' என்ற எண்ணமே மாநாடு நடந்து முடிந்தபோது மேலோங்கி நின்றது. குழந்தை இலக்கியம் வாழ்க! வளர்க!

"வேதாந்தம்! இந்த அக்கப்போரைக் கேளேன்!" என்று உற்சாகமாகக் கூவிக் கொண்டே அறையினுள் நுழைந்தான் என் நண்பன் ஆனந்தன். "இந்தக் கடிதத்தைப் படித்துப் பார். அதற்குள் நான் முகம் கழுவிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று கூறிச் சட்டைப் பையிலிருந்த ஒரு கவரை எடுத்து என்னிடம் கொடுத்து விட்டுக் குளியல் அறைக்குச் சென்று விட்டான் அவன்.

கடிதத்தைப் படிக்கத் தொடங்கினேன்.

'அன்புள்ள ஸ்ரீ ஆனந்தன் அவர்களுக்கு. தாங்கள் அனுப்பிய பார்சலும், கடிதமும் கிடைக்கப் பெற்றேன். பம்பாயிலுள்ள மூக்குக் கண்ணுடிக் கம்பெனியிலிருந்து தங்களுக்கு வரவேண்டிய கண்ணுடிக்குப் பதில் என்னுடையதைத் தவருக அனுப்பிவிட்டதாகவும், அதை அந்தக் கம்பெனிக்கே திருப்பி அனுப்ப யோசித்துக் கொண்டிருக்கும்போதே மேற்படி கம்பெனியிலிருந்து இன்ன விலாசத்துக்கு அனுப்ப வேண்டிய மூக்குக் கண்ணுடியைக் கைப் பிசகாக உங்களுக்கு அனுப்பி விட்டோம் என்று தங்களுக்குக் கடிதம் வரவே, அதை நேராக எனக்கே அனுப்பி விட்டதாகவும் எழுதி இருக்கிறீர்கள்.

'உங்களுக்கு எவ்வாறு என் நன்றியைத் தெரிவிப்பது என்றே புரியவில்லை. ஏனென்ருல் என்னுல் கண்ணுடி இல்லாமல் கண நேரம் கூடக் காலம் தள்ள முடியாது. எதிர்பாராதவிதமாக, கண்ணுடி உடைந்துவிட்டதால் இந்த நான்கைந்து தினங்களே நான் மிகவும் சிரமப்பட்டுப் போய்விட்டேன். இந்த நிலையில் உங்களுக்கு வந்த கண்ணுடியை நீங்கள் பம்பாய்க்குத் திருப்பி அனுப்பி, கம்பெனியார் அதை மீண்டும் எனக்கு அனுப்புவதற்குள் மேலும் சில தினங்கள் பிடித்து. இதனுல் வேறு நான் ரொம்பவும் திண்டாடிப் போயிருந்திருப்பேன். அப்படி இல்லாமல் கண்ணுடியை நேரடியாக எனக்கே அனுப்பியதற்காக மறுபடியும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் கடிதத்திலிருந்தும்,

ஆனந்தன் காதலி



மீனாட்சி ராமகிருஷ்ணன்

செயலிலிருந்தும் உங்கள் கண்யமான பண்பும், நுட்பமான அறிவாற்றலும் தெளிவாக விளங்குகின்றன. நமஸ்காரங்கள்.

— கருணை.

கடிதம் முடிந்தவுடன் எனக்கு வயிறு வெடிக்கச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. ஏனென்றால்....

"ஏன்டா! படித்தாயா, கடிதத்தை?" என்று வினவியவாறே வந்து நின்றான் ஆனந்தன்.

"கருணை! பேரே ரொம்ப ஜோராக இல்லே? கையெழுத்தே இவ்வளவு அழகாக இருக்கும்போது அவளும் ஜோக்காகத் தானே இருக்க வேண்டும்? 'யார் இந்தப் பெண்? எங்கிருக்கிறாள்?' என்றே எனக்குத் தெரியாதபோது இவளுக்கு நான் ஏதோ மூக்குக் கண்ணாடி அனுப்பி இருந்தேனாமே! அப்படி நான் யாருக்கும் அனுப்பிய ஞாபகம் இல்லையே! ஏதோ ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறாற் போல் இருக்குது. ஆனால் விலாசத்திலோ தெளிவாக என் பெயரேதான் போட்டிருக்கிறது. இது என்ன மாயமோ? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை! இதைப் பற்றி உனக்கு என்னடா தோன்றுகிறது? ஆச்சரியமாக இல்லே?"

இப்போது சிரித்தே விட்டேன் நான். நான்கு நாட்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவம் என் நினைவுக்கு வந்தது.

"இதில் ஆச்சரியப்பட என்னடா இருக்கிறது? இந்தக் கடிதத்தையும் பார்சலையும் அந்தப் பெண்ணுக்கு அனுப்பியதே நான் தானேடா!" என்றேன் நான்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

"அட, கூத்தே!" என்று வாய்விட்டு அலறி என்னை உற்று நோக்கியவண்ணம் பிரமித்து நின்றான். தொடர்ந்து பிரஸ்தாபக் குழப்பத்துக்கு நான் எப்படிக் காரணமானேன் என்பதை அவனுக்குச் சொன்னேன். பம்பாய்க் கம்பெனிக்கு நான் ஒரு கண்ணாடிக்கு ஆர்டர் கொடுத்தது முதல் தவறான கண்ணாடி கிடைக்கப் பெற்றதும், அதைப் பின்பற்றிப் பிசகை விளக்கிக் கம்பெனியார் எழுதியபடி கண்ணாடியைச் சரியான விலாசதாருக்கு நான் அனுப்பியதும் ஆகிய விவரங்களை அவனுக்கு விளக்கினேன்.

"சபாஷ்! பேஷ், விஷமம்! எனக்குக்கூடத் தெரிவிக்காமல் இத்தனை காரியம் செய்திருக்கிறாயே! இவ்வளவு தைரியம் உனக்கு எப்போடா வந்தது? பிழைத்துப் போய்விடுவாய் போ. அது சரி! விலாசம் எழுதினவன் பார்த்து எழுதக் கூடாது? உன் பெயருக்குப் பதிலாக என் பெயரை எழுதியிருக்கிறாயே!"

"என் பெயரைப் போட்டுக் கொள்ளத் துணிவு வரவில்லை ஆனந்தா!"

"உனக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேனடா! ஏனென்றால் இம்மாதிரி ஒரு வாலைக் குமரிக்குப் பதில் எழுதும் வாய்ப்பை எனக்கு உண்டாக்கிக் கொடுத்தாயே! இதற்காக என் மனமார்ந்த நன்றி!" என்று கூறித் தலைகால் புரியாத சந்தோஷத்தில் என் கை சுளுக்கிக் கொள்ளும் வரை குலுக்கினான்.

அடுத்தகணமே மூக்குக் கண்ணாடிக் காதலிக்குத் தானே மறு உத்தரம் வரைய விரைந்து விட்டான்.

இவ்வாறு மூக்குக் கண்ணாடி மூலமாக ஆரம்பித்த அவர்களது கடிதத் தொடர்பு முற்றி மெள்ளக் கடைசியில் ஒருவரைப் பற்றி மற்றொருவர் அன்யோன்யமாக அறிந்து கொள்ளும் அளவுக்கு வளர்ந்திருந்தது. ஆனந்தன் அவளுக்குக் கடிதம் எழுதினாலும் சரி, அந்தப் பெண்ணிடமிருந்து இவனுக்குப் பதில் வந்தாலும் சரி என்னிடம் படித்துக் காட்டாமல் மட்டும் இருக்கவே மாட்டான். இரு தரப்பிலிருந்தும் பரிமாறிக் கொள்ளப்படும் விஷயங்கள் படிக்க வெகு சுவாரஸ்யமாக இருக்கும். அந்தப் பெண் எழுதியவைகளிலிருந்து அவளைப் பற்றிக் கீழ்க் காணும் விவரங்கள் தெரிய வந்தன.

சென்ற ஆண்டு உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பில் தேறிய அவள் இப்போது திருச்சியிலுள்ள பெண்கள் கல்லூரி ஒன்றில் புதிதாகச் சேர்ந்திருக்கிறாளாம். சுமாராகப் பாடவும் வருமாம். அவள் வேலை செய்துதான் குடும்பம் நடக்க வேண்டுமென்ற நிலையில் இல்லாத வசதியான குடும்பத்தில் பிறந்தவளாம். வீட்டிலே சும்மா இராமல் மேற்படிப்பாவது படிக்கலாமே என்ற எண்ணத்திலேதான் கல்லூரியிலே சேர்ந்திருக்கிறார்களாம். பதில் எழுதக் கல்லூரி விலாசமே கொடுத்திருந்தாள் அவள்.

அவளிடமிருந்து ஒவ்வொரு கடிதம் வரும் போதும் ஆனந்தனுக்கு அவளை நேரிலே காண வேண்டுமென்ற ஆர்வம் அதிகமாகும். ஆனால் திருச்சி எங்கே நாங்கள் உத்தியோகம் பார்க்கும் சென்னை எங்கே? எந்தக் காரணம் கொண்டு அவளைப் போய்ச் சந்திப்பது? இருவரும் கூட்டு ஆலோசனை நடத்தி அவள் புகைப்படத்தை வரவழைக்க முயன்றோம். அதற்கு அவள் எழுதியிருந்த பதில் ஆனந்தனைக் கிறங்கவே வைத்து விட்டது.

"என் புகைப்படம் ஒன்றை அனுப்புமாறு கேட்டு எழுதி இருக்கிறீர்கள். ஆனால் மூன்று நான்கு வயதில் எடுத்த புகைப்படத்தைத் தவிர சமீபத்தில் எடுத்தது எதுவும் தற்சமயம் கைவசம் இல்லாத படியால் அனுப்ப இயலவில்லை. அவசியம் தேவையானால் கூடிய சீக்கிரம் எடுத்து அனுப்ப முயற்சி செய்கிறேன். உங்கள் கடிதத்திலிருந்து நீங்கள் என்னைப் பார்க்க எவ்வளவு துடிக்கிறீர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் என்னைப் பற்றி நீங்கள் மகா ரூப சௌந்தரியம் படைத்தவளாகக் கற்பனை செய்திருந்தீர்களானால் மிகவும் ஏமாந்து போவீர்கள்.

"ஏனென்றால், நான் ஒன்றும் அப்படிப் பிரமாதப்பட்ட அழகி இல்லை. நிறமும் மாநிறம்தான். சட்டென்று பார்த்தவுடன் தெரியாவிட்டாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இலேசாக அம்மை வடுக்களும் உண்டு. கண்ணிலேதான் கண்ணாடி இல்லாவிட்டால் சரிப்பட்டு வராதே! ஏற்கனவே பெரியதான என் விழிகள் கனமான மூக்குக் கண்ணாடியினூடே இன்னும் சற்றுப் பெரியதாக வேறு தெரிகிறதாம்; என் தோழிகள் கேலி செய்வதுண்டு!

"மொத்தத்தில் நமக்குள் முதலில் கடிதத் தொடர்பு ஏற்படாமல் நீங்கள் மட்டும் என்னை நேரிலே பார்த்திருந்தீர்களானால் பிறகு

நம் சிநேகம் அதற்குமேல் இதுபோல் வளர்ந்திருக்குமோ என்னவோ, சந்தேகம்தான். என் அதிர்ஷ்டம், நீங்கள் என்னைப் பார்க்காததற்கு முதலே எனக்கு உங்கள் மனத்தில் இடம் கொடுத்து விட்டீர்கள். ஆஹா! எவ்வளவு உன்னதமான இடம்....'

கடிதத்தைப் படித்த ஆனந்தன், "கேட்டாயா, வேதாந்தம்! இந்தப் பெண் புத்திசாலி மட்டுமல்லடா! மகா குணவதியாகவும் கூட இருப்பாள் போலிருக்கிறது. இப்போது எனக்குத் துளிக்கூடச் சந்தேகமே இல்லை. அவள் உண்மையிலேயே நல்ல அழகிதான். தன்னுடைய அடக்கத்தினால் தன்னைப் பற்றித் தற்பெருமை அடித்துக் கொள்ளாமல் மட்டமாக எழுதி என் காதலைப் பரிசோதிக்கிறாளடா. இருக்கட்டும்; இவளை விட இந்த ஆனந்தன் குணத்திலோ அறிவிலோ குறைந்தவன் அல்ல என்பதை அவளுக்கு நிரூபிக்கிறேன், பார்" என்று சவால் விடுபவனைப் போலப் பெருமையோடு கூறி மகிழ்ந்தான்.

அவன் சொன்னபடியே அவளுக்கு எழுதியிருந்த கடிதத்தின் சாரம் இதுதான்:

'குதிரை வால் கொண்டையும் குதி வைத்த செருப்பும் மெல்லிய புடவை உடுத்தி, கையிலே டப்பாப் பையுடன் திரியும் பெண்களைக் கண்டு வாயைப் பிளக்கும் அழகுப் பைத்தியம் அல்ல நான். உன் கடிதங்கள் மூலமாகவே உன்னிடம் உள்-அழகு பரிபூரணமாக அமைந்திருப்பதை நான் உணர்ந்து கொண்டு விட்டேன். அதனால் எனக்கு உன் உடல் அழகைப் பற்றிக் கவலை இல்லை. நீ எப்படி யிருந்தாலும் நான் உன்னையே மணந்து கொள்வது என்று தீர்மானித்துக் கொண்டுவிட்டேன். விரைவில் என் தகப்பனாருக்கும் எழுதப் போகிறேன்.'

அவள் அந்தப் பெண்ணிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்திராவிட்டால் இவ்வளவு உறுதியாக அவனால் கடிதம் எழுத முடியுமா? அடடா! ஆனந்தனை நான் தான் எவ்வளவு தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறேன்!

சிந்தனையில் ஆழ்ந்து விட்ட என்னைத் தபால்காரனின் குரல் சுய உணர்வு பெறச் செய்தது. அவன் உள்ளே போட்டுச் சென்ற கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். கையெழுத்திலிருந்தே அம்மாதான் எழுதி யிருக்கிறாள் என்பது தெரிந்தது. ஓரத்தைக் கிழித்துக் கடிதத்தைப் படித்து விட்டு அலட்சியமாக மேஜைக்குள்ளே போடப் போனேன். அப்போது ஆனந்தன் "என்னடா எழுதி யிருக்கிறது அதில்? கொண்டா அதை இப்படி" என்று உரிமையோடு கையை நீட்டினான்.

"இந்தா, நீயே படித்துப் பார். ஒவ்வொரு வருஷமும் தை பிறந்தால் வரும் வழக்கமான கடிதம்தான். அம்மாவுக்குத் தள்ளவில்லையாம். வீட்டுக்கு மருமகள் வரவேண்டுமாம். குளித்தலையில் யாருக்கோ ஜாதகம் கொடுத்திருந்தாளாம். பத்துப் பொருத்தமும் பொருந்தி இருப்பதாக அவர்களிடமிருந்து கடிதம் வந்துவிட்டதால் பெண்ணைப் பார்த்துச் சம்மதம் தெரிவிக்க என்னை உடனே புறப்பட்டு வரச் சொல்லி எழுதி யிருக்கிறாள். ஞாயிற்றுக் கிழமை நாள் நன்றாக இருப்பதால் அன்றைய

நாட்டுக்கு நல்லிய நல்மொழி-10

தர்மகர்த்தா முறை என்பது நமது நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கம். புதிய கருத்து அல்ல.



நம் முன்னோர்கள் கட்டிய எண்ணிலடங்காத சத்திரங்களும் சாவடிகளும் அதற்குஎடுத்துக் காட்டு. பணக்காரர்கள் தங்கள் செல்வத்தைப் பொது மக்களின் நன்மைக்காக உபயோகிக்க வேண்டும் என்று பரம்பரை பரம்பரையாக நம்பி வந்திருக்கிறார்கள். —ராஜாஜி

தினம் பெண் பார்க்க வருவதாக அவர்களுக்குப் பதிலும் போட்டுவிட்டாளாம்."

"போவேண்டா, இதற்குப் போய் என்னவோ மூக்கால் அழுகிறாயே. ஒரு பேப்பரை எடு. லீவு லெட்டரை எழுது. என்னிடம் கொடுத்து விட்டுக் கிளம்புவாயா..." என்று என்னென்னவோ பேசி என்னைக் கடைசியில் எப்படியோ பெண் பார்க்கப் போகச் சம்மதிக்கவும் வைத்துவிட்டான். சனிக்கிழமை இரவு போவதாகத் தீர்மானித்தேன். அன்றைய தினம் காலையில் நானும் ஆனந்தனும் ஆபீஸுக்குப் போகக் கிளம்பினோம்.

அப்போது எதிர்ப்பட்ட தபால்காரன் ஆனந்தனிடம் ஒரு கவரை நீட்டினான். பம்பாயிலிருந்த அவன் தந்தை அதை எழுதியிருந்தார்.

'திருச்சியிலுள்ள நமது நெருங்கிய உறவினரின் மகளுக்குப் புதன்கிழமை திருமணம் நடக்கப் போவதால் நம் குடும்பத்துச் சார்பில் நீ கண்டிப்பாகப் போய் விட்டுவா' என்று ஆனந்தனுக்குக் கட்டளை இட்டிருந்தார் அவர்.

திருச்சி என்று படித்தானோ இல்லையோ; காதில் தேன் கொட்டி விட்டாற்போல் ஒரு துள்ளுத் துள்ளினான் ஆனந்தன். "டேய், வேதாந்தம்! என்னுடைய அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்ல? எதைச் சாக்காக வைத்துக் கொண்டு திருச்சிக்குப் போகலாம் என்று இங்கே நான் மண்டையை உடைத்துக் கொண்டு யோசனை செய்கிறேன். அங்கே என் தகப்பனாராகவே, வலிய ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுத்து என்னைத் திருச்சிக்குப் போகச் சொல்லுகிறார். அப்பா என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்! அந்தப் பெண் கருணையைப் பார்க்க அருமையான வாய்ப்பு கிடைத்து விட்டதடா! நீ இன்று இரவு வண்டிக்கு ஊருக்குப் போகிறாய் அல்லவா? செவ்வாயன்று கட்டாயம் திரும்பி வந்துவிடு. நீ திரும்பி வந்தால்தான் அந்த மானேஜர் முசுடு எனக்கு லீவு கொடுக்கும். என்ன, புரிந்ததா?" என்றான்.

"ஆகட்டுமடா!"

முடிவு செய்திருந்தபடி அன்றிரவு ரயிலிலேயே ஊருக்குப் புறப்பட்டேன். அம்மா கடிதத்தில் எழுதியிருந்தவாறே ஞாயிற்றுக்

இழமை காலையில் அம்மாவும் நானும் பெண் பார்க்கக் குளித்தலைக்குச் சென்றோம். பெண் வீட்டார் ரயிலடிக்கே வந்து உபசரித்து அழைத்துச் சென்றனர்.

சம்பிரதாயமான முறைப்படி காப்பி டிபன் முடிந்ததும், பெண் வந்து என்னை நமஸ்கரித்தாள். பின்னர் ஏதோ வீணையை வைத்துக் கொண்டு பாடினாள். அப்போதுதான் என்னால் அவளை நன்றாகப் பார்க்க முடிந்தது. காதிலும் மூக்கிலும் வைரம் டாலடித்தன. நல்ல பசை உள்ள குடும்பம் போலிருக்கிறது என்று நினைத்தவாறு மீண்டும் அவளை ஒருமுறை பார்த்தேன்.

நிறம் கறுப்புத்தான். உடல் ஒல்லியும் இல்லாமல் பருமனுமில்லாமல் கச்சிதமாக இருந்ததென்றாலும் அதற்கேற்ற உயரமில்லாதபடியால் அந்த வாளிப்பு எடுத்துக் காட்டவில்லை. இன்னும் ஏதேதோ இனம் விளங்காத குறைபாடுகள் அவள் முகத்திலே பதுங்கிக் கொண்டிருப்பது போல எனக்கு ஒரு பிரமை. நல்ல வேளை. ஆனந்தனின் கல்லூரிக் காதலி கருணையைப் போல் இவளுக்கும் கண்ணிலே ஏதாவது கோளாறு இருந்து மூக்குக் கண்ணாடி ஒன்றை மட்டும் மாட்டிக் கொண்டு நிற்கவில்லையோ. முகம் இன்னும் மோசமாகக் காட்சி தராமல் தப்பித்ததோ!

பின்னை வீட்டாரின் வழக்கப்படி ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுவதாக அவர்களிடம் கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினோம்.

ரயிலிலே ஏறியதும் அம்மா மெள்ள என்னிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"வேதாந்தம்! பெண் வீட்டார் எல்லோருமே ரொம்ப மரியாதை தெரிந்தவர்களாக இருப்பார்கள்போலத் தோன்றுகிறது. அந்தப் பெண்ணும் நல்ல குடித்தனப் பாங்காக இருக்கும் போலிருக்கு. நீ என்ன சொல்லறே? பெண் கறுப்பாக இருந்தாலும் குறிப்பழகா இல்லே?....."

"ஆமாம்; மகா அழகைக் கண்டு விட்டாய் நீ? ஒரு நாழிகைப் போதிலே அவர்கள் குணம் முழுதும் உனக்குத் தெரிந்து விட்டதாக்கும். சும்மா இருக்க மாட்டாய் நீ?"

என் கோபத்தைக் கண்டு நடுநடுங்கிப்போன அம்மா வாயடைத்துப் போய் விட்டாள்.

வழியெல்லாம் ஆனந்தனுக்கு இருக்கும் விசாலமான இதயமும், உயர்ந்த தன்மையும் எனக்கு இல்லாமல் போய்விட்டனவே என்று எண்ணி எண்ணி எனக்குள் வெட்கி மறுகினேன். எப்படி இருந்தாலும் கடைசி நிமிஷத்தில் என் அறிவுக் கண்ணைத் திறந்து என் கடமையை உணர்த்திய ஆனந்தனை மனத்துள் பாராட்டியவாறு ரயிலை விட்டு இறங்கியவுடன் ஆவலோடு அவனுக்கு நன்றி செலுத்த எங்கள் அறைக்கு விரைந்தேன்.

ஆனால் என்ன ஏமாற்றம்! நான் வருவதற்கு முன்பாகவே அவசரப்பட்டுக் கொண்டு அவன் திருச்சிக்குச் சென்று விட்டிருந்தான். அவன் இல்லாமல் எனக்குப் பொழுது போவதே மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகவே நகர்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது.

மறுநாள் காலை பொழுது பலபலவென்று விடியும் தருணத்தில் அறைக் கதவை யாரோ தடதட வென்று தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து சென்று தாளை அகற்றித் திறந்து பார்த்தேன்.

ஆனந்தன் நின்று கொண்டிருந்தான்! ஒரு கணம் வியப்பினால் அப்படியே பிரமித்து நின்று விட்டேன். சட்டென்று என்னைச் சமாளித்துக் கொண்டு "என்னடா ஏன் அதற்குள் வந்து விட்டாய்? நீ நாளைதான் வருவாய் என் றல்லவா எதிர்பார்த்தேன்." என்றேன்.

"விவாகமோ நேற்றுப் பகலோடு முடிந்து விட்டது. பிறகு நாளை வரை அங்கு என்னடா வேலை எனக்கு? அதனால்தான் வந்து விட்டேன். அது சரி நீ பெண் பார்க்கப் போனாயே: அந்த மேனகையினால் உன் விசுவாமித்திர தவத்தைக் கலைக்க முடிந்ததா இல்லையா? முதலில் அந்த விவரங்களைச் சொல்."

"ஆனந்தா! நான் கல்யாணம் செய்து கொண்டு விடுவது என்று தீர்மானித்து விட்டேனடா. பெண் கூட அப்படி ஆளை மயக்கும் அளவுக்கு வசீகரமாக இல்லை. ரொம்பவும் சாதாரணமாகவேதான் இருக்கிறாள். இவளை எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட இருந்தவனுக்குச் சட்டென்று உன்னுடைய உயர்ந்த கொள்கை ஞாபகத்துக்கு வரவே நானும் உன்னையே பின்பற்றி நடப்பது என்ற உறுதியோடு அம்மாவிடம் சம்மதம் தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன்."

"ஆமாம்! இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு நான் திரும்புவதற்குள் உன் காதலியைப் பார்க்க நீ ஓடினாயே! அந்தப் பெண்ணைப் பார்த்தாயா? எப்படி இருக்கிறாள்? என்ன சொன்னாள்?"

"வேதாந்தம்! இந்தப் பெண் பெரிய சதிகாரியடா! அன்றைக்குப் போட்டோ கேட்டபோது தன்னைப் பற்றி அவ்வளவு மட்டமாக எழுதி, நான் அதற்கு நேர் எதிராக அர்த்தம் கொள்ளும்படி செய்து கடைசியில் என்னை அடியோடு ஏமாற்றிவிட்டாளடா!"

"அப்படி என்றால்.......?"

"அப்படி என்றால் உன் மண்டை! இது கூடவா புரியவில்லை?....கண்ணைப் பறிக்கும் கட்டழகி. கருத்தைக் கவரும் ஒவிய சுந்தரி என்றெல்லாம் நான் நம்பும்படி அவள் எழுதியதனால் தானே நான் அவள்மீது தூய்மையான காதல் கொண்டேன்? எவ்வளவு ஆசையுடன் அவளைப் பார்க்க ஓடினேன் தெரியுமா? உறவினர் கல்யாண வீட்டில் கடமைக்காக முகூர்த்தம் முடியும் வரையில் உட்கார்ந்திருந்து விட்டு விருந்தைக் கூடத் துறந்து பறந்து சென்றேன்.

"சீ! அவளும், பெண்ணா? வெறும் மரப் பாச்சிப் பொம்மையடா! கண்ணால் ஒரு முறை பார்த்த பிறகுமா நான் மயங்குபவன்?"

"அட பாவி!......"

"பிரமாத பாவத்தைக் கண்டவன் நீ! அவளை ஒரு தடவை உன் எதிரிலே கொண்டு வந்து நிறுத்தினால்தான் தெரியும் உனக்கு என் நிலைமை. எப்படியாவது தப்பித்தால் போது மென்று நான் எவ்வளவு தவித்துப் போய் விட்டேன், தெரியுமா?"

'உன் தவிப்பு கிடக்கட்டும்டா! அவளை என்ன செய்தாய்? சொல் சீக்கிரம்!"

"சொல்வதற்கு என்ன இருக்கிறது இனி மேல்? எங்கள் 'தெய்வீகக்' காதலைப் பற்றி


கூந்தலை அடர்த்தியாகவும்

அழகாகவும் வைத்துக்கொள்ள

டாடாவின் தேங்காய் எண்ணெய் ஷாம்பூ



- அடிக்கடி சுலபமாகக் கழுவுவதற்கு ஏற்றது
- சுத்தமான தேங்காய் எண்ணெய் நிறைந்தது
- கூந்தலையும் தலையையும் நன்றாகச் சுத்தம் செய்கிறது
- கழுவினால் எளிதில் அகன்றுவிடுகிறது
- கூந்தலை வசீகரமாகவும், பளபளப்புடனும் இருக்கச் செய்கிறது



டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

திடீரென வரும் விருந்தாளிகளுக்கு...





...இணையற்ற விருந்து

மிட்சலின்

கிஸான் பானங்கள் ❊

ஆரஞ்சு ஸ்க்வாஷ் - லெமன் ஸ்க்வாஷ் - லெமன் பார்லி - ஆரஞ்சு பார்லி - மாம்பழ ஸ்க்வாஷ் - கிரேப் ப்ரூட் ஸ்க்வாஷ் - லைம்ஜூஸ் கார்டியல்.

இவ்வினிய பழரஸ பானங்களை என்ன விருப்பமுடன் விருந்தாளிகள் ரஸிக்கின்றனர் என்பதை நீங்களே பார்க்கலாம் வருஷம் முழுவதும் உபயோகிக்கத் தகுந்த உன்னதமான பானங்கள் இவை. உங்கள் குடும்பத்திற்கும் உகந்தது. தொட்டிலிருந்து பிரதி ஞாயிற்றுக் கிழமையும் இன்னினிய பானங்களை அருந்தத் தவறாதீர்கள்.

என்றும் வீட்டிலொரு பாட்டில் இருக்கட்டும்

❊ பழம், காய்கறி பொருட்கள், தயாரிப்பில், இந்திய சர்க்காரால் நடத்தப்பட்ட இரண்டாவது அகில இந்தியப் போட்டியில் கிஸான் ஸ்க்வாஷ்கள் முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் பெற்றன.



KP 5136 கிஸான் ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்.

நான் என் தகப்பனாருக்கு எழுதியதாகவும், ஆனால் அந்த முரட்டு மனிதர் அதை ஆமோதிக்காமல் என்னை மிகவும் கண்டித்துக் கறாராகப் பதில் எழுதி விட்டதாகவும் கதை விட்டேன். மேலும், இதனால் நான் அவருக்காக இல்லாவிட்டாலும் என் தாயாருக்காகவாவது அவளை மறக்க வேண்டியிருக்கிறதென்றும், சொல்லிவிட்டு அவள் அழத் தொடங்கு முன் நான் நழுவி வந்துவிட்டேன்!''

'' என்ன அக்கிரமம்! ஆனந்தா, முன் நீயே அவளுக்கு....''

'' தெரியும்; வெளிப் பகட்டைப் பொருட்படுத்துபவன் அல்ல நான். உன் அழகுதான் எனக்குப் பிடிக்கும் என்று அவளுக்கு எழுதினேனே என்பாய்! பார்க்கப் போனால் நீ முதலில் மூக்குக் கண்ணாடியைப் பற்றி அவளுக்கு எழுதிய கடிதத்தில் உன் பெயரையே போட்டுக் கொண்டிருந்தால் நான் இந்த வம்பில் மாட்டிக் கொண்டே இருந்திருக்க மாட்டேன்.''

அவன் இதைக் கூறியவுடன் என்னையும் மீறிக் கொண்டு என் நெஞ்சிலே ஆவேசம் மூண்டது. அதன் வேகத்தினால் குரல் கடுமையாகத் தொனிக்க, ''சீ! நீயும் ஒரு மனிதன் மாதிரி!'' என்று எரிந்து விழுந்து விட்டு ஆத்திரத்துடன் முகத்தை அப்பால் திருப்பி கொண்டேன்.

இதுதான் சமயம் என்று நினைத்தவன் போல் ஆனந்தன் ஓசைப் படாமல் அங்கிருந்து நழுவி விட்டான். எனக்கு அன்று வேலைக்குப் போக உற்சாகமில்லை. லீவு எழுதிப் போட்டு விடலாம் என்று முடிவு செய்து கொண்டு புத்தகமும் கையுமாக ஒரு நாற்காலியில் வந்து உட்கார்ந்தேன். 'சார் தபால்' என்ற குரல் கேட்டது? நான் எழுந்திருப்பதற்குள் இரண்டு தபால்கள் உள்ளே வந்து விழுந்தன. ஒரு கடிதம் எனக்கு அம்மா எழுதியது. இன்னொரு கடிதம் ஆனந்தனுக்குச் கருணா எழுதியது.

'....இந்தப் பெண் வீட்டாரின் அகம் பாவத்தை என்ன என்கிறாய்? உன்னைப் பண்ணிக் கொள்ள இஷ்டமில்லையாம் அந்தப் பெண்ணுக்கு! குழந்தை நாளைக் குக் கண்ணைக் காக்கிக் கொள்ள அவர்களுக்கு இஷ்டமில்லையாம். அடேயப்பா! குழந்தையைப் பார்க்கணுமே குழந்தையை! 'குதிர் மாதிரி வளர்ந்து காலேஜிலே படிக்கிற சாக்கில் ஏன் என்று அதட்டிக் கேட்க ஆளில்லாமல் கோட்டை ஹாஸ்டலில் தனியாக இருக்கிற பெண்ணாயிற்றே. இதை நம்பி இறங்கலாமா?' என்று நான் எவ்வளவோ பயந்தேன். நல்லவேளை! தலைக்கு வந்தது தலைப்பாகையோடு ஒழிந்தது!''

அம்மா எழுதியிருந்த கடிதத்தைப் படித்து முடித்ததுதான் தாமதம்; எனக்குத் தேகத்தில் தீப்பிடித்துக்கொண்டது போல் அடிவயிற்றுக்குள் ஓர் எரிச்சல்! மனத்தினுள் இதுவரையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த ஆண்மை



சிரிக்காதே!

அட, பாவமே!

சீதோஷ்ண நிலை அறிவிப்பாளர் சொன்னபடி சீதோஷ்ண நிலை இல்லாததை அறிந்து ஜனங்கள் மிகவும் ஏமாந்து போனார்கள். இதைத் தெரிந்து கொண்ட சீதோஷ்ணநிலை அறிவிப்பாளர் ராஜிநாமா கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சென்று விட்டார். அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது இதுதான்: ''இந்த ஊர் சீதோஷ்ண நிலை எனக்கு ஒத்து வராததால் நான் வேலையை ராஜிநாமா செய்து விடுகிறேன்!''

பேச்சு ஆரம்பம்!

ஜெயில் கைதிகளைப் பார்வையிட ஒரு கவர்னர் சென்றிருந்தார். கைதிகள் கூட்டத்துக்கு மத்தியில் பேசச் சொன்னதின் பேரில் அவர் பேச ஆரம்பித்தார்:

''திருடர்களே, திருடிகளே, அயோக்கியர்களே, கொலைக் குற்றவாளிகளே மோசக்காரர்களே, மோசக்காரிகளே...''

முன்னேற்றம்!

''எப்படி சார் உங்க வியாபாரம் நடக்கிறது?''

''இப்பத்தான் நன்னா முன்னேறிண்டு இருக்கு!''

''பேஷ் அப்படியா!''

''ஆமாம்! இந்த வருஷம் 20 000 ரூபாய்தான் நஷ்டம்!''

''முன்னேறிண்டு இருக்கு என்று சொன்னீர் 20,000 நஷ்டம் என்கிறீரே!''

''ஆமாம்! போன வருஷம் 50,000 நஷ்டம் அதற்கு முந்தின வருஷம் 1.00,000 நஷ்டம் சார்! அதைப்பார்த்தா இப்ப முன்னேற்றந்தானே!''

மகா கோபம்!

ஒரு வீட்டில் விருந்தாளிகளாக இருக்க ஒருவர் குடும்பத்துடன் ஊருக்குப் போனார். போகும்போது தம் குடும்பத்தினருக்கு அவர் எச்சரிக்கை செய்தார்:

''நாம் தங்கப் போகும் வீட்டுக்காரர் ஹாஸ்யமாகப் பேசிக் கொண்டிருப்பார். எல்லோரும் அதற்குச் சிரித்துக்கொண்டே இருக்கணும். அப்படி இல்லேன்னு அவர் மகா கோபக்காரர். எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வார். தம் ஹாஸ்யங்களுக்குச் சிரிக்கலேன்னு அவர் அடிக்க வந்து விடுவார்!''

பாட்டியின் கவலை!

சில வருடங்கள் கழித்து ஒருவரைப் பார்க்க வந்த பாட்டி: ''ஏண்டா, சிவராமா! நீ ரொம்ப உடம்பு சரியில்லாமல் இருந்து சாகக் கிடந்தாயே, அப்புறம் நீ பிழைத்தாயோ!''

இடீரென்று விழித்துக் கொண்டு குமுறியது! இவ்வளவு உதாசீனத்துக்கு ஏதாவது காரணம் இருக்குமானால் அது என்னவாக இருக்கும்? மனதார ஒப்பி ஆர்வத்தோடு மாலையிட முன்வந்த என்னை ஏன் அவள் நிராகரித்து விட்டாள்?

நினைக்க நினைக்கச் சற்று முன் நான் படித்ததையே நம்ப முடியாத அளவுக்கு என் அறிவு குழம்பியது. மறுபடியும் கடிதத்தின் மீது கண்ணோட்டம் செலுத்தினேன். கோட்டை....காலேஜ்....ஹாஸ்டல் — இந்த வார்த்தைகள் என் கவனத்தைக் கவர்ந்தன.

ஆமாம். இவளும் கருணாவைப் போலத் திருச்சியிலே ஹாஸ்டலில் இருந்து கொண்டு கல்லூரியில் படிக்கும் மாணவி என்று தெரிகிறதே! ஆனால் இவளுக்கும் அவளுக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்?

என் போன்ற ஒருவனைக் கைப்பிடிக்கப் பெண் என்று பிறந்து விட்ட ஓர் உரிமையைத் தவிர வேறு தகுதி எதுவும் வாய்க்கப் பெறாதவளாக இருந்தும் அவளுக்கு வாழ்வளிக்க வந்தவனை மறுக்கும் இவள் எங்கே! உல்லாசம்தான் வாலிபத்தின் ஒரே லட்சியம் என்ற கொள்கைக்காரன் மாதிரி உலக சுகதுக்கங்களை எள்ளளவும் உணராமல் கும்மாளம் அடித்து வந்த ஆனந்தனைக் கூடக் கடைசியில் அவர்கள் சந்தித்துக் கொள்ளும் வரையிலாவது லட்சிய ரீதியில் சிந்திக்கச் செய்த அவள் எங்கே?

இவ்வாறு எண்ணினேனோ இல்லையோ, கருணாவினிடம் எனக்குக் கனிவு பிறந்து உள்ளத்தைத் தொட்டது. பாவம், அந்தப் பெண்! விளையாட்டுக்கும், விபரீதத்துக்கும் வித்தியாசம் உணராத ஆண் மனத்தை நம்பி எப்படி ஏமாற்றப்பட்டு விட்டாள்!

ஆவலை அதற்குமேல் என்னால் அடக்க முடியவில்லை. கருணா ஆனந்தனுக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பிரித்துப் படிக்கலுற்றேன்.

''....முன்பே உங்களுக்குத் தெரியும், நம் காதலைப் பற்றி; நான் இன்னும் என் அப்பா அம்மாவுக்குத் தெரிவிக்கவில்லை என்று. ஆகையால் என் வீட்டில் எனக்கென்று மாப்பிள்ளை வேட்டை நடைபெறுவது முற்றுப்பெறவில்லை. சென்ற ஞாயிற்றுக்கிழமை வாராந்திரக் கல்லூரி விடுமுறையைக் கழிக்க நான் வழக்கம் போல் என் பெற்றோர்களுடன் தங்கச் சென்றிருந்தேனல்லவா....''

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது!

நான் பெண் பார்க்கப் போயிருந்த ஊரின் பெயரையே குறிப்பிடுகிறாளே! பிரஸ்தாப தினம் கூட ஒன்றாக இருக்கிறதே! தடுமாற்றத்துடன் மேலே படித்தேன்.

''அன்றைக்கு ஒரு வரன் எங்கள் வீட்டுக்கு விஜயம் செய்ய ஏற்பாடாகி இருந்தது. சென்னையில் உத்தியோகம் வகிப்பவராம் அவர். நல்ல குணம் படைத்தவராகத் தோன்றுகிறது. ஏனென்றால் இதுவரை என்னைப் பெண் பார்த்த மற்ற நாலைந்து பிள்ளை வீட்டார் 'ஊருக்குப் போய் எழுதுகிறோம்' என்று சொல்லிச் சென்று பிறகு மரியாதைக்குக் கூட ஒரு வரி எழுதாமல் இருந்து விட்டதைப் போல் அல்லாமல் உடனுக்குடன் கடிதம் போட்டிருக்கிறார்கள். இதிலே ஆச்சரியம் என்னவென்றால், அவர்கள் பிள்ளைக்கு என்னைப் பிடித்து விட்டதாம்! தேதி எப்போது வைத்துக் கொள்வது என்று கேட்டு அவசரத் தபால் வந்திருப்பதாக அம்மா ஹாஸ்டலுக்குத் தகவல் கொடுத்து அனுப்பினாள்.

''அடடா, எவ்வளவு அருமையான சந்தர்ப்பம்! என் வாழ்க்கையிலும் ஒரு நாள் இது நடக்குமா என்று நான் ஆசையுடன் எதிர்பார்த்த மகத்தான சம்பவம். ஆனால் கடைசியில் இப்போதுதானா நிகழவேண்டும்! நான்தான் ஏற்கனவே உங்களுக்கு உள்ளத்தில் அடிமைப் பட்டவளாகி விட்டேனே! ஆகையால் எனக்கு அவரைப் பிடிக்கவில்லை என்று மட்டும் சுருக்கமாக அம்மாவுக்குப் பதில் வரைந்து விட்டேன்!''

அட ஆண்டவா!'

வாய் விட்டுப் பிரலாபித்தன என் உதடுகள்! இதென்ன விபரீதம்! என்ன காரியம் செய்து விட்டாள் கருணா! அவசரப்பட்டு அநியாயமாய்த் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டு விட்டாளே! மண் குதிரையை நம்புவது போல் அந்த ஆனந்தனை நம்பி நல்ல வரனை இப்படி வேண்டாம் என்று கூறுகிறாளே! நான் பார்த்து விட்டு வந்தேனே அந்தப் பெண்ணோ காரணமே இல்லாமல் என்னைப் பிடிக்கவில்லை என்று விட்டாள். இவர்களுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?

நான் துணுக்குற்று வியப்பினால் என்னையே வினவிக் கொண்டேன்! முதலில் மெள்ள வெறும் குறுகுறுப்பாகத் தொடங்கிய ஒரு உணர்ச்சி நொடிப் போதிற்குள் பெரும் திகைப்பாகத் திரண்டெழுந்து என்னைத் திணற அடித்தது. இடையில் எவ்வாறோ திடீரென்று என் எண்ணத்தில் கருணாவின் மூக்குக் கண்ணாடி தோன்றவே, பரபரப்புடன் சிந்தனையை முடுக்கி அன்று நான் பார்த்து விட்டு வந்த பெண்ணின் முகத்தை நினைவுப் படுத்திக் கொண்டேன். ஆனால் கருணாவைப் போல் அவள் மூக்குக் கண்ணாடி அணிந்திருக்கவில்லை என்பது ஞாபகம் வந்த பிறகும் என் கலவரம் மட்டும் ஏனோ அடங்கவில்லை. நெஞ்சு படபடக்கக் கடிதத்தின் மீது பார்வையைத் திருப்பினேன்.

ஆனந்தன் காதலி தொடர்ந்தாள்:

''என் பதில் அம்மாவைத்தான் பாவம், ரொம்பவும் ஏமாற்றிவிடும். காரணம் என்று குறிப்பாக ஏதாகிலும் கூறித் தட்டிக் கழிக்கவும் வழியில்லை. அதற்கு அவர் முகத்தை நன்றாகப் பார்த்திருந்தாலாவது 'அது கோளாறு இது கோளாறு' என்று சொல்லி அம்மாவை நான் சமாதானப் படுத்துவேன். ஆனால் வெறும் கண்ணால் பார்த்தால் எனக்குத்தான் ஒன்றும் சரிவரப் புலப்படாதே; அன்றைக்கென்று பாருங்கள், புறப்படும் அவசரத்தில் திருச்சியிலேயே மறந்து வைத்து விட்டு வந்திருந்தேன், இந்தப் பாழும் மூக்குக் கண்ணாடியை வேறு!....''

'என்ன! மூக்குக் கண்ணாடியையா? மறந்து வந்திருந்தாளா....'

எனக்கு மூச்சு முட்டியது! கடிதமும் கையிலிருந்து தானாக நழுவிக் கீழே விழுந்தது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10
Managing Editor, T. Sadasivam.



விதை விதைத்தால்...

உலைபோலே காயும் வெய்யிலிலெல்லாம் — ஏரை
தலைமேலே தாங்கி உழுகின்றனரே! உழல்கின்றனரே!
நிலமீதே ஏரும் கலப்பையுமேந்தி — ஏரை
சலியாமல் நாளும் உழுகின்றனரே! உழைக்கின்றனரே!

விதையெல்லாம் செடியாய்ப் பூவாய்மாறும் — ஆமாம்!
விளையாதோ அதிலே காயும் கனியும்! நாளையதினமே!
இந்நாளில் புரியும் முயற்சிகளாலே — சிறந்தே
இன்னல்கள் குறையும் இன்பம்மலரும் நாளையவாழ்வாய்!

இன்று,— சென்ற பல காலம் போலவே இந்துஸ்தான் லீவர் தயாரிப்புக்கள் வீடுதோறும் பரிசுத்தம் பரவ, ஒளி துலங்க, இன்பமிலங்கத் துணைபுரிகின்றன...

நாளை,— நாளொரு மேனியாக வளரும் நல்வாழ்வு வேட்கையை யொட்டிப் புதுப் புது எண்ணங்கள், புதுப் புதுப் பண்டங்களோடு சிறந்த பணி புரிந்திடச் சித்தமாயிருக்கிறோம்...

இன்றும், என்றும்... இல்லம் தோறும் நல்வாழ்வளிப்பது இந்துஸ்தான் லீவர் பணி

PR.5-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon